ISSN:2961-S194

# அவரி - 04

ஆற்றலுள்ள பெண்களின் இரண்டாவது தேசிய மாநாட்டிற்கான விஷேட சஞ்சிகை

2022 செப்டம்பர் - டிசம்பர்

VOLUME - 2

கதிர் - 4



WITH BEST COMPLIMENTS FROM:

# NEW EASTERN TRADERS

**Importers and exporters, Wholesale dealers, Commission Agent and General rice merchant**



🏢 - **No. 53,Old Moor Street, Colombo 12**

📞 - **+94112399277**
**+94112332377**

## அவரி 4 ஆசிரியர் குழு.

**நிர்வாக ஆசிரியர்.**
சம்மாந்துறை மஷூறா.

**சஞ்சிகை ஆசிரியர்.**
ஷாமென் நிஸாம்டீன்.
கட்டுகஸ்தோட்டை.

**சரவை நோக்கு.**
என்.எம். ஆரிபா.
ஏறாவூர்.

**செயற் குழு.**
லைலா அக்ஷியா.
மொரட்டுவ.

ஜெஸீமா முஜீப்.
மருதமுனை.

வஃபீரா வஃபி.
கொழும்பு.

எம்.பி.பர்சானா.
நிந்தவூர்.

றிப்கா அன்சார்.
சாய்ந்தமருது.

ஸஹ்லா மில்பர்.
மக்கொனை.

அவரி,
ஆற்றலுள்ள பெண்களின் இரண்டாவது தேசிய
மாநாட்டிற்கான விஷேட சஞ்சிகை கதிர் -4

2022. செப்டம்பர் - டிசம்பர்
மஷூறா மஹால்
4/C/5 லேக் வீதி
மருதமுனை – 4
இலங்கை

0765363435
0770696559
0672261044

**THE AVARY**
**A JOURNAL PUBLISHED BY**
**SRI LANKA PEN CLUB**

**issn: issn 2961-5194**

**Barcode : 0772961519006**

## உள்ளே...

| கவிதை | பக்கம் |
|---|---|
| ➢ நுஸ்ரா ஹாசீம் | 06 |
| ➢ யாழ் ரமீஸா யாசீன் | 17 |
| ➢ வபீரா வ.்.பி | 19 |
| ➢ ரிப்கா நிந்தவூர் | 18 |
| ➢ மக்கொனையூராள் | 17 |
| ➢ ஜனீரா ஜலீல் | 20 |
| ➢ சதீகா ரஸ்லி | 20 |
| ➢ ரினோஸியா அப்துல் ஸலாம் | 20 |
| ➢ ரம்ஸானா சமீல் | 22 |
| ➢ ரமீனா ஐயூப் | 27 |
| ➢ சம்சுதீன் சிபானா | 93 |
| ➢ லரீபா பதுர்தீன் | 33 |
| ➢ சப்னா லதீப் | 57 |
| ➢ இஸ்மாலிகா ராஜா | 84 |
| ➢ ஷப்ரா இல்முத்தீன் | 83 |
| ➢ மரீனா இல்யாஸ் ஷாபி | 58 |
| ➢ மருதமுனை ஸுபா | 58 |
| ➢ ஜெஸீமா முஜீப் | 89 |
| ➢ ஷர்ஜிலா பர்வீன் யாகூப் | 93 |
| **கட்டுரை** | |
| ➢ ஹாஜரா கலிலுர்ரஹ்மான் | 01 |
| ➢ மஹ்மூதா ஏ. ரஹ்மான் | 04 |
| ➢ மரீனா இல்யாஸ் ஷாபி | 14 |
| ➢ லைலா அக்ஷியா | 23 |
| ➢ அஜீரா கலீல்தீன் | 28 |
| ➢ மர்ளியா சக்காப் | 46 |
| ➢ Dr. ஜலீலா முஸம்மில் | 49 |
| ➢ ரிப்கா அன்சார் | 43 |
| ➢ கமர்ஜான் பீபீ | 55 |
| ➢ பர்சானா MP | 60 |
| ➢ மஹீஷா பானு | 85 |
| ➢ முஹம்மத் மஜீத் மஷ்ரூபா | 11 |
| **சிறுகதை** | |
| ➢ முப்லிஹா பிர்தவ்ஸ் | 13 |
| ➢ மும்தாஜ் பேகம் ஹமீட் | 18 |
| ➢ ஹகீமா அமீனுதீன் | 26 |
| ➢ ஜெஸ்மின் றமீஸ் | 75 |
| ➢ ருஷ்தா- காத்தான்குடி | 91 |
| ➢ ஜுவைரியா- தம்பாளை | 89 |
| **மடல்** | |
| ➢ ஹுமாதா ஏ கப்பார் | 21 |
| **செவ்வி** | |
| ➢ என்.எம் ஆரிபா | 7 & 54 |
| ➢ ஷாமென் நிஸாம்டீன் | 77 |
| **சித்திரம்** | |
| ➢ ஹகீமா அமீனுதீன் | 59 |
| ➢ றிபாஸ் றிஸ்லா | 65 |
| **பத்தி** | |
| ➢ மஷூரா சுஹூறுத்தீன் | 90 |
| **நாட்டார் பாடல்** | |
| ➢ ஏரூர் ஜிப்ரியா | 88 |
| **விமர்சனம்** | |
| ➢ அஸீஸ் எம். பாயிஸ் | 66 |
| **மகுடம் சூடிய ஆளுமைகள்** | |
| ➢ ஷாமென் நிஸாம்டீன் | 35 |

## நிர்வாக ஆசிரியரிடமிருந்து...

அவரி இடையறாது முகிழ்க்கட்டும்.

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான எமது Srilanka Pen club இன் பெண்களுக்கான ஒரு களமும் தளமுமாக அவரியிருக்கிறது.இந்த நான்காவது வெளியீடு இவ்வாண்டின் இறுதி மலர்.இவ்வருட மகாநாட்டை முன்னிட்டு வன்பிரதியாகவும் வெளிவருகிறது.

ஒவ்வொரு வெளியீட்டிற்கும் வெவ்வேறு ஆசிரியர்களை நியமித்து அவர்களது ஆற்றலுக்கு களமமைக்கிறேன்.இவ்விதழின் ஆசிரியை ஷாமென் நிஸாம்டீன்.எங்கள் அமைப்பின் துணைச் செயலாளரும்கூட.சுறுசுறுப்பும் ஏற்கின்ற காரியத்தை பெருவிருப்புடன் செவ்வனே முடிக்கின்ற சிலருள் இவரும் ஒருவர்.

சென்ற முறைபோலவே இம்முறையும் ஆக்கங்களின் தலைப்புகளை தீர்மானித்து ஆக்கங்கங்களை கோரச் செய்திருந்தேன்.கோரப்பட்ட காலத்திற்குள் ஆக்கங்களை பெறுவதில் வெகுசிரமங்களிருந்தன.சஞ்சிகைக்குழுவின் ஒத்துழைப்பையும் தாண்டி ஷாமெனின் அயராத உழைப்பிருக்கிறது.இந்தத் துறையிலிருப்பவர்களுக்கு அந்த சவால்கள் புரியும்.நிதி நிலமைகளால் எண்ணியவாறு ஈடேறாதிருந்தாலும் நிச்சயம் உங்கள் கரங்களில் கனதியோடு தவழும் என்பதில் ஐயமில்லை.

**ஆற்றலுள்ள சிறந்த குடும்பப் பெண்களே சமூகத்தின் வரம்.** என்பது எமது இவ்வருட மகாநாட்டின் தொனிப்பொருள்.மகாநாட்டின் விசேட வெளியீடாக அவரி அமைவது இரட்டிப்பு மகிழ்ச்சி.ஆற்றலுள்ள பெண்களுக்கு களங்களமைப்பதும் கைதூக்கி விடுவதுமே எமது அமைப்பின் நோக்கமாகும்.
பல மூத்த பெண் எழுத்தாளர்கள் எழுத்துலகிலிருந்து காணாமல் போயிருந்தனர்.அவர்களை தேடிக் கொண்டு வந்து எமது அமைப்பின் மூலம் மீளவும் பேனாபிடிக்க வைத்திருக்கிறேன்.தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையறியாது திணறிக் கொண்டிருந்த பெண்களை படைப்புலகில் சஞ்சரிக்கச் செய்திருக்கிறேன்.எழுதும் ஆர்வத்தோடிருந்த புதியவர்களை தூண்டிவிட்டிருக்கிறேன்.இதுவே இவ்வமைப்பை நான் நிறுவியதின் நோக்கமும் ஆகும்.


மஷூறா சுஹூருத்தீன்

எனது எண்ணம் செயற்பட முழுமுதல் காரணமான இறைவனைப் போற்றுகிறேன்.செயற்படுத்த ஒத்துழைத்து உழைத்த நிர்வாக குழுவினர் மற்றும் வாட்சப் குழும நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை மற்றும் உறுப்பினர்களை நினைவு கூறுவதில் பேருவகையடைகிறேன்.

**மீண்டும் சந்திப்போம்.**
**இலக்கிய வித்தகர்**

**சம்மாந்துறை மஷூறா JP நிர்வாக ஆசிரியர் அவரி.**

## இதழாசிரியரிடமிருந்து...

ஸ்ரீலங்கா பென் கிளப்பின் காலாண்டு சஞ்சிகையான அவரி 4 சிறப்பு மலரில் சஞ்சிகை ஆசிரியராக நான் தேர்வு செய்யப்பட்டதில் அளவில்லா மகிழ்ச்சி. ஆற்றலுள்ள சிறந்த குடும்பப் பெண்களே சமூகத்தின் வரம் என்ற தொனிப் பொருளோடு இவ்வருட மாநாட்டில் அவரி 4 சஞ்சிகையை மிகக் கோலாகலமாக வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி. எமது பென் கிளப் எழுத்து துறை மட்டுமின்றி பல அழகிய கலைகளுக்கும் இடம் கொடுக்கும் ஒரு களமாகவும் பயிற்சிபட்டறையாகவும்இருக்கிறது என்றால் மிகையில்லை.

எமது தனித்துவத்தை வெளிக்காட்ட எமக்கென சஞ்சிகைஒன்று வேண்டுமென எமது ஸ்தாபர் மஷூறா சுஹூறுத்தீன் அவர்களின் ஆலோசனைக்கு அமைய தொடங்கப்பட்டது தான் அவரி சஞ்சிகை. ஒரு தாய் தன் பிள்ளைகளின் திறமைகளை அறிவார். அதுபோலவே தான் எமது ஸ்தாபகர் இக்குழுவில் உள்ளவர்களின் திறமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சிகளை பிரித்துக் கொடுப்பதில் வல்லவர். அவ்வகையில் முதலாவதும், நான்காவதும் அவரி சஞ்சிகைக்குரிய சஞ்சிகை ஆசிரியராக பணிபுரியக்கிடைத்தது எனது **அதிர்ஷ்டம்** என்றே கூற வேண்டும். இம்முறை எம்முடன் பயணம் செய்யும் ஆளுமைகளில் ஐவரை தெரிவு செய்து அவர்களுக்கு மகுடம் சூட்டி கௌரவிக்க கிடைத்ததும் எமது **அதிர்ஷ்டம்** என்று தான் கூற வேண்டும்.

இலங்கையில் நாற்றிசைகளிலும் கடல் கடந்து இந்திய படைப்பாளிகளும்,மற்றும் அதிபர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், நகர சபை உறுப்பினர்கள்,மருத்துவ மாது, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவள ஆலோசகர்கள் என பலவாறாக உள்ளவர்கள் இந்த அமைப்பின் கீழ் கவிதாயினிகள் என்ற ஒரே அடைமொழியில் இணைந்திருப்பது சிறப்பம்சம்.அதுமட்டுமல்ல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பட்டை தீட்டப்பட்டும் வருகிறார்கள் என்பது தான் நிஜம். ஒரு கை எப்போதும் ஓசை எழுப்பாது என்பதற்கு அமைய அவரி 4 இன் வெற்றிக்கு எமது ஸ்தாபகர் தொடங்கி உறுப்பினர்களின் பங்களிப்பும் முழுதாகவே கிடைத்தன. அதிலும் எனது வலது கரமாக செயல்பட்ட எமது உப தலைவி என்.எம். ஆரிபாவிற்கு எனது பிரத்தியேக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் அவரி 4 இன் குறை நிறைகளை எமக்கு தெரிவிக்க தயங்க வேண்டாம்.



நன்றி.

**திருமதி. ஷாமென் நிஸாம்டீன்.**
**சஞ்சிகையாசிரியர்**
**(இணைச்செயலாளர் - Sri Lanka Pen club)**

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி

சகோதரி மஷூறா சுஹூறுதீன் அவர்களின் தலைமையில் கடந்த இரண்டு வருடங்களாக இயங்கி வரும் Sri Lanka Pen Club என்ற அமைப்பு இலக்கிய பரப்பில் செயற்படும் பல நூறு அமைப்புகளுக்கிடையே மிகவும் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அதன் இலக்குகள், கட்டமைப்பு, செயலாற்றுமுறை, பொறுப்பு பங்கிடுகை என்பன மிகவும் வித்தியாசமானவை.

Sri Lanka Pen Club நடத்துகின்ற மாநாடுகள் அவ்வமைப்பு வெளியிடும் அவரி சஞ்சிகை தொடர்களின் தொகுப்பு முறை என்பன இதனை துல்லியமாக தெளிவு படுத்துகின்றன. ஒரு சிரேஸ்ட எழுத்தாளராக இருந்து கொண்டு இளமைக்கும் ஆற்றலுக்கும் முக்கியம் கொடுத்து எல்லோரையும் உள்வாங்கி முன்னெடுத்து செல்லும் திறமை மஷூறாஅவர்களது ஆளுமையின் வியாபிப்பு எனலாம். மறு விதத்தில், அவரைச் சுற்றி இயங்குபவர்களுக்கு அது ஒரு பெரும் பலமும் ஆற்றுகை வழிப்படுத்தலும் ஆகும்.

சுயமுயற்சியில் எழுத்துக்கள் மூலம் தங்களுக்கென தனித்துவமான அடையாளங்களை நிறுவிக் கொண்டவர்களும் இந்த அமைப்பில் உள்ளனர். அவர்கள் சில சிறந்த இலக்கிய படைப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளனர். அந்த வகையில் அவர்களின் பங்கு பற்றுகையும் பங்களிப்பும் ஒருவருக்கொருவர் வலுவூட்டி செழுமையாக்கும் இயல்பு கொண்டவை.

கூட்டுறவு முறை சார்ந்து உரிமைகளை முன்னெடுத்து செல்வதும் அதற்கான கருத்தாடல்களை செய்வதும், உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கு மிடையே உள்ள உறவை அல்லது சமநிலையை அழுத்துவதும் இன்றைய காலத்தின் தேவையாகும். சுயம் என்பதற்கும் சமூகம் என்பதற்கும் இடையே யான தொடர்பாடல் இதில் வலுப் பெறுகிறது. பல்தன்மை கொண்ட சமூகம் ஒன்றிற்கு சுயம்கள் ஊட்டமளிப்பது போல், பல சுயம்களின் உருவாக்கத்துக்கு பல்தன்மை கொண்ட சமூகம் அத்திவார மிடுவதுண்டு. இங்கு சுயம் என்ற சொல் சுய நலம் என்று பொருள் படுத்தப்படும் ஒன்றல்ல.

மிக முக்கியமாக, அத்தகைய கூட்டுறவு முறையும் அது சாத்தியப் படுத்தும் தொடர்பாடலும் சுய மற்றும் சமூக வாழ்வில் தாக்கம் செலுத்தும் நடப்புகளையும் அவற்றின் அடிப்படைக் காரணிகளையும் பற்றிய தெளிவான புரிதலை பெற உதவுவதுடன், அவற்றை இலக்கிய படைப்புகளின் கருப்பொருட்களாக மிகுந்த கற்பனா வளத்துடன் கையாள்வதற்கும் வழி வகுக்கின்றன. நாம் வாழும் பூகோள கிராமத்தில் தூரமும் நேர வித்தியாசமும் ஒரு பொருட்டாக அமைவதில்லை. எங்கோ நிகழும் சம்பவம் இது, நம் மீது தாக்கம் ஏற்படுத்த முடியாது என்று கூற எதுவும் இல்லை. உண்மையில் நம்மைப் பாதிக்கும் பல விடயங்களுக்கான அடிப்படை காரணிகள் நமக்கு அண்மிய சூழலில் எப்போதும் அமைந்து விடுவதில்லை. இலக்கிய அமைப்புக்கள் நெருங்கிய தொடர்பாடலுக்கும் ஆழமான வாசிப்புக்கும் வழிகோல வேண்டிய தேவையுள்ளது. இத்தகைய தேடலே இதுவரை பரிச்சயப்படாத புதிய கருப்பொருட்கள் உருவாக்க ஏதுவாக அமையும்.

ஒட்டு மொத்தமாக, Sri Lanka Pen Club மேற்கூறிய இயல்புகளை வெளிப்படுத்தும் முயற்சியின் பிரதிபலிப்பாகவே தோன்றுகின்றது. இது வரவேற்கப்பட வேண்டியதும் மேலும் சம்பாசனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதுமான ஒரு வளர்ச்சியாகும்.



ஏ.எல்.ஏ. அஸீஸ்

இதன் பின்னணியிலேயே, நீங்கள் அழைத்ததற்கு ஏற்ப, நான் முன்வைக்க எண்ணியுள்ள கருத்துரையும் அதைத் தொடர்ந்த கலந்துரையாடலும் அமைய வேண்டுமென அவாவுறுகிறேன்.

இன்'ா அல்லாஹ், டிசம்பர் 24 ஆம் திகதி யன்று உங்கள் எல்லோரையும் சந்திக்க விரும்பிய வனாக,

**முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேலதிக செயலாளரும், இலங்கை தூதுவரும், ஜெனீவாவின் ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதியும்**

**(இலக்கிய பரப்பில்: எச் ஏ அஸீஸ், "ஐந்து கண்டங்களின் மண்" கவிதை தொகுப்பு - 2016)**

10th December 2022

# பெண் தலைமைத்துவத்தால் ஏற்படும் குடும்ப நெருக்கடிகள்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

"பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இழப்பில்லை காண் "
என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கமைய உடல் வலிமையில் மென்மை வாய்ந்தவர்கள் பெண்கள் என்று படைப்பின் யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் ஆண்களை விட மனவலிமையில் மேம்பட்டவர்கள் என்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் வாழ்வின் அத்தனை நெருக்கடிச் சூறாவளிகளையும் எதிர்கொண்டு, நாணலென வளைந்து நின்று, பிரச்சினைகளை எதிர்கொண்டு, முன்னேற்றம் கண்டு, வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகின்றார்கள்.பெண்கள் தலைமைத்துவமேற்று குடும்பங்களை வழிநடாத்துவதென்பது தற்காலத்தில் விதிக்கப்பட்ட—எழுதப்படாத விதியாகவே அமைந்து விட்டது....இன்னும் ஞாபகம் இருக்கிறது

கணவனை இழந்து விதவையான பெண்கள், நோய்வாய்ப்பட்டு இயலாத நிலையில் உள்ள கணவனை உடையவர்கள், விவாகரத்தான பெண்கள், தொழில் நிமித்தம் கணவன் தூரதேசங்களுக்குச் சென்றதால் குடும்பப் பொறுப்பை தலைமேலேற்றவர்கள், கையாலாகாத கணவனை கட்டிக் கொண்டு பிரச்சினைகளை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வாழ்க்கை வண்டியை ஓட்டிக் கொண்டிருப்பவர்கள் என்று பெண்கள் குடும்பப் பொறுப்புகளை தன் தலைமேல் சுமந்து கொண்டு பிரச்சினைகளை எதிர்கொண்டு இன்று குடும்பங்கள் தோறும் பெண்கள் தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்று வலம் வருவதைக் காண முடிகின்றது.

உலகில் பெண்களால் சாத்தியப்படாத காரியங்கள் எதுவும் இல்லை என்றாலும், என்னாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் செயற்பட்ட போதும் ,பெண்களின் இயற்கை அமைப்பில் சில விடயங்கள் குறுக்கிட்டு அவர்களின் செயற்பாடுகளுக்கும் முன்னேற்றத்துக்கும் சாவுமணி அடிக்கத்தான் செய்கின்றன.

இந்த வகையில் இன்றைய சூழ்நிலையில் பெண் தலைமைத்துவங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளாக பின்வருவனவற்றைக் கருத முடியும்.

## பொருளாதார நெருக்கடிகள்

இன்றைய கால கட்டத்தில் கணவன் மனைவி என்று இருவருமே வருமானம் தேடினாலும் செலவீனங்களை ஈடுசெய்ய முடியாமல் இருக்கும் போது தனியே பெண் ஒருவரின் உழைப்பை நம்பி குடும்பத்தைக் கொண்டு செல்வது கடினமான விடயமாகும். அதுவும் பெயர் குறிப்பிடப்பட்டுச் சொல்லத் தக்க பதவியை அல்லது தொழில் வாய்ப்புக்களைப் பெற்றவர்களைத் தவிர, நிரந்தரமான வருமான வழி இல்லாமல் ஏழ்மை நிலையில் அன்றாடம் வயிற்றைக் கழுவ முனைபவர்கள் மூன்று வேளையும் உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூட அல்லாட வேண்டியிருப்பதால் ஏனைய தேவைகளை ஈடுசெய்வதில் மாபெரும் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

## பாலியல் நெருக்கடிகள்



இத்தகைய பெண்கள் மிகவும் கவலைப்படுகின்ற விடயமே பாலியல் நெருக்கடியாகும். வேலி தாண்டிப் பயிரினங்களை மேயும் கால்நடைகளைப் போல வேலி இல்லாத பயிர்கள் வீணாகக் கிடக்கிறதே என்ற அக்கறையில் என்னமோ அவர்களை மேய முனையும் சில அற்பப் புத்தியுள்ள மானிடக் கால் நடைகளால் இத்தகைய பெண்கள் மிகவும்
.

பாதிப்புக்குள்ளாகிறார்கள். வெளியில் பிரச்சினைகளை சொல்லிக் கொள்ள முடியாமல் புழுங்கித் தவிக்கிறார்கள். இவ்வேளையில் அவர்களின் முன்னேற்றம், ஆளுமை, தற்றுணிவு, தன்னம்பிக்கை எல்லாமே குழி தோண்டிப் புதைக்கப்பட்டுப் போய்விடுகின்றன. சில வேளைகளில் பிரச்சினைகள் இரட்டிப்பாகி விடுகின்றன.
பருவ நிலையில் உள்ள பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக் கூட கேள்விக் குறியாகி விடுகின்றது. தனக்கே பாதுகாப்பு இல்லாத நிலையில் தனது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என உணரும் போது பெண்கள் உள நெருக்கீடுகளுக்கு உள்ளாக வேண்டி ஏற்படுகின்றது.

## பிள்ளைகளுக்காக தனது சந்தோசங்களை தியாகம் செய்தல்.

இளம் வயதில் விவாக விடுதலை பெற்றவர்கள், இளம் விதவைகள் மறுமணம் செய்யும் சாதக நிலைமைகள் இருந்த போதும் தமது பிள்ளைகள், அவர்கள் எதிர்காலம் பற்றிய அதீத அக்கறை, பிள்ளைகள் புதிய கணவனால் புறக்கணிக்கப்பட்டு விடுவார்களோ என்ற பயம் போன்ற காரணங்களால் தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டு கற்பூரமாய் மெழுகுவர்த்தியாய் பிள்ளைகளுக்காய் கரைந்துருகி வாழ்ந்து தமது இளமை, ஆசை, எதிர்பார்ப்பு என்பவற்றை பிள்ளைகளுக்காகவும் தன்குடும்பத்துக்காகவும் தியாகம் செய்து விடுகிறார்கள்.

## வளர்ந்த பிள்ளைகளைப் வழிநடத்துவதில் காணப்படும் இடையூறுகள்

பிள்ளை வளர்ப்பு என்பது மிகப் பாரிய பொறுப்பாகும்.முன் கட்டிளமைப் பருவம், கட்டிளமைப் பருவத்திலேயே பிள்ளைகள் பல்வேறு புதிய புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள்.
உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஏற்படுகின்ற மாற்றங்கள், நண்பர்களின் ஆதிக்கம் எனபவற்றால் பெற்றவர்களுக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளிகள் அதிகரிக்கும் வேளையில் அவர்களை அனுசரித்துப் போவதில் உள்ள சிக்கல்கள் என்பவற்றால் இளம் பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தனித்துக் கையாள்வதில் மிகப்பாரிய மன அழுத்தங்களுக்குள்ளாகி விடுகிறார்கள். இன்றைய இளையோர் எதிர்நோக்கும் சவால்களை தந்தையரே எதிர்கொள்ளத்

தடுமாறும் வேளையில் தனித்து நிற்கும் பெண்கள் எதிர்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கிறது.

## சமூக வலைத்தளங்களுடான வன்முறைகள்




பெண்தலைமைத்துவக் குடும்பப் பெண்கள் சமூக ஊடகங்கள் ஊடாகப் பயணிக்கவோ, வேலை வாய்ப்பு, சமூக சேவை, இலக்கியப் பணிகளில் ஈடுபடும் வேளையில் அவர்களை வலைத்தளங்களூடாக துன்புறுத்தல், அச்சுறுத்தல், ஆபாசங்களாக சித்திரித்தல், உள்பெட்டியூடாக வந்து இம்சைகள் கொடுத்தல் போன்ற ஏகப்பட்ட நெருக்கடிகளை எதிர்நோக்குவதால் தனக்கும் தன் குடும்பத்திற்கும் பல சங்கடங்கள் ஏற்பட்டு வாழ்க்கையில் நிம்மதி இழந்து விரக்தியில் வாழவேண்டி ஏற்படுகின்றது.

## பிழையான சமூகக் கண்ணோட்டம்

அடுத்தவரை நோவினை செய்யவும், காயப்படுத்தவும் , இழிவு படுத்தவும் காலம் பார்த்துக் காத்துக் கிடக்கின்ற சமூகம் இத்தகைய பெண்களின் வளர்ச்சி, முன்னேற்றங்களைக் காணச் சகிக்காது அவர்கள் மீது சேறு பூச நினைத்து பிழையான கருத்துக்களை மற்றவர்கள் முன் பரப்பி விடுகின்றது. இதனால் பலர் சமூக நடவடிக்கைகளை விட்டும் தன்னை முடக்கி விடுவதுடன் உளநெருக்கடிக்கும் இவர்கள் ஆளாகிறார்கள்.
இவ்வாறு எத்தனையோ நெருக்கடிகளை அடுக்கிக் கொண்டே போக முடியும். வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் விமர்சனம் செய்யும் இவ் விசித்திர உலகத்தில் சமூகமாற்றங்களும் முன்னேற்றங்களும் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களும் வெறும் பேச்சளவில் மாத்திரமே இருக்கின்றன.
இவற்றை எல்லாம் தாண்டி எத்தனை விமர்சனங்கள், அடக்குமுறைகள், வன்முறைகளை எதிர்கொண்டாலும் ,கையறுநிலைக்கு ஆளாகி கலங்கிப் போய் விடாமல் தனித்துவமான தன்னம்பிக்கையுடன் சவால்களை முறியடித்து சாதனை படைக்கும் பெண்களே அனைத்து தலைமைத்துவப் பொறுப்புகளையும் ஏற்க தகுதியானவர்கள்.

## மிளகு

**1/2 கிராம் மிளகுப் பொடியுடன்**
**1 கிராம் வெல்லம் கலந்து**
**காலை, மாலை சாப்பிட்டு வர பீனிசம், தலைப்பாரம், தலை வலி தீரும்**

# சமூக வலைத்தளங்களால் வஞ்சிக்கப்படும் வனிதையர்...

எம்.சி.மஹ்மூதா ஏ றஹ்மான்
ஒலுவில்

விஞ்ஞானம் வளர்கிறது விந்தைகளும் குவிகிறது. உண்மைதான். ஆனால் மனித சமூகத்தில் இப்போது பிரச்சினைகளும் இன்னல்களும் நிறைந்து மனிதன் நிம்மதியற்றே வாழ்கிறான். ஆமாம் சமூக வலைத்தளங்களும் மனிதனும் இன்று ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து வாழும் அளவிற்கு அதன் தேவை மனிதனுக்குக் தேவை என்றாகி விட்டது. அதனால் மனித சமூகம் சீரழிந்து போய்க்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.



“பூகோள மயம்“ என்று உலகமே இன்று உள்ளங் கைக்குள் வந்து விட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள் என்னமோ உண்மைதான்.ஆனால் நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல் இந்த சமூக வலைத்தளங்களுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. நன்மை பயக்கும் பக்கமும் இருக்கிறது. அவ்வாறே தீமை பயக்கும் பக்கமும் இருக்கிறது. அதில் நன்மையை நாடிப்போகின்றவர்கள் குறைவாகவும் தீமையை நாடிப்போகின்றவர்கள் அதிகமாக இருப்பதும் தான் வேதனையான விடயம். தீமையை நாடிப்போய் சீரழிந்தவர்களில் இளைஞர்களும் யுவதிகளும் தான் அதிகம். வலைத்தளங்களை நல்ல முறையில் பயன்படுத்தி அதனால் வாழ்வில் முன்னேறியவர்களும் இல்லாமலில்லை.

என்றாலும் மொத்தத்தில் வனிதையர்கள் பெரும்பாலும் இந்த வலையத்தளங்களின் மாயைக்குள் அதிகம் சிக்கித்தவிக்கிறார்கள்.

கடந்த காலங்களில் கொரோனாவின் தாக்கம் இந்த உலகத்தையே ஒருபுறம் புரட்டிப் போட்டு விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் காலங்களில் பெரும்பாலும் ஒன்லைன் கல்வி முறை எமது நாட்டிலும் அமுல்படுத்தப்பட்டது நாம் யாவரும் அறிந்த விடயமே. ஆனால் அது பெரும்பாலும் மாணவர்களுக்கு வெற்றியளிக்கவில்லை என்பது ஆராய்ச்சிகளின் தற்போதய முடிவாகும். அது அவ்வாறிருக்க அதனால் இளம்பெண்கள் தவறான பாதைக்குப்போய் காதல் வலையில் சிக்கி தன் வாழ்வை சீரழித்தது மட்டுமல்லாது சிலர் உயிரைக்கூட மாய்த்திருக்கிறார்கள்.

கணவன் வெளிநாடு சென்ற அல்லது கணவனிடம் விவாகரத்துப் பெற்ற பெண்கள் வீட்டில் தனியாக குழந்தைகளுடன் இருக்கும் நேரங்களில் இச்சமூகவலைத்தளங்களினால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். பெண்கள் இயற்கையிலேயே மிருதுவான சுபாவமும் உடல் அமைப்பும் கொண்டவர்கள். இழகிய மனம் படைத்தவர்கள். எளிதில் ஏமாந்து விடக் கூடியவர்கள். அதனால் தான் என்னவோ அவர்களை பேதைகள் என்கிறார்கள். இதனைச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அநேகமான ஆண்கள் அவர்களை ஏமாற்றுகின்றனர். பாலியல் ரீதியாக மட்டுமல்லாமல் மிரட்டி

பணத்தையும் சூறையாடுகின்றனர். இதனால் திருமண வாழ்வை இழந்த பெண்களும் காதிக்கோடுகளில் ஏறி இறங்கும் பெண்களும் இன்று அதிகரித்து வருகின்றனர். விவாகரத்துகள் தினமும் அதிகரித்துக் கொண்டு செல்வதுடன் நாளொன்றுக்கு எட்டு அல்லது பத்து பேர் அளவில் இலங்கையில் தற்கொலை செய்து கொள்வதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இதற்கு எமது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் பஞ்சம் பட்டினியும் ஒரு முக்கிய காரணம் என்றாலும் அடுத்த இடத்தை இந்த சமூக வலைத்தளங்கள் எடுத்துக் கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தவறுதலாக வரும் ஒரு அழைப்பினால் வஞ்சிக்கப்பட்ட வனிதையர்கள் தான் இன்று அதிகம். அதுமட்டுமல்லாமல் மிகவும் வறுமையில் வாழும் ஒரு பெண் ஒரு ஆணிடம் உதவி கேட்டு ஒரு அழைப்பு எடுத்தால் அதனை வைத்து விரட்டி அவளை தன் வலைக்குள் சிக்கவைக்க முயற்சிப்பது , இவை வெளியில் வெளியானதும் வெட்கத்தில் அந்தப்பெண் வேறு வழி தெரியாமல் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அதே போன்று ஒன்லைனில் படிக்கும் மாணவிகளில் சிலர் இன்று கற்பிக்கப்படும் ஆசிரியர்களினாலேயே பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள். இவை இன்று உலகின் மூலைமுடுக்கெல்லாம் அரங்கேறிக்கொண்டிருக்கிறன.

இந்தியாவின் ஆந்திரா மாகாணத்திலுள்ள ஆசிபாவிலிருந்து இலங்கையின் அட்டுளுகமஆயிஷா வரைக்கும் நடந்த சம்பவங்கள் இதற்கு சாட்சியாகவுள்ளன. போதையோடு ஆபாசமான காட்சிகளைப்பார்ப்பதனால் காமம் தலைக்கேறுவதனாலயே இப்படி அசிங்கமான அருவருப்பான நிகழ்வுகள் எல்லாம் இன்று சர்வ சாதாரணமாக உலகில் நடந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் பெண்களின் இயற்கையான சுபாவம் அடுத்தது சமூக வலைத்தளங்கள் பற்றிய போதிய அறிவின்மை தான். இன்று பெண்கள் அறிவில் முன்னேறி உச்சத்தில் இருக்கிறார்கள். அகப்பை பிடித்த பெண்கள் இன்று ஆகாயத்தில் ராக்கட்டில் பறக்கிறார்கள். அவர்கள்தான் தெளிவில்லாத இந்த பாமர பெண்களுக்கும் இவற்றைப் பற்றிய தெளிவையும் அறிவையும் விழிப்பூட்ட வேண்டும். அடுத்து இளம் பெண்களின் கைகளில் சுதந்திரமாக இவற்றைப்புழங்க விடாமல் பெற்றோரும் பாதுகாவலர்களும் கண்காணிப்பில் இருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் ஒன்லைனில் படிப்பதானாலும் தனி அறையில் அவர்களிடம் அவற்றை ஒப்படைக்காமல் முன்விறாந்தையில் எல்லோர் முன்னிலையிலும் அவற்றை பயன்படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அடுத்து கணவர் வெளிநாடு சென்றதும் அனைத்து குடும்ப பொறுப்புக்களையும் குடும்ப பெண்கள் கையில் எடுப்பதனால் அநேகமான ஆண்களின் தொடர்புகள் ஏற்பட்டு சமூக வலைத்தளங்களினால் அது தொடர்கின்றன. இதனாலும் இன்று அதிகமான பெண்கள் சீரழிந்து கொண்டு வருகிறார்கள். இதனைக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் அவளின் மேல் கருணை கொண்டு வேலைகளைப் பங்கேற்க வேண்டும். அவர்களையும் கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் சில வேளைகளில் எல்லோருக்குமே தலை குனிவு ஏற்படலாம். எனவே பெண்கள் எல்லோரும் அறிவை கற்க வேண்டும். மனதில் உறுதியாக இருக்க வேண்டும். சிறு சிறு சலனங்களுக்கெல்லாம்

ஆண்களிடம் விலை போகாது தான் ஒரு பெண் அதுவும் ஒரு குடும்பத்திற்குப் பொறுப்பானவள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் பின்னால் ஒரு குடும்பமே பின் தொடர்கிறது. அவள் சீரழிந்தால் குடும்பம் சீரழிந்து, சமூகம் சீரழிந்து நாடு உலகம் என்று மொத்தத்தில் மனித சமூகமே சீரழிந்து விடும். ஒரு சமூகத்தின் அத்திவாரமே ஒரு பெண் தான். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனவே பிள்ளைகளை வழி நடத்தும் ஒரு பெண் புத்தி ஜீவியாக இருப்பதுடன் சமூக வலைத்தளங்களுக்கு அடிமைப்படுவதில் இருந்தும் விடுபட வேண்டும் அப்போதுதான் குடும்பமும் நாடு ம் முன்னேறும்.

---

## திப்பிலி

**வறுத்து பொடி செய்த**

**1ஃ2 கிராம்**

**திப்பிலி பொடியை**

**தேனில் கலந்து**

**காலை, மாலை**

**கொடுத்து வர,**

**தொண்டைக் கம்மல்,**

**வீக்கம்,**

**பசியின்மை,**

**தாது இழப்பு தீரும்.**

## இன்னும் ஞாபகம் இருக்கிறது

நுஸ்ரா ஹாஸீம்

மகனே வருடங்களுக்கு முன்பெல்லாம்
நீ விளையாடித் திரியும் இத் தெருவெல்லாம்
புழுதியடக்கிப் புதுத்தார் போடுவதாகச் சொன்னார்கள்

தேங்கிக் கிடக்கும் சாக்கடைக்கழிவுகளை
காணவே கிடைக்காதென்றார்கள்
நாற்றமும் நுளம்புகளும் இல்லையென
நாங்களும் நினைத்தோம்
ஓட்டு வீடுகளில் தான் எம் பிள்ளைகள்
பிறக்கும் என்றார்கள்
குடிசைக்குள் மழைத்துளிகளை
சிறைப்பிடிக்கும் பழுப்பு நிறச்சட்டி
அப்போது அது கரும்பச்சை நிறமாக
இருந்தது!

எங்கள் ஊருக்கும் பள்ளிக்கூடம் வரப் போகிறதாம்.
புத்தகப்பை நிறைய புதுப்புதுக் கனவுகள்
நிரப்பினோம்
பாதியிலே படிப்பை நிறுத்தியதில்
பதினாறில் நீ பிறந்தாய்

பக்கத்து ஊரிலிருக்கும் குடிநீர் நம்
வீட்டிற்கும் வருமாம்
சிறு குடங்களுக்கெல்லாம் விடுமுறை என
நம்பினோம்
எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது
மகனே..இப்படித்தான் வாக்களித்தார்கள்
அன்று வந்து போனவர்கள்
இவர்களும் இதையே தான் சொல்கிறார்கள்
பார்த்தாயா?





# வைத்தியர் ஜலீலா முஸம்மில் அவர்களுடன் சில நிமிடங்கள்....

**1. அஸ்ஸலாமு அலைக்கும் Dr ஜலீலா முஸம்மில் அவர்களே! நீங்கள் ஒரு வைத்தியராக இருக்கின்றீர்கள் இலக்கியத்துறையில் ஈடுபாடு வருவதற்கான காரணம் என்ன?**

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. சிறுவயதிலிருந்தே தமிழில் மிகவும் ஆர்வம் இருந்தது. தமிழ்ப் பாடம் என்றால் மிகவும் விருப்புடன் கற்றேன். கவிதைகள் ,கதைகள் வாசிப்பதிலும் அந்தக் காலத்தில் அவ்வளவு ஆசை. பள்ளிக்காலம் தொட்டு கவிதை எழுதுவதும் வழக்கமாக இருந்தது. சிறுபராயம் முதலே இலக்கியத்தில் மோகம் கொண்டவளாக இருக்கிறேன். தொழில் வேறு துறையில் என்றாலும் அடிமனதில் ஆழப் பதிந்துவிட்ட தமிழை ஆராதிக்கும் வண்ணத்தில் சிறிது எழுத ஆரம்பித்துள்ளேன்.

**2. எவ்வளவு காலமாக எழுதி வருகின்றீர்கள்?**

தரம் 8,9 இலேயே எழுத ஆரம்பித்து விட்டேன். ஆயினும் படிப்பிலே கூடுதல் கவனம் செலுத்தியமையால் எழுத்துத் துறையில் மிளிர முடியவில்லை. கடந்த இரு வருடங்களாகத்தான் முகநூல் பத்திரிகைகள் வாட்ஸ் அப் குழுக்கள் போன்றவற்றில் எழுதி வருகிறேன். அதற்கான களம் இப்போதுதான் கிடைத்திருக்கிறது.

**3. நீங்கள் எமது சிறி லங்கா பெண் கிளப்பில் இணைந்து கொண்டது எப்போது, யாரின் தூண்டுதலால் இணைந்தீர்கள்?**

அது ஒரு சுவாரசியமான சம்பவம். உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆனந்தம் அடைகிறேன். ஒரு நாள் நான் என்னுடைய தனியார் மருத்துவ நிலையத்தில்

நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அங்கு சிகிச்சை பெற வந்திருந்த ஒரு பெண்மணி சிகிச்சை பெற்றதன் பின்னர் என்னைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். அதேபோன்று நானும் அவர்களைப் பற்றி விசாரித்தேன். அந்த நேரத்தில் அவர் கவிதை, கட்டுரை போன்றவை எழுதி வருவதாகவும் இலக்கியத்துறையில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்கள். அந்த நேரத்தில் நானும் என் உள்ளக்கிடக்கையை அதாவது கவிதை எழுதுவதும் வாசிப்பதும் எனக்கு மிகவும் விருப்பமான விடயங்கள் என்று அவரிடம் தெரிவித்தேன். அந்த நாள் முதல் எங்களுடைய நட்பு வளரத் தொடங்கியது. பின்னாளில் அவர் எனது பேரன்பின் நட்புக்கும் மரியாதைக்கும் உரியவராக மாறினார். வத்தளை , ஹுனுப்பிட்டிய கமர்ஜான் பீவி அவர்கள்தான் அந்தப் பெண்மணி என்று சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். சிறீலங்கா பென் கிளப்பில் இணைவதற்கும் அவர்களே உதவினார்கள்.

## 4. உங்கள் எழுத்துத் துறைக்கு சிறி லங்கா பென் கிளப் எவ்வாறான ஊக்கத்தினை தந்தது?

நான் ஒரு மருத்துவ அதிகாரி என்ற வகையிலும் திருமணமான பெண்மணி என்ற வகையிலும் நோக்கும்போது வாழ்விலே இரட்டைச்சுமையுடன் பயணிக்கிறேன் என்று சொல்லலாம். சிறீலங்கா பென் கிளப்பில் இணைந்த ஆரம்ப காலங்களில் பெரிதாக அதில் ஈடுபாடு இருக்கவில்லை. ஆயினும் காலங்கள் செல்லச் செல்லக் குழுமத்தின் செயற்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்து விட்டன என்றே சொல்லலாம். நாளாந்தம் திட்டமிட்டபடியே நிறைய நிகழ்ச்சிகள் நடந்தன. பாடல், கவிதை, கவிதைப் பயிற்சிப் பட்டறைகள், இன்னும் நிறைய ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் அந்த குழுமத்திலே இடம்பெற்றன. இவ்வாறான தமிழ் வளர்க்கும் நிகழ்ச்சிகளினால் கவரப்பட்டு குழுமத்தில் நானும் உள் நுழைந்தேன். நிறைய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினேன். என் தமிழ் விடாயின் தாகத்தை தீர்த்துக் கொண்டேன். நிறைய அன்பான நட்பு உள்ளங்களைப் பரிசாகப் பெற்றுக் கொண்டேன். தலைவியின் வழிகாட்டுதலில் தற்போது மருத்துவ நிகழ்ச்சி ஒன்றைத் தனியாகக் குழுமத்தில் செய்கிறேன். நிகழ்ச்சி நெறியாழ்கைகள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் கணக்காய்வாளராகவும் அந்தக் குழுமத்தில் பயணிக்கிறேன். அந்த வகையில் எனது தமிழ் வளர உதவிய , வாய்ப்புகள் வழங்கிய, என்னை தூண்டி விட்ட தலைவி, நண்பிகள் அனைவருக்கும் நன்றி.

## 5. எமது சிறி லங்கா பென் கிளப் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?

நாடளாவிய ரீதியில் அனைத்து இலக்கிய மாதர்கள் ஒன்றிணைந்த அருமையானதொரு கலை இலக்கிய மன்றமாக சிறீலங்கா பென் கிளப் தளம் விளங்குகிறது.நாட்டையும் தாண்டி வெளிநாட்டுப் பெண்களும் இந்த தளத்தில் இருக்கிறார்கள். ஸ்ரீலங்கா பென் கிளப் தளமானது பெண்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள ஒரு அருமையான தளமாக விளங்குகிறது. உறங்கு நிலை தவிர்த்து இயங்கு நிலையிலேயே எப்போதும் இந்த தளம் இருந்தவண்ணம் இருக்கிறது.இதன் அங்கத்தினர் அனைவரும் ஒற்றுமையாக ஒவ்வொருவரையும் ஊக்குவித்தவாறு நிகழ்ச்சிகளைத் திறம்படச் செய்கிறார்கள். தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள்.வருடாந்த மகாநாடு,அவரி காலாண்டு சஞ்சிகை,கவிதை நூல் தொகுப்பு வெளியீடு என்று அதன் வெற்றிப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தமிழ் வளர்க்கும் சாதனைக் களமாக இந்த தளம் விளங்குகிறது.சிறீ லங்கா பென் கிளப் இன்னும் உயரமாக வளர்ந்து சர்வதேசம் வரை அதன் புகழ் மணக்க வேண்டும் என்று மனமார்ந்து வாழ்த்துகிறேன். சாதனை படைக்கும் சிங்கப் பெண்களை உருவாக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

### 6. அண்மையில் நீங்கள் சிறகு முளைத்த மீன் என்று ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டீர்கள் இதற்கு எமது சிறி லங்கா பென் கிளப் எந்த வகையில் உதவியது?

எனது எழுத்துக்கள் அச்சில் மலர வேண்டுமென்றும் நூலுருப் பெற வேண்டும் நீண்ட நாளாக ஒரு ஆசையிருந்தது. இதயத்தின் ஓரத்தில் அமைதியாக இருந்த கனவு இப்போது நனவானதையிட்டுப் பெருமிதமும் புளகாங்கிதமும் அடைகிறேன்.முதற்கண் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.சிறீலங்கா பென் கிளப் தளத்தில் இணைந்த பிறகு கவிதை, கட்டுரை எழுதுவதில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. பத்திரிகை ஊடகங்களிலும் எனது படைப்புகள் வெளியாகிய வண்ணம் இருந்தன. அந்த நேரம் எல்லாக் கவிதைகளையும் தொகுத்து வெளியிட வேண்டும் என்ற ஒரு ஆசை உருவானது. இதற்கு முன்னர் பல தொகுப்பு நூல்களில் கவிதைகள் வெளிவந்திருந்தாலும் எனது முழுமையான முதல் வெளியீடாக "சிறகு முளைத்த மீன்" வெளி வந்திருக்கிறது.என்னை ஊக்குவித்த தலைவி மற்றும் நண்பிகள் அனைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.மற்றும் நூலின் அணிந்துரை, வாழ்த்துரை, மகிழ்ந்துரை போன்றவற்றையும் எனது பென் கிளப் நண்பிகளே தந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த பென்கிளப் தலைவி மற்றும் உறுப்பினர்கள் தலைமை தாங்கி நடத்திய பென்கிளப் உபதலைவி அவர்களுக்கும் நனி நன்றிகள்

### 7. எமது சிறி லங்கா பென் கிளப்பின் நிகழ்ச்சிகள் பற்றியும் அதில் உங்களது பங்களிப்பு பற்றியும் கூறுங்கள்?

புலனக்குழுமத்தில் வாராந்தம் நிகழ்ச்சிகள் முற்கூட்டிய திட்டமிடலோடு இடம்பெறுகின்றன. ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. மாதத்தின் முதலாவது இரண்டாவது மூன்றாவது நான்காவது வாரங்களுக்கான நிகழ்ச்சிகள் அழகாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் மாதத்தில் மூன்றாவது கிழமை அவிழ்தம் மருத்துவ நிகழ்ச்சியை செய்து கொண்டிருக்கிறேன். குறிப்பிட்ட மருத்துவத் தலைப்பு ஒன்றை தேர்வு செய்து அதனைத் தமிழாக்கம் செய்து பென் கிளப் தளத்தில் குறிப்பிட்ட தினத்தில் பதிவிடுகிறேன். அது சம்பந்தமான வினாக்களுக்கும் விடைகள் பகர்கிறேன். எனது இந்த முயற்சியானது அனைவருக்கும் பலன் அளிக்கும் என்று நினைக்கிறேன். நேர முகாமைத்துவமும் முன்கூட்டிய திட்டமிடலுமே எனது ஒவ்வொரு படைப்பிற்கும் மூல காரணமாக அமைகின்றன. அனைவரும் பிரயோசனமடைய வேண்டும் என்ற நோக்கத்திலே அவிழ்தம் மருத்துவம் அவிழ்கிறது.எனது வேலைப்பளுவிற்கு மத்தியிலும் இந்த நிகழ்ச்சி செய்வது மனத்திருப்தியையும் உத்வேகத்தையும் அளிக்கிறது.

குழு உறுப்பினர்கள் அனைவரும்பாராட்டி சந்தேகங்களின் தீர்வையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான ஒரு விடயம் . ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஆராயப்படும் மருத்துவ நிகழ்ச்சியானது சமகாலத்திற்கு தேவையான விழிப்புணர்வையும் அது சம்பந்தமான அறிவையும் தெளிவையும் பெற்றுக் கொடுப்பது மிகவும் பயனுள்ள விடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை என்று நினைக்கிறேன். எந்த ஒரு நிகழ்ச்சியும் நல்ல நோக்கத்தில் இறைவனின் திருப்பொருத்தத்திற்கு அமைய செய்தால் வெற்றி நிச்சயம் .அல்ஹம்துலில்லாஹ். இந்த நேர்காணல் நிகழ்விற்கு என்னைத் தேர்வு செய்ததற்காக ஸ்ரீலங்கா பென் கிளப் தலைவிக்கும் நிர்வாகத்திற்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு.

**நேர் காணல் செய்தவர்**
**என்.எம்.ஆரிபா ஏறாவூர்**
**உப தலைவி சிறி லங்கா பென் கிளப்**



WARMLY WISHES AND CONGRATULATIONS ON THE 02ND NATIONAL CONFERENCE OF EMPOWERED WOMEN OF SRILANKA PEN CLUB. WISHING ALL SUCCESS IN FUTURE ENDEAVOURS.

FAZLAN FAROOK Foundation

SAAMASHREE DESHA KEERTHI

**FAZLAN FAROOK**

Chairman - Fazlan Farook Foundation

Muslim Affairs Secretary

SAMAGI JANA BALAWEGAYA

KANDY DISTRICT - GAMPOLA DIVISION

0773050165

---

*SRI LANKA PEN CLUB*

**ஆற்றலுள்ள பெண்களின்அமைப்பு நடத்தும் இரண்டாவது தேசிய மாநாடு சிறப்புற நடந்தேற மனமுவந்து வாழ்த்துகிறேன்.**

AL-HAJJ M.I.A. FAREED
Chief executive director
Barakath Tex (PVT) Ltd.
Maruthamunai

# அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புதல்

**கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றூபா**

சிரேஷ்ட உதவி நூலகர்
விஞ்ஞான நூலகம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக் கழகம்



21 ஆம் நூற்றாண்டு மிக விரைவான சமூக பொருளாதார தொழில்நுட்ப மாற்றங்களுக்கு முகம் கொடுக்கின்ற ஒரு சமுதாயத்தை கொண்டுள்ளது. குறிப்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட மிகத் துரிதமான வளர்ச்சி பாரிய சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இம்மாற்றங்கள் புரட்சிகரமான மாற்றங்கள் என்றும் இவை உருவாக்கியுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து முறியடித்து முன்னேற வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று பல ஆய்வாளர்களும் அறிஞர்களும் தெரிவித்துள்ளனர்
அத்துடன் கடந்த மூன்று வருடங்களாக கொரோனா எனப்படும் பெரும் தொற்றினால் ஏற்பட்ட தாக்கங்களும் 2022-ல் இலங்கை சந்தித்த பொருளாதார நிதி நெருக்கடிகளும் எமது வளர்ச்சியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு எனும் தலைப்பினை இவ்வருடத்துக்கான தேசிய வாசிப்பு மாதத்தின் துணைப் பொருளாக இலங்கையின் தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சபை முன்மொழிந்து நாட்டின் பல பாகங்களிலும் பல பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் மூலம் அறிவார்ந்த சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்புவது தான் நோக்கமாக உள்ளது. அறிவார்ந்த சமூகம் என்றால் என்ன? இதற்கான அடிப்படை விடயம் யாது? என்பதை முதலில் நாங்கள் விளங்க வேண்டும்.

UNESCO யுனெஸ்கோவின் கூற்றுப்படி அறிவார்ந்த சமூகம் என்பது மனித மேம்பாட்டிற்கான அறிவை உருவாக்குவதற்கும்,பயன்படுத்துவதற்கும், பரப்புவதற்கும்,

செயல்படுத்துவதுவதற்கும் தகவல்களை பாவிக்க கூடிய திறன்களை பெற்றவர்கள் அவர்களிடம் சமூக மேம்பாட்டிற்கான பன்முகத்தன்மை, ஒற்றுமை, பங்கேற்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சமூகப் பார்வை இருத்தல் அவசியம் என்பதாகும்.

இவ்வரைவிலக்கணத்தை அலசி ஆராய்கின்றவேளை ஒரு அறிவார்ந்த சமூகத்துக்கு மிகவும் அடிப்படையான தேவைப்பாடு தகவல் என்பது புலனாகிறது. தகவல் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு ஊடகங்களும் வடிவங்களும் இன்று பரவி காணப்படுகின்றன. இருப்பினும் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு சமுதாயத்தின் அங்கத்தவன் என்ற அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பான மரபு வழி வந்த முறையான வாசிப்பை பழக்கப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாதது. வாசிப்பு இப்போது இளம் சமுதாயத்தினர் மத்தியில் அருகி

வருகின்றது.

வாசிப்பை மேம்படுத்துவதன் மூலம் மாத்திரமே ஒரு அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க முடியும். அப்துல் கலாம் அவர்கள் ஒரு அறிவுடை சமுதாயத்தின் இலக்கணங்களாக மூன்று விடயங்களை



குறிப்பிட்டுள்ளார் அவை

1. அறிவை உருவாக்குதல்
2. அறிவை பரப்புதல்
3. அறிவை பேணிப் பாதுகாத்தல்

இம்மூன்று விடயங்களுக்கும் பொருத்தமான பிள்ளைகளை பெற்றோர்களும் ஆசிரியர்களும் உருவாக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது. அறிவை உருவாக்குவது என்பது ஒரு பிள்ளையின் ஆக்கத்திறனை வளர்ப்பதன் மூலம் மாத்திரமே முடியும்.

அது மாத்திரமல்ல அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவை ஒரு அறிவுசார் சமூகமாக உருவாக்க மிகவும் பிரயத்தனம் எடுத்தார்.

ஒரு நாடு அறிவுடைய சமூகத்தை கொண்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்ய வேண்டுமாயின் அந்நாட்டின் அறிவு சார்ந்த படைப்புகளை உருவாக்கும் போது பேணிப் பாதுகாக்கும் திறனையும் தான் மதிப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே எமது தேசத்தை அறிவுடைய சமுதாயமாக நாம் உருவாக்க வேண்டும் என்றால் வாசிப்பை மேம்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும். ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் ஒரு சிறந்த எழுத்தாளராக முடியும்.
ஒரு பிள்ளையின் உடல், உள, அறிவு வளரச்சியில் வாசிப்பு மிக முக்கியமான பங்களிப்பை வகிக்கின்றது.
இன்றைய மாணவர்கள் யார்? டிஜிட்டல் உலகில் பிறந்தவர்கள்.
டிஜிட்டல் உலகின் சொந்தக்காரர்கள். எங்களுக்கும் (பெற்றோரகள்/ஆசிரியர்கள்) இன்றைய மாணவர்களுக்கும் இடையே உள்ள தலைமுறை இடைவெளி இம்மாணவர்களின் வாசிப்பில் செல்வாக்கு செலுத்துவதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

நாங்கள் டிஜிட்டல் உலகிற்கு இடம்பெயர்வோம். இவர்களுடைய தேவைக்கேற்ப டிஜிட்டல் வாசிப்பு உபகரணங்களையும் மின்னியல் வளங்களையும் வழங்குவோம்.

இளம் தலைமுறையினரின் அவா, விருப்பு, தேவைகள் என்பவற்றை அறிந்து நாங்கள் அவர்களின்பால் சென்று அவர்களை வாசிக்க தூண்டி அவர்களின் ஆக்கத் திறனை வளர்த்து அறிவை உருவாக்கத் தூண்டி அறிவார்ந்த சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்புதல் அவசியமாகும்.
உசாத்துணை:


1.UNESCO (2005) General Education SystemQuality Analysis/ Diagnosts Fram Work (GEQAF), International Bureau Education.

2. Kalam, Abdul A.P.J. (2002), Ignited Minds, Unleasing the Power within India, Panguin nBooks, Chennai.

# போதை

முப்லிஹா பிர்தவ்ஸ்
காத்தான்குடி

"உம்மா வாறத்துக்கு இன்னும் பத்து நிமிசம்தான் இருக்கு.எப்படியாவது அந்த சாமான எடுத்து வாய்க்குள்ள போட்டுப் பாத்திடனும்.அவமட்டும் பாவிக்கலாம் நாம பாவிக்க ஏலாதா."

முணுமுணுத்தவாறு பரபரப்பாக ஆயிஷா ஒவ்வொரு அலுமாரியாய் திறந்து பார்க்கிறாள். "சே என்ன மனிசி இவ.எங்கதான் வெச்சாவோ தெரியல்ல.வேற ஒண்ட வாங்கி வாய்க்குள்ள போட்டுப்ப்பாப்பம் எண்டா சின்னக் காசா அது ஆயிரக் கணக்குல வேணுமே என்னடா செய்ற ஆண்டவனே..."

பரபரப்பாக் தேடுகிறாள்.இடையில் வாசலில் கோலிங் பெல் சத்தம் கேட்கிறது.

"அதுல கொஞ்சத்த கிள்ளி வாயில போட்டுடணும்.சிலவருடமாகப் பழகிய பழக்கம். காணல்லயே. ஐயோ படபடக்குதே..உம்மா கண்டா கொண்டுடுவாவே".

எல்லாவற்றையும் மூடிவிட்டு வாசலில் எட்டிப் பார்த்தாள். திருமண அழைப்பிதழைத் தர யாரோ வந்திருந்தார்கள். வாங்கி சோபாவில் எறிந்து விட்டு மறுபடியும் தேடி ஒருவாறு கண்டுபிடித்து விட்டாள்.அதைக்கிள்ளி வாயில் போட்டதும் உடம்பில் ஒரு புது உணர்வு வந்தது.கிறுகிறுப்பு ஏறியது.அதை இன்னும் இன்னும் சுவைத்து மகிழ வேண்டும் போல் இருந்தது.

ஒருவாறு மனதைக் கட்டுப்படுத்தி அதை இருந்தவாறு மூடி இரண்டு சொப்பின் பேக்கால் கட்டி உரிய இடத்தில் வைத்தாள்.ஹோல் கதவு தட்டும் ஓசைக்கு அதை திறக்க வங்கி அலுவலாகச் சென்ற உம்மா நின்றிருந்தார்.

"எண்ட ஆண்டவனே என்னதான் களைப்பும் பசியுமா இருக்கு" என்று நொந்தவாறு ஏதாவது குடிப்போம் என்ற எண்ணத்தில் தண்ணீரைக் கொதிக்கவைத்து சாயத்தைக் கலந்துவிட்டு பால்மா போத்தலைத் தேடியெடுத்தாள்.....அங்கே.இரண்டு சொப்பிங் பேக்கால் கட்டப்பட்டிருந்த வெறும் போத்தல் அவளைப் பார்த்துச் சிரித்தது.

யாவும் உண்மையுடன் கூடிய கற்பனை.



*இளநீரில் உப்பு போட்டு குடிப்பதால்...*

- ☞ உடல் வெப்பம் தணிந்து குளிர்ச்சி அடையும் இரத்த குழாயில் தேங்கியிருக்கும்
- ☞ அடைப்புகளை நீக்கும்
- ☞ இன்சுலின் சரியான அளவு சுரக்க வைக்கும்
- ☞ குடல் புழுக்களை அழிக்கிறது
- ☞ ஜீரண சக்தியை அதிகரிக்கும்

## தூண்டில்...!

**மரீனா இல்யாஸ் ஷாபீ**
**நியூஸிலாந்து**

தற்செயலாகத்தான் அவனை ஒரு நாள் சந்தித்தேன். எனது முகநூல் பதிவு ஒன்றுக்கு யாரோ ஒருவர் இட்ட பின்னூட்டத்தை சுட்டிக்காட்டி,



"சகோதரி, அவனது பார்வையில் பிழை இருக்கிறது. அவனை உங்கள் நட்புப் பட்டியலில் வைத்திருப்பது நல்லதல்ல. .." என்று என் உள் பெட்டியில் வந்து கரிசனையுடன் ஆலோசனை சொன்ன அவனை எனக்கு சட்டென்று பிடித்துப்போனது. நான் நன்றி சொல்ல, அவன் பதில் சொல்ல, ஒரு மாதத்துக்குள் மிகவும் நெருக்கமாகி விட்டோம். ஒரு நாள் கூட மோசமாக ஒரு வார்த்தை அவர் பேசியதில்லை வீணாக என்னைத் தொந்தரவு செய்ததும் இல்லை . அதனால்தான் அவர் நல்லவர் என்ற கருத்து மனதில் ஆழமாகப் வேர்விட ஆரம்பித்திருந்தது . ஆனால் முகநூலில் அவனைப் பற்றி எந்த விபரமும் இல்லை. அதனால் நானாகவே அவரைப்பற்றி கேட்க ஆரம்பித்தேன். பிரான்ஸ் நாட்டில் ஏர்லைன்ஸ் கம்பனி ஒன்றில் வேலை செய்வதாகச் சொன்னார். அந்த நிறுவனத்தின் வேலை செய்வதற்கான அடையாள அட்டையையும் அனுப்பிவைத்தார்.

அப்போதுகூட அவர் பதிலுக்கு என்னிடம் சுயவிபரம் கேட்கவில்லை. ஆச்சரியமாக இருந்தது. திருமணமாகாத ஒரு ஆண் ஒரு பெண்ணிடம் இவ்வளவு மரியாதையாக நடந்து கொள்கிறாரே என்று வியப்பாகவும் இருந்தது. அதனால் அவர் மீது ஏற்கனவே ஏற்பட்டிருந்த ஒரு தலைக் காதல் வலுக்கத் தொடங்கியது. அவர் கேட்காமலேயே நான் எனது புகைப்படம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்தேன். இப்படித்தான் எங்கள் காதல் கதை ஆரம்பமானது...!

என்னிடம் உளவியல் ஆலோசனை தேடிவந்த ஓர் இளம் பெண்ணின் கதை இது . அதில் நிறையப் படிப்பினைகள் இருப்பதால் இதை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன். பெண்களுக்குத் தூண்டில் போடுவதற்காக சமூக வலைத்தளங்களில் ஆண்கள் பாவிக்கும் தந்திரம் இது. அதாவது , அடிக்கடி எங்களை ஒருவர் தொந்தரவு செய்தால் , தேவையில்லாத கேள்விகள் கேட்டால் எங்களுக்கு எரிச்சல் வரும் . அவர்கள் தொடர்பை வெட்டி விடுவோம். அதற்கு மாறாக , ஒருவர் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டால் எங்களுக்கு அவர்மீது மரியாதை ஏற்படும் .



இப்படிப்பட்ட நபர்கள் திட்டமிட்டு எதைச் சொன்னால் அல்லது சொல்லாமல் விட்டால் பெண்கள் தானாக வந்து தன் வலையில் வீழ்ந்து விடுவார்களோ அதையெல்லாம் செய்வார்கள். முக்கியமாக மார்க்க விஷயத்தில் மிக மிக அவதானமாக நடந்து

கொள்வார்கள். இப்படி ஒரு சாலிஹான மனிதரையே இதற்கு முன்பு சந்தித்து இருக்கிறோமா என்று யோசிக்க வைப்பார்கள். இந்த அன்பு, மரியாதை, கண்ணியம் எல்லாமே அவர்களின் தூண்டிலில் பெண்கள் சிக்கும் வரை தான். அதன் பிறகு தான் அவர்களின் சுயரூபம் வெளிப்படும்.

அப்படித்தான் இந்தப் பெண்ணுக்கும் நடந்திருக்கிறது. அவனை முழுமையாக நம்பி இருக்கிறாள் கல்யாணம் செய்து கொள்ளவும் சம்மதித்திருக்கிறாள் .



தன் காதலை பெற்றோருக்கு தெரியப்படுத்திய போது அவர்கள் முற்றுமுழுதாக அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். பெற்றோரை நம்ப வைப்பதற்காக அவனது அடையாள அட்டையை காண்பித்திருக்கிறாள் .

அவன் அவளோடு தொடர்பு கொண்ட வாட்ஸ்அப் இலக்கம் கூட பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்ததுதான். இன்னும் நம்ப மாட்டீர்களா என்று சண்டை பிடித்து, அழுது ,ஆர்ப்பாட்டம் பண்ணி அவனையே திருமணம் செய்வதற்கு பெற்றோரிடம் சம்மதம் வாங்கி இருக்கிறாள்.

அது கொரோனா காலம் . அநேகமான நாடுகளுக்கு விமானப் போக்குவரத்து மட்டுப்படுத்தப் பட்டிருந்தது . மக்கள் கூட்டமாக சேர்வதற்கும் கட்டுப்பாடுகள் இருந்தன . இதனால் , மணப்பெண்ணை அழைத்துக் கொண்டு , அவளது பெற்றோரை மட்டும் துபாய் நாட்டுக்கு வரவழைத்து , அவன் தனியாக வந்து, நிக்காஹ் முடித்து விட்டு பெற்றோரை வழியனுப்பி வைத்து விட்டான் .

அவன் தனது மனைவியை பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துப் போகவில்லை . அவளை வைத்து பணம் சம்பாதிக்க அவன் போட்டிருந்த திட்டம் பிறகுதான் அவளுக்கு புரிந்தது. தொழில்நுட்பம் உச்சத்தில் இருக்கும் இந்தக் காலகட்டத்தில் ஒரு பொய்யான அடையாள அட்டை செய்வதும் , ஒரு வெளிநாட்டு “சிம் கார்ட்“ ஏற்பாடு செய்து பேசுவதும், ஏமாற்றுக் கும்பலுக்கு பெரிய வேலையில்லை என்று அவள் புரிந்து கொண்டபோது , அவள் வாழ்வு கசங்கிப் போயிருந்தது...

ஒரு மாதகாலம் அவள் அங்கு அனுபவித்த சித்திரவதைகளையும் , தப்பிப் பிழைத்த கதையையும் ஒரு நூலாகவே எழுதிவிடலாம். அவள் உயிருடன் இருக்கிறாளே தவிர , மனதால் இறந்து விட்டாள் . விபரிக்க முடியாத உடல் , உள உபாதைகளால் வாழ்க்கை வெறுத்து பல தடவைகள் தற்கொலைக்கு முயன்றிருக்கிறாள்...

இவளைப் போல் ஆயிரம் பெண்கள்



சமூக வலைத்தளங்களில் ஆண்களால் ஏமாற்றப்பட்டு, வெளியில் சொல்ல முடியாமல் உள்ளூர அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பேசுவதை நிறுத்தி விட்டால், அல்லது அவர்களுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டால் அவ்வளவுதான். இதுவரை அவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை எல்லாம் சேமித்து வைத்து “ஸ்கிரீன்ஷோட்“ எடுத்து வைத்து, அந்த ஆண் அந்தப் பெண்ணை உளவியல் ரீதியாக மிரட்டிக் கொண்டே இருப்பான். அதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி விடுகிறார்கள் ... வெளியில் யாரிடமும்

சொல்லி உதவி பெறமுடியாத நிலையில் தினமும் ஒரு புழுவைப்போல் உள்ளுக்குள் துடிப்பதே அவர்கள் வாழ்க்கையாகி விடுகிறது ... இது இளம் பெண்களுக்கு மட்டும் ஏற்படுகின்ற ஒரு அனுபவம் அல்ல. திருமணமான பல பெண்கள் இதுபோன்ற மாய வலைகளில் வீழ்ந்து, கடைசியில் விவாகரத்தில் வந்து முடிகிறது அவர்களது திருமணம்.

இதற்கான உளவியல் காரணிகளில் முக்கியமான ஒன்று தனிமை . இன்றைய காலக்கட்டத்தில் திருமணமான பல தம்பதிகள் பொருளாதாரக் காரணிக்களுக்காக பிரிந்து வாழ்கின்றனர் . கணவன் வெளிநாட்டில் இருக்கும்போது பல பெண்கள் தன் தனிமையைப் போக்குவதற்காக முகநூலுக்கு வருகின்றனர் .



கணவனை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு துளியும் இல்லாமல் இருக்கலாம் . ஆனால் , கணவன் அருகில் இல்லாத நேரத்தில் தன்னிடம் அடிக்கடி பேசி , அன்பு காட்டும் ஒரு நபர்மீது தன்னையறியாமல் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு விடுகிறது . பின்னர் பூதம் போல் அந்த உறவு வளர்ந்து விடுகிறது.

இரண்டாவது காரணம் , குடும்பத்தில் ஏற்படும் சின்னச் சின்னச் சிக்கல்கள் தான் . கணவன் அடிக்கடி கோபப்படுகிறான் , தன் சமையலை ரசிப்பதில்லை , அதிகம் வெளியில் கூட்டிப்போவதில்லை என்றெல்லாம் மனதில் கொஞ்சம் குறையும் கவலையும் இருக்கும்போது, வெளியில் இருந்து யாராவது அன்பாகப் பேசினால் அவரின் மேல் ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிடும். அதனால், மனம் கொஞ்சம் வாட்டம் காணும் போதெல்லாம் அவனுடன் பேசவேண்டும் என்று ஓர் உந்துதல் ஏற்படும் . இதுவும் ஒரு போதைதான் . அந்தப் போதையில் சிக்கி வாழ்க்கை சீரழியும் வரை அதன் பாரதூரம் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

சகோதரிகளே!, மெய்நிகர் உலகம் அதாவது virtual world எப்போதுமே அழகாகத்தான் தெரியும் . ஏனென்றால் அது கற்பனை கலந்த மாயை . அந்த மாயமானின் பின்னால் ஓடி , வாழ்க்கையை தொலைத்து விடாதீர்கள் .உங்கள் உள்பெட்டியை எப்போதும் பூட்டி வைத்துக்கொள்ளுங்கள் . உங்கள் பிரச்சினைகளை குடுப்பத்தில் ஒருவரிடமோ , நெருங்கிய நட்பிடமோ, அல்லது உளவியல் ஆலோசகரிடமோ கலந்தாலோசியுங்கள் .

முகநூல் என்னும் திரைக்குப் பின்னால் முகம் தெரியாத முதலைகள் பல உங்களை இரையாக்கக் காத்திருக்கின்றன. தனிமையில் இருக்கும் போது சைத்தான் உங்களுடன் கூடவே இருக்கின்றான். உங்களைத் தவறு செய்யத் தூண்டுகிறான் . அவனது சூழ்ச்சியில் இருந்து உங்களையும் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள் . திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு நீங்கள் செய்யும் தவறுகளை, இந்த உலகத்தில் யார் கண்ணிலும் படாதவாறு மறைக்கும் சாமர்த்தியமும் தொழில்நுட்பத் தந்திரங்களும் உங்களுக்கு அத்துப்படியாக இருக்கலாம். ஆனால்... உங்கள் இடமும் வலமும் உட்கார்ந்திருக்கும் மலக்குகளின் பார்வையிலிருந்து எதை மறைக்க முடியும் உங்களால்? ஆண்களை ஏமாற்றி தன் வலையில் சிக்கவைத்து, பணம் பறிக்கும் பெண்களும் தங்களது மறுமையைப் பற்றி பயந்து கொள்ளட்டும் ...

## மீண்டும் வருமா அந்நாட்கள்..!

**யாழ் றமீஸா யாஸீன்**



மீலாத்து நபி கொண்டாட்டங்கள்
எனக்குள் ..
அழகான அந்த நாட்களை
நினைத்து மனம் ஏங்குதே..

ரபியுல் அவ்வல் தொடங்கியதுமே
ஓதுர பள்ளியிலே
குழுக்கள் பிரித்து
அவர்களுக்கு யாசீன் ஒத
சொல்லிக்கொடுப்பர்..

குழுவில் உள்ள பிள்ளைகள்
வீட்டிற்கு போய்
யாசீன் மூன்று ஓதி மகிழ்வோம்..
அவ்வீட்டார் பையிலே
பிஸ்கட், கேக்,பழம்,டொபி என
இட்டு தருவார்கள்..

பத்து வயது பிள்ளைகள்
யாம் பவித்திரமான எண்ணத்துடனே
யாசீன் ஓதி மகிழ்வோம்..

நபி மீது ஸலவாத்துச்
சொல்லி நிலவுகள்
போல வீதியிலே
போகும் அழகோ அழகு..
புது சட்டையணிந்து
புதுப்பொலிவோடு எம்மைப்
போல சிறார்களுக்கு
பரிசுகள் வழங்கும் பெருவிழா
நடக்கும்..

யாழின் சோனகதெரு
அலங்கரிக்கப்பட்டு
மேடைகள் அமைத்து
போட்டிகள் நடக்கும்..

கிரீஸ் மரம்,முட்டி உடைத்தல்
சைக்கிள் ஓட்டம்,கிராத் போட்டி,
இஸ்லாமிய கீதம்
இன்னும் ஞாபகமிருக்கிறது.....

வீடுகளில் வாசனை வீதியிலே தோரணை
இன்று நமக்குள் வேதனை இது காலம் தந்த சோதனை
மீண்டும் கிடைக்குமோ எண்ணி மனம் ஏங்குதே

## காற்றுக்கென்ன வேலி

**மக்கொனையூராள்**

துயரப் பெருவெளியின் காயங்கள் நீக்கு
துணிவுடனே நீயுன் அச்சத்தைப் போக்கு
தரணியெங்கும் உன் எண்ணங்களைத் தூவு
தடைகளைப் பார்த்து எதிர்த்துக் கூவு

சிந்தை தெளிவுற கவிதை பாடு
சிறப்புற யாவரும் நலமே நாடு
துரோகத்தின் வலிகளை தூரமாய் எறி
துஷ்டனின் வாழ்விருந்தும் நல்லவை பறி

விழிகளின் ஈரம் விலைபோவதில்லை
பழிகளால் இலட்சியம் பழுதாவதில்லை
முதுகுப் பின்னாலே கதைசொல்வோரை தவிர்த்திடு
முகமூடி மானிடரின் வேசத்தைக் கலைத்திடு

சூழ்ச்சிகளை வென்று சூரியனாய்ச் சுடர்விடு
சூது நாடும் தீயவர்க்கும்
புன்னகையால் பதில்கொடு
பரிகாசம் செய்வோரைப் புறந்தள்ளிப் போய்விடு
படைத்தோனின் நேசம் மட்டுமே யாசித்திடு

காற்றுக்கென்ன இங்கே வேலி
கண்ணீர் துடைத்து வா என் தோழி

## கர்வம் கரைந்தது (உருவகக்கதை)

மும்தாஜ் பேகம் ஹமீட் - ஒலுவில்

வானிலே சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான். பூரணச் சந்திரனைக் கண்ட குழந்தைகள் குதூகலத்தால் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்கள்.
அழுது அடம்பிடித்துக் கொண்டிருந்த குழந்தைக்குச் சந்திரனைக் காட்டிக் கதை சொல்லி உணவூட்டிக் கொண்டிருந்தாள் ஒரு தாய்.
வீட்டுமுற்றத்திலே ஆண்களும் பெண்களுமாக உட்கார்ந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.
இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் தன்னால்தானே இவர்கள் எல்லோரும் சந்தோசம் அடைகிறார்கள் என்று கர்வம் கொண்டது.
உடனே விண்ணிலே உலாவிக்கொண்டிருந்த மேகங்களைக் கூப்பிட்டு "பார்த்தீர்களா என்னால் தானே இம்மனிதர்களெல்லோரும் சந்தோசமடைகிறார்கள். நீங்கள் இத்தனை பேர் இருந்தும் என்ன பயன் என்று எள்ளி நகையாடியது.
இதைக் கேட்ட மேகத்துக்குக் கோபத்தால் முகம் கறுத்து விட்டது.சொல்லொண்ணாத் துயரத்தால் இதயம் விம்மியது. திடீரென ஓ....வென்று சத்தம் போட்டு அழ ஆரம்பித்து விட்டது. இடி முழக்கத்துடன் மழை பெய்வதைக் கண்ட தாய் குழந்தையைத் தூக்கிச் சென்று விட்டாள்.விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும் முற்றத்தில் பேசிக்கொண்டிருந்தவர்களும் வீட்டினுள் ஓடி ஒழிந்து கொண்டார்கள். அத்துடன் தெருவில் போவோரும் வருவோரும் சந்திரனைப் பார்க்க விரும்பாதவர்களாகக் குடைகளால் தங்களை மறைத்துக் கொண்டு சென்றார்கள்.சந்திரனின் கர்வம் கொட்டும் மழையில் கரைந்து கொண்டிருந்தது.

## வயற்குருவி நான்
## தனியாக நான் நிற்கின்றேன்

மீராநகர் றிப்கா - நிந்தவூர்.

ஆசைக்கும் அளவில்லை ஐந்திற்கும் வழியில்லை
பசிக்கும் தான் உணவில்லை படுக்கைக்கு பாயுமில்லை
மாத்திட தான் புடவையில்லை என்ட



ஓலை குடிசையும் தான் ஒழுகுதே
அதனுள்ளே நீ தெரிகிறாயே

பெத்தவங்க போயிட்டாங்க மத்தவங்க
பார்ப்பாங்கண்ணு ஒத்தையிலே நான் நிற்கிறேன்
வயலுக்குப் போய் கதிர்புறக்கி காசாக்கி
காஞ்சிபுர பட்டும் கை நிறைய வளையலுமே
போடத்தான் எனக்கும் ஆசை
கண்ணாடி கறுப்பாச்சி அதில் புள்ளியும் தான் விழுந்தாச்சி
முகம் பார்த்து நாளாச்சி
நாக்கும் தான்செத்திடுச்சி பழைய சாதம் திண்டதனாலே
நாட்டுக் கோழி குழம்புகேட்டு நாவும் தான் விரும்புதே

எனக்கும் தான் வயதாச்சி வாழ்க்கைக்கு தயாராச்சி

நான் காட்டுக் கருவேப்பிலை யாரும்
கண்ணுக்கும் தெரியவில்லை
கண்டவங்களிடம் சொல்லிடு நான்
காட்டுல தான் நிற்கிறேன் என்று

வாலிபம் தான் கலையுதுண்டு வாங்கோழி
கத்துதே
வாசலிலே நிக்குற பூசணி தான்
சிரிக்குதே
வயதும் போகுது பொழுதும் விடியுது
நானும் வாழவில்லையே எனக்கும் தான்
ஏதும் வரன் வருமா
நானும் தான் வாழாம இருக்கிறேனே
நிலாவே உன்னைத் தான் அழைக்கிறேன்
நாள் தனைக்குறித்திடு
அலரி தான் பூத்திருக்கு
அர்ச்சனைக்கு காத்திருக்கு
ஏதம் வரன் வந்தா முடிச்சிவைக்க
நிலவே நீ வருவாயா
எனக்கு வரன் ஒன்று பாத்து வர
என்னிடமே செம்புக் குடம்
ஒன்றிருக்குது எவர்சில்வர் தட்டும்
இருக்குதே இரண்டையுமே
கொடுத்திடுவோம் மாப்பிள்ளைக்கு
வரதட்சணையாக

உனக்கு முதல்பந்தியில நான் சோறும்
தான் போட்டிடுவன்
தட்சணையும் தந்திடுவேனே
என்னவர் கதிர்புறக்க போகாம
காத்திடுவாரே
நிலாவே நீ போவாயா
எனக்கொரு வரன் கொண்டு வருவாயா
பால் நிலாவே என் பக்கம் வருவாயா
எனக்கு வழி சொல்வாயா?

## மருத்துவ குறிப்பு...

" பொதுவாக மண்பானையில் சமைத்த உணவின் ருசியும், ஆரோக்கியமும் அதிகம். "

" இதனால் தான் வருடம் தோறும் வரும் பொங்கல் பண்டிகைஇ மக்களுடன் மண் பானை தொடர்பை ஏற்படுத்தி பாரம்பரியத்தை காக்க செய்கிறது. "

# என்னைத் தெரியுமா

**ஆக்கம் - வ.ீபீரா வ.ீபி**



வெறுப்புகளை செரித்தே வீறுகொண்டு
நடந்தவள்
பொறுப்பை உணர்ந்தே
நெருப்பெனவே நிமிர்ந்தவள்
நட்பைக்கூட காக்கும் கற்பெனவே
போற்றி
மட்டில்லா வரிசைகளாய்
மாண்புகளைப் பெற்றவள்

முயற்சிகளை என்றும்
சிறகாய் அணிந்தவள்
உயிரையும் உண்மைக்காய் ஈயத்
துணிந்தவள்
எதிரிகளும் நலம் வாழ வாழ்த்துபவள்
புதிராகத் தெரிந்தாலும் புதுமைகளில்
ஆழ்த்துபவள்

நேரிய சிந்தனைகள் எனைச் செதுக்க
பாரிய முன்னேற்றங்கள் என்னுள்
கண்டேன்
மடுவாய் இருந்தும் மாறா
தன்னம்பிக்கையோடு
தொடுவானம் தொட்டேனே தோளேறும்
மாலைகளோடு

ஞாலத்தில் தமிழ் மடியில்
தவழ்ந்திருப்பேன்
காலத்தை வென்றவளாய்
கவிதைகளில் உயிர்த்திருப்பேன்
வெற்றிக்கிண்ணம் எனையேந்தி
ஊர்கோலம் போக
வெற்றிகளால் சுயசரிதம்
எழுதிடுவேன் நாளை

## நிலவே நீ போவாயோ தூது

**ஜனிறா ஜலீல் - காத்தான்குடி.**

வெண்ணிற ஆடையினால்
மண்ணிலுள்ள மாந்தரை
தடவிச் செல்ல
தரையிறங்காயோ...!

ஆணவத்தை அடக்கி
நாணயமிக்கவராக்கிட
பூவுலகினுள்
புன்னகை தூவாயோ..!

மூப்படைந்தோரை
மூலைக்குள் அடையாமல்
முன்னுதாரணமாக்க- நீ
முகமலர்வுடன் பாராயோ..!

நிலையில்லா - இந்
நித்திலத்தில்
பிறழ்வுகளற்றிட- நிலவே
போவாயோ நீ தூது...

## ஹைக்கூ

**சதீகா ரஸ்லி**
**புத்தளம், ரசூல் நகர்**

வானத்து நிலவு
எட்டாத் தொலைவில் இருக்கிறது
பறவை

படகில் குழந்தை
இழுத்துச் செல்கிறது
திடீர் வெள்ளம்

மழைக்கால இரவு
மனதுக்கு இதம் தருகிறது
பரவும் மண்வாசணை

அழகிய மொட்டுக்கள்
மலரும் முன்னே கருகும்
இளந்தளிர்களின் எதிர்காலம்

வானவில்லின் வண்ணம்
இன்னும் அழியாமல் இருக்கின்றது
பாட்டியின் நினைவுகள்

## நானெனப்படுவது யாதெனில்

**றினோஸியா அப்துல் ஸலாம்**
**உயன்வத்த - மாவனல்ல**

நான் கனவுப் பூக்களோடு
கதை பேசுபவளல்ல
நிஜத்தின் நிழலில் மட்டுமே
ஒதுங்க நினைப்பவள்...
வலி தரும் நினைவலைகள்
தாராளமாய் முட்டி நின்றாலும்
எட்ட நின்று அதை
தட்டிடச் செய்பவள்...
ஏதோவாகிப் போன
உறவுகளைக் கூட
என்னதாய் நினைத்து
ஆதரிப்பவள்...
தொலைத்திட்ட பொழுதுகளில்
தொடரும் சோகங்கள்
எல்லாம் கடந்தவள்...
வன்மம் கொண்ட மனதிலும்
வண்ணங்கள் காண
வறுமைத் தூரிகையால்
வரையப்பட்ட எண்ணங்களின் வண்மை...
கோடி நட்சத்திரங்கள் கூடி
வானத்தில் உலாவிடும்
வெண்ணிலவல்ல
மிதித்துச் சென்றாலும்
தலைநிமிர்ந்து நிற்கும்
நாணல்...
ஊருக்கே வெளிச்சம் தரும்
தெருவிளக்கு அல்ல
என்னை சூழ இருப்போர்க்கு
என்னை எரித்து
ஒளிதரும்
மெழுகுவர்த்தி...
பொறாமைக் கனலையும்
குளிராக்கி மறக்கின்றவள்...
ஆயுதமற்ற வார்த்தை
யுத்தகளத்தில்
நிராயுதபாணியாகி நிற்பவள்...
வலிகளை வலுவாக்கி

வழிகள் பல கண்டு
வறுமை தொலைத்து
வசந்தம் கண்டிட
வரம் வேண்டுபவள்
இதயக்கதவுகளை பூட்டி விட்டு
இமைக்கதவைத் திறந்து உனக்கான
உலகத்தில்
எனக்கான பொழுதுகளை
நிரந்தரமாய்த் தொலைத்த
அருமை உணரப்படாது அலைக்கழியும்
ஏழை நான் உனக்கேயாதலுக்காய்
விதி வரைந்திட்ட கோட்டின்
வழி நடப்பவள் நான்

---

செய்திகளை மறந்து கொஞ்சம் வாய்விட்டு சிரிப்போம்!

***SEMMA KADI***

**என் பூட்டை உடைத்து 5 லட்சம் கொள்ளை அடித்து விட்டார்கள்!**

பூட்டுக்குள் எப்படிடா 5 லட்சம் வைத்திருந்தாய்?

........................................................................

**படிச்சி முடிச்சப்புறம் என்ன செய்ய போறே?**

புக்கை மூடிடுவேன்!

........................................................................

**காலில் என்ன காயம்?**

செருப்பு கடித்து விட்டது

**பின்ன அதை மிதிச்சா அது சும்மா இருக்குமா!**

........................................................................

**குளிச்ச பிறகு எதுக்கு தலையை துவட்டுறோம்?**

தெரியல, குளிக்கும் போதே துவட்ட முடியாதே!

........................................................................

**இரண்டு இட்லியைக் கூட முழுசா சாப்பிட முடியல டாக்டர்..?**

என்னாலையும் முழுசா இரண்டு இட்லி சாப்பிட முடியாது, புட்டு புட்டுதான் சாப்பிடனும்!

# அன்பின் தோழிக்கு,

### உன் தோழி, ஹுமதா ஏ கப்பார் மாவனல்ல, உயன்வத்த

நலம் எல்லாம் நல்லதாகவே அமைய பிரார்த்தனைகள்..
அடுத்தவர் பிரச்சினைகள் நமக்கு எதற்கு என்று அலட்சியமாக கேட்டாய்... மகளின், மகனின், தாயின், கணவனின் விடயங்களை எல்லாம் உன்னால் செவி கொடுத்து கேட்க முடியாது என அழுத்தம் மேலிடச் சொன்னாய்... நன்றாக யோசி தோழி..மற்றவர்களின் மன ஓசைகளைக் கேட்கும் செவி உடைய மனிதர்களே கருணைக்குரியவர்களாக இருக்கின்றனர். பூப் பூக்கும் ஓசையைக் கேட்பது போல அது ஒரு மென்மையான தருணம். அந்த தருணங்களை உணர்தலே கேட்டலின் சிறப்பாகும். அப்படி இல்லாத செவிகளை கேட்கப் படாத செவியாகவே கூறப்படுகிறது.
எங்கள் கோரிக்கைகளுக்கு யாரும் செவி கொடுக்கவே இல்லை என்று நீயே பல முறை நொந்து நின்றது உனக்கு மறந்து போலும்..
இந்த செவி கொடுத்தல் என்பதற்கு ஏன் மனித மனம் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறது? ஏனென்றால் உலகில் வாழும் அனைவருக்கும் பிறரிடம் சொல்வதற்கும், பகிர்வதற்கும் ஏதோ ஒன்று இருக்கிறது.அதனால் தான் பகிரப்படும்
இன்பம் இரட்டிப்பாகவும்,பகிரப்படும் துன்பம் பாதியாகக் குறைவதாகவும் சொல்லப்படுகிறது என்பதை நீ அறிவாய்..வாழ்க்கையில் உயர்ந்த வெற்றியாளர்களிடம் உங்கள் வெற்றியின் ரகசியம்
என்ன என்று கேட்டால் நான் வாழ்வில்



நம்பிக்கையற்று இருந்த போது தன் கவலைகளைக் கேட்டு நம்பிக்கை ஏற்படுத்திய மனிதர்களே வெற்றி அடையக் காரணம் எனக் கூறுவதுண்டு அன்பின் நேசமே..திசைகள்தெரியாமல், வலிகளோடே பயணம் செய்து கொண்டு இருக்கும் மனிதர்கள் நம்முடனே இருக்கிறார்கள். அவர்களின் குரல்களை கேட்பவர்களாக நாம் இருக்கலாமே.
வாழ்வின் மீதான நம்பிக்கையைத் தொலைத்தவர்களில் பலருக்கு நாம் செவி சாய்த்தோமென்றால்அவர்களின் வாழ்வை துளிர்க்க செய்ய முடியம் தானே?அன்பால் சூழப்பட்டது தானே இவ்வுலகு! மற்றவர்களுக்கு எதைச் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள் என்ற இறைவனின் குரல் கேட்கிறது தானே! கொஞ்சம் செவி தாழ்த்தாமல் நீ ஒன்றும் தாழ்த்தப் படப் போவதில்லை.

அன்பே...நல்ல உரையாடல்களைக் கேட்கும் போதே வார்த்தைகள் வசப் படுகிறது. வாழ்வு இனிதாக மற்றவர்களைக் கேளுங்கள். பிறரின் வாழ்வையும் வளமாக்க செவி கொடுங்கள். இதனை செவி வழிச் செய்தியாக நினைத்து விட்டு விடாமல் இதயம் உணர்த்தும் செய்தியாக நினைவில் கொள்! இறைவன் உன் மீது அருள் புரியட்டும்!
மடல் கண்டு தொடர்கிறேன்.

## நான் ஒரு புதுமைப்பெண்


**றம்ஸானா சமீல்.**
**அக்கரைப்பற்று.**

சுதந்திரத்தை
சுவீகாரம் செய்து வைத்திருக்கிறேன்
என்கால்களுக்கு
கட்டுப் போட முடியாது

விரல்களுக்கு
விலங்கு மாட்ட முடியாது
கற்பனைக்கு
கடிவாளமிட முடியாது

அடுப்படிக்குள் என்னை
அடக்கி வைக்க முடியாது
விரிந்த உலகமே
என் விலாசம்
வேண்டும் இடமெல்லாம் தாண்டும்
காற்று


போகுமிடமெல்லாம்
புதமைப் பெண்களுக்கு முகவரிதான்



# முகங்காணா முகநூல் பேணல்.

## லைலா அக்ஷியா ஆசிரியை தெஹிவளை

வாழ்க்கையில் எல்லோருமே ரொம்பவே பிசியாகி விட்டார்கள். தத்தமது காரியங்களை முழுமையாக



செய்வதற்கும், இன்னொருவர் விடயங்களை நிதானமாக அறிந்து கொள்வதற்கும் யாருக்குமே இப்போதெல்லாம் முடிவதில்லை. ஆனாலும் என்ன? எல்லாவற்றிற்கும் விதிவிலக்காக, "முகநூல்" என்ற ஒரு காந்தம் இந்த நிமிடம் வரை உலகத்தை தன் பக்கம் இழுத்துக் கொண்டிருக்கிறது. நேரமில்லையென்பவர்கள் கூட நேரமெடுத்துக் கொஞ்சம் எட்டிப்பார்த்து ,ஆறுதலடைந்தது, ஆங்காங்கே தேவையானது, தேவையற்றது, நாட்டு நடப்பு, ஊர் நடப்பு, உலக நடப்பு,பிறவீட்டு நடப்பு எல்லாவற்றையும் ஒரே பார்வையில் மேய்ந்துவிட்டுச் செல்வதற்கும், யார் என்ன நிலையில் இருக்கிறார்கள்? என்று நேரடியாக கேட்டுத் தெரியாமலேயே அறிந்து கொள்வதற்கும் எம்மை அந்த உலகத்திறகுள் உட்படுத்தி விட்டோம்.

அறிந்து தெரிந்து, முகத்தை பார்த்துப் பேசினாலே யார் எப்படியிருப்பார்கள்? என்று தெரியாதபோது, முகங்களும் தெரியாமல், அகங்களும் தெரியாமல், "ஏதோவொரு உறவில்" இணைத்து கொண்டிருக்கும் ஒரு வலையே "முகநூல்".

இந்த வலையில் மாட்டப் பட்டிருக்கின்றோமா? அல்லது மட்டுப்பட்டிருக்கின்றோமா? என்ற கேள்விக்கு, அவரவர்கள் கையாளும் விதத்தில் இருந்துதான் பதில் வரும். மாணவர்கள் முதல் வயோதிபர்கள் வரை முதன்மையாக பயன்படுத்தும் பொழுது போக்கு சமூக வலைத்தளங்களில் ஒன்றாக முகநூல் இருக்கிறது.

இதன் நன்மைகளையோ, இது ஒரு "மாய வலையென" அதன் தீங்குகளையோ பேசுவதை விடுத்து இதன் தீமைகளிலிருந்து எவ்வாறு தற்காத்துக் கொள்வது? என்பது பற்றிய ஒரு சிறு விளக்கம் அடங்கிய தொகுப்பாக இதனை தருகின்றேன்.

முகநூல் 2004 ல் தொடங்கிய இணையவழி சமூக வலையமைப்பு நிறுவனமாகும்.அலெக்சா நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி, இணையங்களிலே "முகநூல்" தான் இரண்டாவது மிகப் பிரபலமான இணையத்தளமாகும் எனக் கூறியுள்ளது.வெறும் மனிதர்கள் தான் இதனை பயன்படுத்துகிறார்கள் என்று கூற முடியாது .மனிதத்தோல் போர்த்திய எல்லாவிதமான விலங்குகளும் இந்த முகநூல் காட்டில் உலாவிக் கொண்டிருக்கின்றன. இதை பாதுகாப்பாக பயன்படுத்தத் தவறுவதனால் சிலர், குறிப்பாகப் "பெண்கள்" தங்கள் வாழ்க்கையே தொலைத்து விட்டிருக்கிறார்கள் என்பது அறிந்ததே.

உலகின் மொத்த முகநூல் உறுப்பினர்களில் எட்டு கோடி பேர்

போலியாக செயல்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தனது பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் புகைப்படங்களை விளம்பரத்திற்கு பயன்படுத்தப் பட்டதையடுத்து பல வழக்குகளில் முகநூல் நிறுவனமே நஷ்டஈடு வழங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

பயனர்களில் சுமார் 30 பெண்கள் சராசரியாக மாதாந்தம் முகநூல் இணையத்தள மோசடியை புகார் செய்வதாக ஒரு ஆய்வு கூறுகிறது.முகநூலில் இருக்கும் 87% னோர் முன்பின் அறிமுகமில்லாத, எந்த விதத்திலும் தொடர்பில்லாத நபர்களிடமிருந்து வரும் நட்பை ஏற்றுக் கொள்வதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. முகநூலை ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஒருவர் செலவழிக்கிறார் எனில் அதற்கு அடிமையாகி விட்டார் என்றே அர்த்தம்.

30 %க்கு அதிகமானோர் "முகநூல் இல்லாமல் நானில்லை" என்ற முடிவிற்கே வந்து விட்டருக்கின்றனர். இவர்கள் போன்றோர்களை பிறர் எளிதில் தனது வழிக்குக் கொண்டு செல்லமுடியும். படித்த நடுத்தர வர்க்கப் பெண்கள், வீட்டிலிருக்கும் பெண்கள் கூட தங்கள் நேரத்தினை பெரிதும் இதற்காக அர்ப்பணிக்க தொடங்கிவிட்டனர்.

இப்படி பல்வேறு ஆய்வுகளின் தரவுகளின் அடிப்படையில் இது பற்றிய எச்சரிக்கை வழங்கப்படுவதன் முக்கியத்துவமும் தற்போது அதிகமாக தேவைப்படுகிறதெனக் கருதுகின்றேன்.

முடியுமானளவு ஒரு முகநூலை பாதுகாப்பாக எவ்வாறு கையாள்வது என்பது குறித்து முக்கியமாக "பெண்களுக்கு" கூறும் அறிவுரை:

இணையக் குறும்பர்களான "ஹக்கர்ஸ்" நமது முகநூலில் அத்துமீறி நுழைந்து, இருக்கும் தகவல்களை,படங்களைக் கைப்பற்றி அவர்கள் மனப்பான்மைக்கு ஏற்ப வக்கிரமாக மாற்றுவதற்குக சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பாதுகாப்புக் குறைபாட்டினால் ஒன்பது கோடி முகநூல் கணக்குகள் ஹேக் செய்யப்பட்டு இருக்கிறது.

எமது முகநூல் பாதுகாப்புக்காக வேண்டி இன்னோர் இடத்தை நாட வேண்டியதில்லை. நமது கணக்கிலேயே இதற்கான கட்டுப்பாடுகளை போட்டுக் கொள்ளலாம். செட்டிங் ஆப்ஷனில;( profile settings) கேட்டிருக்கும் எல்லா தகவல்களையும் நாம் மாத்திரம்( Only me) பார்த்துக் கொள்ள முடியுமானவாறு செய்து கொள்ள வேண்டும். இதற்காக "ப்ரொபைல் லாக்" எனும் இந்த முறையை உறுதி செய்து கொள்ளலாம். அடிக்கடி இவை நாம் தேர்வு செய்த பிரகாரம் இருக்கிறதா என்பதனை பரிசீலித்து பார்ப்பது முக்கியம். இந்த விடயத்தில் எமது இலக்கம், நமது நண்பர்கள் பட்டியல்,ஈ- மெயில் போன்றவற்றை பாதுகாத்துக் கொள்ளலாம். அத்தோடு பாதுகாப்பான முகநூல் கையாளுகை,முகநூல் பற்றிய பாதுகாப்பு தகவல்கள் கொண்ட விழிப்புணர்வு பதிவுகள் கூட அடிக்கடி யூடியூப் போன்றவற்றில் வெளிவிடப்படுகின்றன. அவர்கள் பார்த்தறிந்து நமது முகநூலின் பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளலாம்.

அறிமுகமில்லாத நபர்களிடமிருந்து பெறப்படும் நட்பை முற்றிலும் ஏற்றுக் கொள்ளாமலிருப்பதே நல்லது. அவர்களது நயமான பேச்சை , படத்தை, செல்வாக்கை எந்த விதத்திலும் நம்பி விடக் கூடாது.

உண்பது முதல் உறங்குவது வரை அத்தனை செயற்பாடுகளையும் பகிர்ந்து ,தற்காலிக மகிழ்ச்சிப் போதைக்கு அடிமையாகி நிரந்தரமான நிம்மதியை இழந்து விடக் கூடாது.

பெண்களின் பெயரில் திறக்கப்படும்

முகநூல் பற்றி மிக முக்கியமாக எச்சரிக்கை தேவை. போலிக் கணக்குகளில் இவர்கள் கவர்ச்சிகரமான பெயர்களில், நடிகைகள் படங்களை, இணையத்தில் எடுத்த அழகழகான படங்களை ஃப்ரொபைல் படங்களாக வைத்திருப்பார்கள்.ஆகவே இவர்களது கணக்குகளை (தேவையான பட்சத்தில் மாத்திரம்) ஆழமாக தேடிப் பார்ப்பது முக்கியம்.
உங்கள் நண்பர் பட்டியல் மூலம் உங்களை நெருங்க வைப்பதற்காகவும், தனிப்பட்ட முறையில் உள்பட்டிக்குள் நுழைந்து வணக்கத்தையோ, அக்கறையோடு அன்பு வார்த்தைகளையோ, வாழ்த்தையோ தெரிவித்து உறவாட வரும் நபர்களுக்கு பதிலளிக்காமல் இருப்பது பாதுகாப்பானது.
நட்புப் பட்டியல் என்றொன்று இருந்தாலும் அதில் எல்லோரும் உண்மையான நட்புள்ளவர்களாக இருப்பார்கள் என்பதில் என்ன நம்பிக்கை இருக்கிறது?
நட்பை ஏற்றுக்கொள்ளும் அனுமதி கேட்கும் போது அவர் தெரிந்த நபரா? அவருக்குள்ள பின்னணி என்ன?அவர்களுடைய பட்டியலில் யார்யார் இருக்கிறார்கள்? அவர் வேறு எந்த அமைப்புகளோடு தொடர்பு பட்டிருக்கிறார்? என்பதெல்லாம் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளக் கூடாது.
ஆனந்தம் இருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.
முக்கியமாக முகநூல் உள்பெட்டி (Inbox) என்பது மிகவும் பயங்கரமானது. முகத்துக்கு நேரே நமது தொலைபேசிக்குப் பதிலாக ஒரு கத்தியை தான் வைத்துக் கொண்டிருக்கிறோமென ஒரு முறை சிந்தித்து மிகவும் பாதுகாப்பாக நடந்து கொள்ள வேண்டும்.
முகநூலில் பல சிக்கல்களுக்கு மாட்டிக் கொள்பவர்கள் பெண்களே, முகநூல் உறவினால் தற்கொலைகள், கொலைகள், திருட்டு, பணமோசடி, கற்பழிப்புகள் கூட நிகழ்ந்திருப்பதை அண்மை காலங்களில் பார்க்க முடிகிறது.

முகநூல் நட்புக்கு ஆயுள் குறைவு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
முகநூல் பக்கத்தில் சில சமூக விரோதிகளின் தொந்தரவுகளைத் தவிர்க்கவும், உதவி பெறவும் அதிலேயே பக்கங்கள் உள்ளன. மற்றும் முகநூல் சம்பந்தமாக புகார் தெரிவிக்கவும் அதிலேயே “ஹெல்ப்“ பக்கத்திற்கு செல்லலாம்.

தமக்கு வேண்டாத நட்பை நீக்க ("Unfriend") என குறிப்பிடலாம். மற்றும் எவரின் செய்தியும் வேண்டாம் என்றால் (block) என்ற விருப்ப பகுதியை கவனத்தில் கொண்டு தடை ஏற்படுத்த முடியும்.
வீரத்தை நிரூபிக்கப் போய் வீண் வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாமே.
நமது ஆற்றல்களை, வெற்றிகளை, சமூக கருத்துகளை , தேவைகளைப் பகிர்ந்து நிறைவேற்றக்கூடிய ஒரு தளமாக மாத்திரம் அவற்றை அதை பயன்படுத்துங்கள்.
உங்கள் மனநிலை, தனிப்பட்ட உணர்வுகள், பிரச்சினைகள் போன்றவற்றை எல்லோருக்கும் தெரியப்படுத்தும் ஒரு இடமல்ல அது.
ஆறுதல் தேடவோ, புகழை அள்ளித் தருமென்றோ அதை நினைப்பதானது, நம் தலையில் நாமே மண்ணள்ளிப் போடுவதற்கு சமமாகும்.எந்த திருடனுக்கும் தனக்குரிய ஏதாவதொரு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் போது தான் நுழைகிறான் என்பது ஞாபகம் இருக்கட்டும்.
விளையாட்டுப் பக்கங்கள், எதிர்காலத்தை கணக்குப் போடும்

அஸ்ட்ரோனொலஜி "சைட்கள் " அடிக்கடி முகநூலில் கண்களில் படுவதுண்டு. ஒரு வகையான ஆர்வக்கோளாறில் அவற்றைத் "டச்"செய்து "நமது பெயருக்கு பின்னால் என்ன இருக்கிறது? எதிர்காலம் எப்படி?" என்பது போன்றம ஒரு வகையான மாய விளையாட்டுக்கு ஆசைப்பட்டு அவற்றுக்குள் நுழைகிறார்கள். இதன்போது எமது தகவல்களை நாம் அறியாமலேயே எடுக்கப்பட்டுவிடுகிறது. அவை பதியப்பட்டும் விடுகின்றன. எனவே இவற்றை தவிர்த்து கொள்வது நல்லது.

முகநூல் சம்பந்தமாக அநியாயமாகப் பாதிக்கப்பட்டவர்கள், சமூக வலைத்தளங்களால் ஏற்படும் குற்றங்கள் தொடர்பாக முறையீடு செய்வதற்கு , இலங்கையில் சைபர் கிரைம் சட்டங்கள் இருக்கின்றன.

இலங்கை CERT தொழில்நுட்ப ஆதரவை, குறிப்பாக சமூக ஊடகங்கள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் ஏதேனும் சட்ட உதவிகளுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவை 011 2432746 அல்லது 011 2337432 ∴போன் எண்கள் அல்லது report@cid.police மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

"பெண்ணுக்குப் பயம்வந்தால்
பலம் என்ற துணை வேண்டும் -
அவள்முகநூலில் வலம் வந்தால்- தற்
காப்பென்ற திரை வேண்டும்!"

## எனக்கு சிறகு முளைக்கும் சில சந்தர்ப்பங்கள்

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்**
**ஓட்டமாவடி**

சில்லென்ற காற்றோடு சிலிர்த்துப் போகும் குளிரோடு சிதறியடிக்கும் மழையோடு சிதிலமடைந்து கிடக்கும் சில்லறையாய் பெட்டியின் மூடப்பெண்ணை திறந்து அவளை செதுக்கும் உளியாம் மைத் துளியாய் நாளங்களில் ஓடிக்கொண்டிருக்கும் பேனாவைக் கைகளில் தூக்குகின்றாள்...அவளை உந்துதல் கொடுத்து உசுப்பேத்தி விட அவளது தூசு படிந்த டையரியின் அருகே இருக்கும் தேநீர் குவளை ஆர்வமாய் புன்னகைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது அப்பொழுதில்.

நெடுந்தூரப் பயணமதில் பாறைகளில் முட்டி மோதி மின்சார கம்பிகளில் சிக்கித் திக்கித்து மற்றைய பறவைகளின் வீண் பழிகளை வீணாய் தலை சுமந்து அக்கொடூரப் பறவைகளால் கொத்திக் கிழிந்து வலியோடு வழியாய் விழி கசிந்து மெல்ல மெல்லப் பறந்து மெல்லிடை தான் நொந்த அப்பறவை ஓர் அபூர்வ மரமொன்றில் வந்திறங்குகின்றது...

சிறகு கிழிந்த பறவையையோ ஆரத்தழுவி அரவணைத்துக் கொள்கின்றது அவ்வபூர்வ மரம். பறவையோ பத்தும் மறந்து கனவா? நனவா? எனும் அதிர்ச்சியில் உறைந்து அம்மரத்திலேயே தஞ்சம் புகுந்து கொள்கின்றது. மரமோ பசுமையான கனிகளை உணவாயும் அடர்ந்த கிளைகளை கூடாயும் வீசும் காற்றினை இதமாயும் வலித்திருந்த பறவைக்கு மருந்தாய் ஒத்தடமிடுகின்றது...
அவ்விதமான ஒத்தடத்தில் உலகையே மறந்து உல்லாசம் கொள்கின்றது அப் பறவை. தான் கடந்து வந்த கடினமான பாதைக்கு முற்றுப் புள்ளி இதுவோ என திகைத்து மகிழ்ந்தது. அவ்வபூர்ப மரத்தோடு நான் ஒன்றித்துப் போனது. ஆறுதலாய் அடைக்கலம் புகுந்தது. இருந்தபோதும் சிறகுகள் உடைந்ததே நம் வாழ்க்கை முடிந்ததே என மனதோரத்தில் வேதனையால் குமுறுகின்றது அப்பாவப்பட்ட பறவை.
முற்றுப்புள்ளி வைத்து டையரியின் தாளை குத்தி நின்றது அவளது பேனா முனை. அம் முற்றுப்புள்ளியை நனைத்துக் கிடந்தது அவளது கண்ணீர்த் துளி. அவளின் எழுத்துக்களில் குமுறிய பறவை வேறு யாருமில்லை அவளே தான் அதை அறிந்ததும் அவளே தான்!
இறுக்கக் கண்களை மூடி கதிரையில் சிறிது நேரம் சாய்கிறாள். அவளது வாழ்வில் அவள் கடந்து வந்த நெடுந்தூரப் பாதை ஒய்யாரமாய் சிரித்து கண் முன் நிற்கின்றது. அப்பாதையில் அவளை குத்துப் பேச்சுக்களால் குத்திக் கிழித்தவர்கள் ஒரு ஓரம் செய்யாக் குற்றத்தின் வீண் பழிகளை அவள் மேல் சுமத்தி அவளை நொருங்கச் செய்தவர்கள் ஒரு ஓரம் சொந்த உறவாயிருந்தும் அவளை

வார்த்தைகளால் அம்பெய்து குறிவைத்த உறவுகள் ஒரு ஓரம் அவளது தோல்விகளைக் கொண்டாடியும், வெற்றிகளால் வெறி பிடித்தும் அலைந்த சுயநலம் பிடித்த நண்பர்கள் ஒரு ஓரம் நேசம் எனும் பெயரில் அவளது வாழ்க்கையை நாசம் செய்து சென்ற மனிதப் பேய்கள் ஒரு ஓரம் தலையை தடவுவது போல் தடவி கண்ணைப் பிடுங்கி நடுத்தெருவில் விட்ட நாசகர்கள் ஒரு ஓரம்இப்படியாய் அனைவரும் அப்பாதையில் நின்றிருக்க நடுவே கண்களில் கண்ணீர் ததும்ப தலைகுனிந்து நிற்கின்றாள் அவளும் ஓர் சிறகுடைந்த பறவையாய்!
அக்கணம் தான் உணர்கின்றாள் அவளையே அவள் நோகடித்த ரணங்களை. கதிரையில் சாய்ந்தவள் குதிரை வேகத்தில் குதித்தெழுகின்றாள். அப்பறவையை ஆரத்தழுவிய மரம் போல அவளைத் தாங்கும் உறவுகளின் உன்னதத்தை உணர்கின்றாள்.
பேனா முனைகளை மீண்டும் அப்பக்கங்களில் குத்தி தன் சிறகுகளை விரித்து அப்பறவைக்கு சிறகு கொடுக்கத் தயாராகின்றாள்.
தன் வாழ்க்கை அழிந்ததே எனக் குமுறிய பறவையோ அவ்வபூர்வ மரத்தின் அரவணைப்போடு பல நாள் கழித்து விழித்துக் கொள்கின்றது. மீண்டும் சிறகு விரித்துப் பார்ப்போமே என எழுந்து நிற்கின்றது. தயக்கத்தோடே சிறகுகளை மெல்ல விரிக்கின்றது. அதோ அதிசயம்! முன்பிருந்ததை விட சிறகுகள் அடர்த்தியாய் மாறி பறவையைத் தூக்கி விடுகின்றது வான் நோக்கி.
ஆனந்தக் களிப்போடு வேகமாய் பறக்கின்றது கிழிந்து போன சிறகுகளிலிருந்து விண்ணைத் தொடும் சிறகுகளை விரித்து அப்பறவை.அவ்வபூர்வ மரமோ அப்பறவையின் முன்னேற்றம் கண்டு தென்றலை இன்பமாய் அள்ளி வீசுகின்றது பறவையின் பக்கம். பறவையோ இன்பமயமாக தன் இலக்கை நோக்கி மீண்டும் தன் பயணத்தைத் தொடங்குகின்றது. அப்பூர்வ மரமும் அதனோடே சேர்ந்து பயணிக்கின்றது தென்றல் காற்றாய்.

எழுதி முடித்து டயரியை மூடிய அவளும் அப்பறவையைப் போல் சிறகுகளை ஆர்வமாய் விரித்து தன் இலட்சியப் பாதையை நோக்கிச் சென்று தன்னை வலிகளால் வதை செய்த விசித்திர மானுடர்களில் கண் முன் தான் விண்ணுயர பறந்து காட்ட.

## இன்னும் ஞாபகம் இருக்கிறது

**றமீனா ஐயூப்**
**எருக்கலம்பிட்டி**

ஆயிரத்து தொள்ளாயிரத்து
தொண்ணூறாம் ஆண்டு
ஐப்பசி மாதம், என் இருதயத்தினுள்
புதைந்துள்ள
இருபத்தொன்பதாம் திகதி இன்னும்
எனக்கு ஞாபகம் இருக்கிறது.

எழில் கொஞ்சும் எருக்கலம்பிட்டி
ஆயிரத்து தொள்ளாயிரத்து
தொண்ணூறாம் ஆண்டு
ஐப்பசி மாதம், என் இருதயத்தினுள்
புதைந்துள்ள
இருபத்தொன்பதாம் திகதி இன்னும்
எனக்கு ஞாபகம் இருக்கிறது.

எழில் கொஞ்சும் எருக்கலம்பிட்டி
என்னும்,
என் ஊரை இழந்து வந்த அவலம்
இன்னும் ஞாபகம் இருக்கிறது.

திக்கற்று திசையற்று தெற்கு
கடற்கரையில்,
கண்ணீரும் கம்பலையுமாய் கலங்கி
நின்ற காட்சி
இன்னும் ஞாபகம் இருக்கிறது.

கொட்டும் மழையினிலே!
ஓட்டைக் கூடாரத்தினுள்,
ஒழுகும் தண்ணீரில்,
ஒடுங்கிக் கிடந்த அந்த ஓர் தருணம்
இன்னும் ஞாபகம் இருக்கிறது.
பசியாற ஊணின்றி,
படுத்துறங்க பாயின்றி,
நனைந்த ஆடைதனை
களைந்திட முடியாமல், தவித்திருந்த
அந்த ஓர் தருணம்
இன்னும் ஞாபகம் இருக்கிறது.

நனைந்த உடையுடன்,
நடுநடுங்கிய உடலுடன், நடுநிசி
நேரத்தில்,
நடுக்கடல் வழியே பயத்துடன்
பயணித்த தருணம்
இன்னும் ஞாபகம் இருக்கிறது.

# உயர்கல்வியால் இளம் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள்

**அஜீரா கலீல்தீன்**
**காத்தான்குடி**

இன்றைய நவீன உலகில் கல்வியே மாற்றத்திற்கான அடித்தளம்எனக் கூறுவது முற்றிலும் உண்மையே. கல்வியறிவே மனிதனை வளர்ச்சியடையச் செய்வதாகவுள்ளது. தொழிலினையே மையமாகக் கொண்டு வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் சமுதாயமானது பெண்களினது நலனையோ அவர்களின் திறமைகளையோ வெளிக்கொண்டுவருவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்றே கூற வேண்டும்."பெண்கள் நாட்டின் கண்கள்" என்பதனை வலியுறுத்தும் சமுதாயம் பெண்களுக்கான முழுமையான சுதந்திரத்தை வழங்க வேண்டும்.

அத்தோடு பெண்கல்விக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.ஒரு சுதந்திரத்துடனும் தன்னம்பிக்கை அடிப்படையில் கற்பதால் அச் சமுதாயமே சிறப்படையும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

உலக நாடுகளில் கல்வி என்பது மனிதர்களின் மூச்சாகக் காணப்படுகின்றது. கல்விக்காக தமது வாழ்நாள் முழுவதையுமே செலவு செய்வதோடு தமது அறிவினையும் விருத்தி செய்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.இருப்பினும் இன்று பெண் கல்வியானது ஒரு காத்திரமான அறிவுத்தளத்தில் பேசப்படுகின்றது.அது சமுதாயம் வரை உதவுகிறது.

"ஒரு ஆண் கற்பதால் அவன் மட்டுமே கற்கிறான் மாறாக ஒரு பெண் கற்கும் போது மொத்த சமூகமே கற்கிறது"எனலாம்.குடும்பத்தையே சுமக்கும் பெண்களின் கல்வி முன்னேற்றம் பல விதத்திலும் வளர்ச்சியடைந்திருக்கிறது.வீட்டிலேயே



அடிமைப்பட்டுக் கிடந்த பெண்களின் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் நோக்கிலே கல்வியறிவால்வெற்றி பெற்ற பெண்ணின் விண்வெளிப் பயணம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலத்தில் எடுத்த கணிப்பின் படி இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகை 21,283913 என்றும் அதில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக இருக்கிறது.அதில் பெண்களின் சனத்தொகை 10,864073. ஆண்களின்

சனத்தொகை 10,419 840 ஆகும்.

இலங்கையில் பெண்களின் கல்வி தென்னாசிய நாடுகளை விட மிகவும் உயர்வாக உள்ளது.கடந்த காலங்களில் இலங்கை 5.4 வீதம் கல்விக்காக செலவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியில் பெண்கள் பலவேறு சவால்களை எதிர்நோக்கியே வெற்றியடைய வேண்டிய சூழ்நிலைகளைக் காணலாம்.

அந்தவகையில் பெண்களின் கல்வியானது கட்டாயமானதொன்று என்பதோடு பெண்ணே குடும்பத்தின் குலவிளக்கு என்பதனையும் தாண்டி சமூகத்தின் வெற்றியின் சின்னமாகவும் கொள்ளப்படுகின்றாள்.

பெண்ணினம் தழைத்தோங்கும் போது சமூகம் மட்டுமன்று நாடும் முன்னேற்றமடைகின்றது.அந்தவகையிலே பெண்களுக்கான சவால்களாக பின்வருவனவற்றை எடுத்துக்காட்டலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் திரு.கன்னங்கரா அவர்களால் கொண்டுவரப்பட்ட கல்வித்திட்டத்தினால் 1931ல் இலங்கையிலுள்ள எல்லா மக்களுக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வந்தது. இன்று இலங்கையில் 10144 பாடசாலைகளால் 4030000 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இலங்கையின் ஒட்டுமொத்த மாணவர்களின் கல்வியை நோக்கின் சாதாரணதர வயதுக்கு மேற்பட்ட மாணவர்களில் 92% உயர்கல்வியை நாடுகின்றனர். ஆண்கள் பெண்கள் என பிரித்துப் பார்த்தால் மேற்படி படிக்கும் மொத்த ஆண்கள் 95.8% என்றும், பெண்களின் தொகை 93% எனவும் இலங்கையின் கல்வி அமைச்சு அறிக்கை உள்ளது. இந்நிலை இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சமமாக இல்லை. கடந்த 30 வருட போரின் காரணத்தினாலும், வேறு காரணங்களாலும் இலங்கையின் சில பகுதிகளில் கல்வி நிலை



பாதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் உயர்கல்வி பெறும் பெண்கள் 81.3% அம்பாறை 87.2% நுவரெலியாவில் 80.1% என தேசிய பெண் கல்வி மட்டத்தை விட குறைந்தளவே பதிவாகிறது எனலாம். 2010 ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குப் போனவர்களில் 58% பெண்களாகும். இதற்கு காரணம் ஆண்கள் போரிற்குப் பயந்து வெளிநாடுகளுக்கு சென்றமையினால் போதிய பாதுகாப்பு பெண்களுக்கு கிடைக்கவில்லை என்றே கூறலாம்.இவற்றையெல்லாம் தாண்டி பெண்கள் உயர் கல்வியினை கற்றாலும் 78.80% கலைத்துறையிலும், வர்த்தகத்திலும் ஆர்வம் காட்டியமையினால் பெண்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவானதோடு கல்வியும் பயனற்றதாக காணப்பட்டமையால் பலவேறு சவால்களுக்கு மத்தியிலேயே கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கது.

காலத்திற்கு காலம் பெண்களின் கல்வியானது பல திருப்புமுனைகளுடனேயே சமூகத்தினதும் கலாச்சாரத்தினதும் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றது. பலவேறு துன்பங்களைத் தாண்டி குடும்பத்தினை வெற்றிப்பாதைக்குக் கொண்டு சென்ற பெருமை பெண்களையே சாரும்

எனலாம். ஆனால் இன்றும் பல சவால்களை மாணவிகள் எதிர்நோக்குகின்றனர். அத்தடைகள் அனைத்தையும் தாண்டி, தன்னையும் தனது சமூகத்தையும் மேன்நிலைக்கு கொண்டுவருபவர்கள் பெண்களாவர்.

பெண்கள் எதிர்நோக்கும் சவால்களாக உயர் கல்விக்காக செல்லும் பெண் எதிர்நோக்குவது சமூகத்தின் மூலம் வருகின்றது அதாவது ஒரு பெண் தானுள்ள சூழலை விட்டு வேறு சூழலுக்கு செல்லும் போது அவளது உடை, நடை, பாவனை அனைத்தும் மாற்றம் அடையும் இதனால் சமூகத்தில் அப்பெண் ஒரு வித்தியாசமாக நோக்கப்படுவாள்.

பெண்கள் என்பதால் எவ்வளவு கெட்டித்தனமும் அறிவும் இருந்தும் சில வரைமுறைகட்குட்பட்டே விரும்பிய துறைகளைத் தெரிவு செய்கின்றனர். இதற்கானகாரணம்அவரவர்கட்குள்ள சமூகச் சட்டங்களும் பரம்பரைரீதியான அடிபணிவுகளுமாகும்.

பெண்கள் உயர்கல்விக்காக செல்லும் இடத்தில் எதிர்நோக்கும் ஏனைய சவால் பகிடிவதை அதாவது இங்கு பெண்ணானவளுக்கு பகிடிவதை என்பது குறிப்பிட்ட எல்லையினுள் நிற்காது அது எல்லை மீறும் போது அது அவளுக்கு பெரிய சவால் ஆகின்றது.

ஒரு பல்கலைக்கழக கல்வி கற்கும் மாணவிக்கு திருமண வாழ்க்கையினை தேர்வு செய்கின்ற போது அங்கு அவளது நடத்தைகளும் எதிர்காலமும் கேள்விக்குள்ளாவதுடன் அவளது தகுதிக்கேற்ற வரனொன்றைத் தேடிக் கொள்வதிலும் மற்றும் வாழப்போகும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படும் தாழ்வுச் சிக்கல்கழும் இவளைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது .

ஒரு பெண் உயர் கல்வியை தொடர்கிறாள் எனின் அவள் அக்கல்வியை தொடர தேவையான பணம் இன்மையால் தனது குடும்ப வறுமையாலும் அவளது படிப்பினை தொடர பெரிய சவால் ஆகின்றது.

அடுத்து சிலருக்கு பாதுகாப்பான தங்குமிடவசதியும் கிடைப்பதில்லை சிலர் பேரூந்துகளில் அதிகதூரம் பயணம் செய்யவேண்டியுள்ளது. அவ்வாறான வேளைகளில் சில ஆண்கள் அவர்களை உரசுவது பிழையாக நடக்க முற்படுவது இதுவும் அவர்களுக்கான பாரியசவாலாகும். ஒரு பெண் உயர் கல்வி தொடர தூர இடம் செல்லும் போதும் அங்கு தனது மாதாந்த செயற்பாடான மாதவிடாய் சமயத்தில் அவற்றை பராமரிப்பதும் தனது கல்வியை தொடர்பதும் பெரிய சவால் ஆகும்.

பெண்கள் தங்களது மத கலாசாரத்திற்கேற்ப ஆடைகள் அணிய வேண்டும் என்ற கோட்பாடு உள்ளது (முஸ்லிம்கள் பர்தா அணிய வேண்டும் என்பது கோட்பாடு)

ஆனால் உயர்கல்வி செல்லும் போது அப் பல்கலைகழத்துக்குரிய கட்டாய ஆடைகளை அணிய சொல்வது பெண்களுக்கு கட்டாய சவால்களாக உள்ளன.

அடுத்து காலம்காலமாக வீட்டில் ஆண் பிள்ளைகளுக்கு போசாக்கானஉணவும் பெண்பிள்ளைகளுக்கு சாதாரண உணவு அல்லது குறைவான உணவு வழக்கப்பவதை அவதானிக்கலாம் ஆணால் மாதாந்தம் இழக்கப்படும் சத்துக்களை ஈடு செய்யமுடியாமல் அல்லல் படுகின்றனர்.

குறிப்பிட்ட சில கல்லூரிகளில் விரிவுரையாளர்களாலும் சில பாலியல் தொல்லைகள் மேற்கொள்ளப் படுகின்றன அவற்றுக்கு இணக்கம் செய்யாதவர்களின் பரீட்சை புள்ளிகள் குறைக்கப்படும், ரியூட்டோரியல் வெட்டப்படும் நிலைகளையும் நோக்கமுடியும்.

இவ்வாறாக பெண்களுக்கான பாலியல் தொல்லைகள் வன்முறைகள்



போன்றவை கொவிற்றுக்கு முன் 1/5 பங்கிருந்தது தற்போது 20.4% காணப்படுகின்றது இது பெண் எதிர் நோக்கும் பாரிய சவால்உயர்கல்விக்கு செல்பவர்கள் அனைவரும் வசதி படைத்தவர் அல்லர் இங்கு இரு விதமான பெண்களும் வாழ்கின்றனர் இதனால் இவர்களிடையே பாகுபாடுகள் காணப்படும் இதுவும் அவர்கள் எதிர் நோக்கும் சவாலாகும்.

பெண்கள் அதிகநேர விரிவுரை ,அழகு நோக்கம் , உரிய நேரத்துக்கு சத்தான உணவைப் பெறுவதில் ஏற்படும் தாமதம், தடைகள் காரணமாக உணவைக்குறைப்பதனால் அல்லது தவிர்ப்பதனால் பாரிய நோய்களுக்கு உள்ளாகின்றனர் இதுவும் ஒரு சவால் ஆகும்.

சில விடுதிகளில் வாழும் பெண்கள் அங்குள்ள அதிக கட்டுப்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்படுவதுடன் மிகவிரைவாக
நோய் தொற்றுக்குள்ளாகும் நிலையும் காணப்படுகிறது. நிலை அடுத்து சிலர் மேற் சொல்லப்பட்ட ஏதோ ஒரு வகையான பாதிப்புக்குள்ளாகும் போது இதை வெளியிட நம்பிக்கையான ஒரு துணையின்மை வெளியில் சொல்வதால் தனது மானம் மரியாதைக்கு பங்கம் ஏற்படும் எனும் அச்சம் காரணமாகவும் வெளியில் சொல்ல வெட்கப்பட்டு உள இறுக்கம் போன்றவற்றுக்கு உட்பட்டு தற்கொலையில் முடிந்த சம்பவங்களும் உண்டு.

இத்தகைய சவால்கள் அனைத்தையும் தாண்டி "துணிந்த பெண் துயரம் கொள்ளாதே " என தன்னை பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக தன்னை மாற்றிக் கொண்டு தனது தோல்விக்கற்களை எல்லாம் வெற்றிப் படிக்கற்களாக மாற்றி சாதனைப் பெண்ணாக வலம் வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

BISMI
INTERMEDIATE SCHOOL

# 2023 புதிய மாணவ, மாணவிகள் அனுமதி





## பிஸ்மி இடைநிலைப் பாடசாலை

### தரம் 06 தொடக்கம் தரம் 11

வரையிலான வகுப்புகளுக்கான புதிய மாணவ, மாணவிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அறிவு, ஆன்மீகம், திறன், மனப்பாங்குசார் விருத்திகொண்ட மாணவர் பரம்பரையை நோக்கிய எமது பயணத்தில் உங்கள் பிள்ளைகளையும் இணைத்துக்கொள்ள இன்றே விண்ணப்பியுங்கள்.

- 01 பாடசாலைப் பாடங்கள்
- 02 அடிப்படை இஸ்லாமிய பாடநெறி
- 03 ஆன்மீக வழிகாட்டல் மற்றும் பயிற்றுவிப்பு
- 04 திறன் விருத்தி மற்றும் பயிற்றுவிப்பு
- 05 வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப் பாடங்கள்
- 06 அஹதிய்யா பாடநெறி
- 07 தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (ICT)
- 08 சுயகற்றலுக்கான செயல்நூல்கள்

**விண்ணப்பங்களுக்கு**

0764443004 | 0775389353
0652248373 | 0777300454

பிஸ்மி கல்வி நிறுவனம்,
இல. 38 கடற்கரை வீதி புதிய காத்தான்குடி 03

bismioffice0@gmail.com

Bismiinstitute

## நதி வழியே ஒரு பயணம்

கலேவெல லரீபா பதுர்தீன்



பனிப்பாறைக் கருவினுள்ளே
சாரல்களின் தூறல்களுக்கு
மத்தியில் தொடரும் என் பயணம்.

வீறிட்டுப் பிரசவமாகும் குழந்தை
போலல்லாது
ஓர் இனிதான ராகத்தை
முணுமுணுத்துக் கொண்டே
வளைந்து நெளிந்து நளினமாய்
நடையழகு என்னது.
தென்றலின் வருடலும் எனைத் தழுவ
அதன் இனிமையில் கிளர்ந்தெழும்
காதலோடு தொடரும் என்பயணம்.

வழியில் எதிர்.கொள்ளும்
கூழாங்கற்களை தடவிக்
கொடுத்துதலைசாயும்
நாணற்புற்களோடு கைகுலுக்கி
அன்போடு விடை பெற்றே
முன்னேறுகிறேன்.

ஏன் பெரும் பாறாங்கற்கள் கூட
முன் நின்று மறைத்தாலும்
மலைப்பதில்லை சளைப்பதில்லை
என் இலக்கை அடைய
முன்னேறுகிறேன்.
பின்வாங்கி என்றும் திரும்பியதில்லை
என் வழியில் என்றும்
தவறியதுமில்லை.

## ஹெல்த் டிப்ஸ்

- ஆமணக்கு விதைப்பருப்பை தண்ணீரில் ஊற வைத்து அரைத்து சாப்பிட்டால் மலக்கட்டு தீரும்.
- அரை லிட்டர் ஆமணக்கு எண்ணெயுடன் கடுக்காய் 50 கிராம் சேர்த்து காய்ச்சி வைத்து கொள்ளவும். இதனை தினமும் ஒரு ஸ்பூன் அளவுக்கு சாப்பிட்டால் குணமடையும்.
- மலச்சிக்கல் பிரச்னை உள்ளவர்கள் விளக்கெண்ணெய்யை தினமும் ஆசன வாயில் தடவினால் தீர்வு காணலாம்.
- ஆலம் பழத்தை உலர்த்தி பொடி செய்து சர்க்கரை கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டு வந்தால் மூலம் குணமாகும். ஆவாரம் பூவை துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமாகும்.
- இஞ்சி சாற்றில் கடுக்காய் பொடியை கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் பத்து கிராம் அளவுக்கு சாப்பிட்டால் விடுதலை பெறலாம்.
- இஞ்சியை துவையல் அல்லது பச்சடி செய்து சாப்பிடுவதன் மூலம் மலச்சிக்கல் தீரும்.
- இலந்தை இலையை அரைத்து புளித்த மோரில் நெல்லிக்காய் அளவு கலந்து குடித்தால் மூலக்கடுப்பு குணமாகும்.
- மாதுளம்பூ, கசகசா, வேம்பு, இவைகளை சூரணித்து 3 தடவை 5 மிளகளவு பாலுடன் கொடுக்க இரத்த மூத்திரம் குணமாகும்.
- மூல நோய் உள்ளவர்கள் தேங்காய் நாரின் சாறெடுத்துக் குழந்தைகளின் சிறுநீரில் சேர்த்து, மூலத்தில் தேய்த்தால் குணமாகும். பசும் பாலை, ஆடு அல்லது மாட்டுக் கொழுப்பில் குழைத்து மூலத்தில் தடவி வந்தாலும் மூல நோய் குணமாகும்.

## SRILANKA PEN CLUB

ஆற்றலுள்ள பெண்களின்
அமைப்பு நடத்தும்
இரண்டாவது தேசிய மாநாடு
இனிதே நடைபெற
மனமுவந்து வாழ்த்துகிறேன்

கௌரவ கலாநிதி Z A பஷீர் jp.
பணிப்பாளர்
ஈஸ்டர்ன் ஜூவலரி,
கல்முனை வீதி,
ஹிஜ்ரா சந்தி
சம்மாந்துறை.

CONGRATULATIONS ON THE 02ND NATIONAL CONFERENCE OF EMPOWERED WOMEN OF SRILANKA PEN CLUB.

~~~~~~~~~~~~~~~

Mr. Razy Hashim,
Media Secretary to
The Honourable
M.H.M.Haleem M.P


~~~~~~~~~~~~~~~



# மகுடம் சூடிய ஆளுமைகள்

தொகுப்பு : ஷாமென் நிசாம்டீன்



## கலாநிதி:
## மரீனா இல்யாஸ்ஷாபி

மலையகத்தில் தெஹி தெனிய மடிகே என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட மரீனா இல்யாஸ் ஷாபி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி ஆவார். மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் பட்டபின் படிப்பை முடித்த இவர் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் ஆங்கில விரிவுரையாளராகக் கடமை ஆற்றிவிட்டு, நியூஸிலாந்துக்குப் புலம்பெயர்ந்து சென்று தன் கல்வி பயணத்தை தொடர்ந்து வருகிறார்.

ஆரம்ப காலத்தில் மொழியியல் துறையில் மட்டுமே பயணித்த இவர், நியூஸிலாந்த்தில் நிலவும் சமூக, கலாச்சார சீரழிவை அனுபவத்தில் கண்ட பின்பு உளவியல் துறையிலும் கவனம் செலுத்தலானார். நியூசிலாந்தில் மிகச்சிறந்த தேசிய பல்கலைக்கழகங்களான விக்டோரியா பல்கலைக்கழகம், ஒக்கலந்து பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தனது கல்விப் பயணத்தைத் தொடர்ந்த இவர் மொழியியல், உளவியல் சார்ந்த துறைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி உள்ளார் . உள்நாட்டு , வெளிநாட்டு கல்வி மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு தனது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தும் உள்ளார் . இவரது ஆய்வுகள் உளவியல் பிரச்சினைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பார்க்க முயற்சிக்கின்றன.

இவரின் இலக்கியப் பயணத்தை எடுத்து நோக்கினால் இவர் இதுவரை மூன்று புத்தகங்கள் வெளியிட்டுள்ளார். “தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ் சிறுகதைகள்“ என்ற ஆய்வு நூல், “குமுறுகின்ற எரிமலைகள்“ என்ற சிறுகதைத் தொகுதி, “இரவைக் காக்கும் இமைகள்“ என்ற கவிதை தொகுதி ஆகிய நூல்களை வெளியிட்டுள்ள இவர் “என் சிறையில் சிக்கிய பூமி “ என்ற தலைப்பில் ஒரு பயணக் கட்டுரைத் தொகுப்பையும் வெளியிடத் தயாராகி வருகிறார். இலங்கையின் தேசிய பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகளில் மட்டுமின்றி இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் இவரது ஏராளமான படைப்புகள் வெளியாகி இருக்கின்றன. ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட இவரது நாடகங்கள் முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகி இருக்கின்றன. சமூக சேவையில் மட்டுமல்ல, மார்க்க அழைப்புப் பணியிலும் ஈடுபாடு காட்டி வரும் இவர் உற்சாகமூட்டும் பேச்சாளரும் ஆவார்.



# கலாபூஷணம் : எஸ். இஸ்மாலிஹா

கண்டிக்கு அருகில் உள்ள புசல்லாவை என்ற ஊரை பிறப்பிடமாகக் கொண்ட எஸ். இஸ்மாலிஹா 27.01.1952 ஆம் ஆண்டில் பிறந்தார். புசல்லாவை பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்றார். கண்டியைச் சேர்ந்த திரைப்பட நடிகர் எஸ். வி. ராஜா இவரது கணவராவார்.

" பயணம் முடியவில்லை " என்ற சிறுகதை 1970 இல் காங்கிரஸ் பத்திரிகையில் வெளிவந்ததைத் தொடர்ந்து அவரது எழுத்துலகப் பயணம் தொடர்ந்தது. " தினகரன் " , "வீரகேசரி " , " தினக்குரல் " , " நான் " , " குன்றின் குரல் " , " நெத் " போன்ற பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகள் மட்டுமன்றி கவிதைகளும் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் கவியரங்குகளிலும் இடம் பெற்றுள்ளன

கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கமும் " மாவத்த " சஞ்சிகை வெளியீட்டாளரும் கூட்டாக வெளியிட்ட கவிஞர் பராக்கிரம கொடிதுவக்குவினால் மொழி பெயர்க்கப்பட்ட " இந்து சா லங்கா " , " பிபதென பெய " ஆகிய நூல்களில் சிங்களத்தில் இவரது கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

" கனவுப் படகு " என்ற வெளியீட்டிலும் " மை " என்ற ஊடறு வெளியீடு ( ஜேர்மன் ) ஆகியவற்றிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. மத்திய மாகாண சாகித்திய விழா மலரில் " காயம் பூவும் வாழை மரமும் " என்ற சிறுகதை இடம் பெற்றுள்ளது. துரை விஸ்வநாதனின் " உழைக்கப் பிறந்தவர்கள் " என்ற சிறுகதைத் தொகுதியிலும், அந்தனி ஜீவாவின் " அம்மா " நூலிலும் இவரது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. எஸ். முத்தையா பவள விழா மலரிலும் " அகிலம் " இராமசாமி விழா மலரிலும் பல்வேறு பாடசாலை விழா மலர்களிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் வெளிவந்த தமிழ்த் திரைப்படமான "ஷாமிலாவின் இதய ராகம்" படத்திற்கு இரண்டு பாடல்களை எழுதியுள்ளார். 1997 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இவரது " காயம்பூ " சிறுகதைக்கு பரிசளித்தது.

25 ஆம் ஆண்டு இலக்கிய சேவைக்காக தினகரன் விருது, 1996 இல் எச். சீ. ஏ. எல். ஏ. கலைஞர் விருது, 1997 இலும், 2019 இலும் இரத்தின தீப விருது, 2014 ஹிஸ்புல்லா பவுண்டேசன் வழங்கிய பரிசு, 2022 இல் கலாபூஷண் விருது போன்றவை இவர் பெற்ற விருதுகளாகும்.

1977 முதல் 2012 வரை அரசாங்கப் பாடசாலை அதிபராக கடமையாற்றிய இவர் ஓய்வு பெற்ற பின் தனியார் பாடசாலையில் கற்பித்து வருகிறார்.

கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றுபா ஹமீம் சிரேஸ்ட உதவி நூலகராக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடையாற்றுகிறார்.

இவர் இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள மருதமுனையில் மர்ஹூம் அப்துல் ஹமிட் முஹமட் மஜீத், செய்யத் உம்மா முஹம்மது இப்றாகிம் ஆகியோரின் மகளாக 1968.10.22ல் பிறந்தாா். 1996 மார்ச் மாதம் 3ம் திகதி பிரபல உயிரியல் ஆசிரியரான எம். ஐ. நூறுல் ஹமீம் அவர்களை திருமணம் செய்து இரண்டு ஆண் பிள்ளைகளுக்கு தாயார் ஆனார்.

கலாநிதி முஹம்மட் மஜீட் மஸ்றுபா அவரது ஆரம்பம் முதல் ஜீ.சீ.ஈ உயர்தரம் வரை கமு / கமு அல்மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்று 1988 / 1989 இல் கிழக்கு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் (2nd Class- upper division) உயிரியல் விஞ்ஞானத்தில் இளங் கலைமானி பட்டம் பெற்றதோடு உயிரியல் விஞ்ஞான துறையில் 1995 ஆம் ஆண்டுக்கான அதி உயர் பெறுபேற்றுக்கான ரதினி ஆனந்தமூர்த்தி ஞாபகார்த்த விருதையும் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழக கல்விச் சேவைக்குள் நுழைவதற்கு முதல் இவர் ஒரு ஆங்கில ஆசிரியராக கடமையாற்றியதுடன் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கில போதகராக 1997இல் தற்காலிகமாக இணைந்தார். பின்னர் 1998 ஏப்ரல் மாதம் தொடங்கி கல்விசார் நூலக துறையில் தனது சேவையை ஆரம்பித்தார். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட நூலகத்தின் தலைவராகவும் மின்னணு வளங்கள் மற்றும் தகவல் சேவைகளின் தலைவராகவும் நூலீட்டல் பிரிவு பருவ வெளியீடுகள் பிரிவு, போன்றவற்றின் தலைவராகவும் தனது நூலக சேவைகளை விரிவு படுத்தி உள்ளார்.



**கலாநிதி :**
**முஹம்மட் மஜீட் மஸ்றுபா**

அது மட்டுமல்லாது 2019 முதல் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பாலின சமத்துவம் மற்றும் ஒப்புரவு நிலையத்தின் பணிப்பாளராகவும் கடமை ஆற்றி வருகின்றார்.

இவர் தனது பட்டபின் கல்வின் டிப்ளமோவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் நூலகத் தகவல் விஞ்ஞானத்தில் முதுமானி பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் மற்றும் தனது கலாநிதி பட்டத்தை மலேசியாவில் உள்ள முகாமைத்துவ விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் ( Management & Science University) பெற்றுக் கொண்டார்.

அத்துடன் நூலகத் தகவல் விஞ்ஞான துறையில் நாடளாவியரீதியில் சேவையாற்றுவதற்காக சிறீலங்கா நூலக சங்கத்தில் (SLLA) இணைந்து கொண்ட இவர் தற்போது அதன் Fellow Member ஆகவும் உள்ளதுடன் அமெரிக்கா நூலக சங்கத்தின் உறுப்பினராகவும் நூலக அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்குமான சர்வதேச கூட்டமைப்பின் (IFLA) ஒரு உறுப்பினராகவும் இருந்து தனது சேவையை சர்வதேச மட்டத்துக்கு வியாபித்துள்ளார். பாடசாலை மற்றும் பொது நூலகங்களை பயிற்றுவிக்கும் தேசிய நூலகமும் ஆவணமாக்கல் சபை சிறீலங்கா நூலக சங்கம், மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி

பயிற்சிகளுக்குமான கிழக்கு மாகாண அமைச்சின் நிலையம் (MDTB) போன்றவற்றில் ஒரு வளவாளராகவும் உள்ளார்.

நூலகத் தகவல் விஞ்ஞானத் துறையில் ஒரு சிறந்த ஆய்வாளரான இவர் இதுவரையில் 25க்கு அதிகமான ஆய்வுக் கட்டுரைகளையும் பல அத்தியாயங்களையும் எழுதி சர்வதேச மற்றும் உள்நாட்டு மகாநாடுகளிலும் கல்விசார் பருவவெளியீடுகளையும் வெளியிட்டுள்ளார். அதி சிறந்த தரத்திலான ஆய்வு கட்டுரைகளுக்கு பல்கலைக்கழகத்தின் மூதவை விருதுகளை (Senet Honors) பல தடவை பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் தனது சேவை காலத்தில் பல்வேறு ளிநாட்டு பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக நியூசிலாந்தில் உள்ள விக்டோரியா பல்கலைக்கழகத்தில் தகவல் எழுத்தறிவு தொழில்நுட்பமும் எனும் பயிற்சியை 2007 லும் புதுடில்லியிலுள்ள அறிவியல் தொடர்பு மற்றும் தகவல் ஆராய்ச்சிகளுக்கான தேசிய நிறுவனத்தில் (NISCAIR) மின்னியல் வளங்களை முகாமை செய்தல் எனும் பயிற்சியையும் பெற்றுள்ளார்

இவரது தந்தை மர்ஹூம் அதிபர் திலகம் ஏ.எச்.எம் மஜீத் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். இவர் தந்தையின் எழுத்து பணியில் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றார். சிறீலங்கா பென்கிளப் மற்றும் மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஆலோசராவும் கலை இலக்கியத் துறைக்கு தற்போது பிரவேசித்துள்ளார்.

## மூலம் குணமாக

- அகத்திக் கீரை சாற்றில் ஐந்து கடுக்காய்களை உடைத்துப் போட்டு கஷாயம் வைத்து ஆசனவாயில் தடவினால் எரிச்சல் குணமாகும்.
- துத்திக் கீரை ஆமணக்கு எண்ணையில் அரைத்து ஆசன வாயில் தடவலாம்.
- கெட்டி சுக்கினை நல்லெண்ணையில் தோய்த்து நெருப்பில் வாட்டி பொடி செய்து இரவில் பாலில் இரண்டு சிட்டிகை அளவு அருந்தலாம்.
- கோதுமை தவிர்த்து தினம் இரவில் வேகவைத்த நிலக்கடலை அல்லது ஏதேனும் ஒரு பழம் உண்டு வர மலச்சிக்கல் நீங்கி 'மூலம்' எளிதில் குணமாகும்.
- வல்லரை முருங்கை கீரைகளை அடிக்கடி உண்ணுதல்,பப்பாளிப்பழம் அடிக்கடி சாப்பிடுதலும் புளிப்பு பொருட்களை உண்ணுதலை குறைத்தலும் நினைவு ஆற்றலை கூட்டும், மலச்சிக்கலையும் தவிர்க்கும்.
- கருணைக்கிழங்கு: மூலத்தால் உண்டாகும் புண்களை கருணைக் கிழங்கு குணப்படுத்தும்
- அக்ரூட் விதையை ஆசனவாயில் சிறிது செருகி வைத்துக் கொண்டால் மூல வேதனை, வலி குறையும்.
- அம்மான் பச்சரிசிக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் மலக்கட்டு உடையும்.
- அரைக்கீரையுடன் பாசிப்பயிறு, மிளகு, நெய் சேர்த்து சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமாகும்.
- ஆகாயத் தாமரை இலையை அரைத்து கட்டினால் வெளிமூலம், மூலக்கட்டி போன்றவை குணமாகும்.
- ஆடையொட்டி இலை, வில்வ இலை இரண்டையும் சம அளவில் எடுத்து பாலில் கலந்து குடித்து வந்தால் குடல் புண் மற்றும் மூலப்புண் குணமாகும்.



## கலாபூஷணம்:
## மும்தாஜ் பேகம் ஹமீட்

இவர் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறையில் சாகுல் ஹமீது, சலாமத்து பீவி தம்பதிகளின் மூத்த புதல்வியாவார். இவர் சம்மாந்துறை தேசிய பாடசாலையில் கல்வியைக் கற்று முடித்ததுடன் 1968ம் ஆண்டு தனது சிறுபராயத்திலேயே இலக்கியத்துறையில் அடியெடுத்து வைத்துள்ளார்

1974இல் இவர் ஒலுவிலைச் சேர்ந்த மர்ஹூம் மு.ஆ. அப்துல் ஹமீட் கணித ஆசிரியரை மணமுடித்தார். இவர்களுக்கு முகம்மட் பௌமி(ஆசிரியர்), பஸ்மினா பேகம்(ஆசிரியை) ஆகிய இரு பிள்ளைகள் உள்ளனர். இவர் மேடை நாடகங்களில் நடித்துள்ள ஹயார். ஹமீட் என்ற பெயரிலும் எழுதியுள்ளார்.மும்தாஜ் பேகமான இவர் 1979இல் வாழைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக கடமை புரிந்தார் அதன்பின் 1968இல் இவர் ஒட்டமாவடி பாத்திமா பாளிகா மகா வித்தியாலயத்தில் பாடசாலை நூலகராக நியமனம் பெற்று சேவை புரிந்தார். அதன்பின் சம்மாந்துறை தேசிய பாடசாலையிலும், ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலையிலும் கடமை புரிந்து ஓய்வு பெற்றார் இவர் மாணவர்களுக்கு கலையுணர்வை ஊட்டி கலைவிழா, தமிழ்த் தின விழா போன்ற போட்டிகளில் மாணவர்களை வெற்றி பெறச் செய்துள்ளார்.

இவர் தற்போது கலை இலக்கியப்பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இயங்குவதுடன் அவ்வப்போது கலை இலக்கியப் பேட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களும் பெற்றுள்ளார். இவரது ஆக்கங்கள் மும்தாஜ் பேகம், மும்தாஜ் ஹமீட் என்ற பெயரிலும் பேகம் தாஜ் ஹமீட் பிரியா என்ற புனைப் பெயரிலும் தினகரன், வீரகேசரி, மீள் பார்வை, சுடர்ஒளி, ஒளி அரசு, மித்திரன், மெட்ரோ நியூஸ் போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

இவரது ஆரம்பப் படைப்புக்கள் தினபதி, சிந்தாமணி, பத்திரிகைகளிலும், வானொலியில் பூவும் பொட்டும் நிகழ்ச்சிகளில் மும்தாஜ் பேகம் என்ற பெயரில் ஒலிபரப்பானதுடன் தற்போது வர்த்தக சேவை ஒலி மஞ்சரியிலும் இவர் சம்மாந்துறை எழுத்தாளர் சங்கம், நிறைமதி கலை இலக்கிய சங்கங்கள், சிறிலங்கா பென் கிளப், கடல் பறவை போன்ற அமைப்புக்களில் முக்கியஸ்தராக இருந்து இன்றும் கலை இலக்கியப் பணிகளை ஆற்றிக் கொண்டு இயங்குகின்றார் .இவர் 02.12.2017ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை கலாச்சாரப் பிரிவினால் கலை இலக்கியத்துறையில் சிறந்த பங்களிப்பை நல்கியமைக்காக விருது வழங்கி கௌரவிக்கபபட்டார் 21.12.2017இல் அட்டாளைச்சேனை கலாச்சாரப் பிரிவினால் சிறந்த கலைஞராக கௌரவிக்கப்பட்டார். 10.12.2018ல் அட்டடாளைச்சேனை கலாச்சாரப் பிரிவினால்”சுவதம்” விருந்து வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.2020இல் கிழக்கு இளைஞர் அமைப்பினால் சிறந்த கலைஞரென விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 03.03.2019இல் தமிழ் ஊடக வலையமைப்பினால் சம்மாந்துறை “பெண்கள் முதன்மைகளும் எழுத்தாளர்களும்” னெறு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார் 2020இல்நூருன்ஜன் நஜிமுல் ஹுசைன் தொகுத்து வெளியிட்ட “மின்னும் தாரகைகள்”நூலிலும் பதிவாகியுள்ளார். எமது நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் கெப்டன் பதிப்பகத்தில் “உடைந்த கப்பல்”கவிதைத் தொகுதியிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.08.04.2020ல் அட்டாளைச்சேனை பிரதேச சபையால் கலை,இலக்கியத்துறையில் சிறந்த பங்களிப்புச் செய்தமைக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

13.12.2021இல் சிறிலங்கா பென் கிளப்பினால் சுட்டுவிரல் நூல் வெளியீட்டு பெண் எழுத்தாளர் மகா நாட்டின் போது கிழக்கு இளைஞர் அமைப்பினால் கௌரவிக்கப்பட்டார்.

அகில இலங்கை கலாசார பிரிவினால் 2021இல் “கலாபூஷணம்” அரச விருது வழங்கி கௌரவிப்பப்பட்டார். தற்போது முகநூல் குழுமங்களினால் நடாத்தப்படும் கவிதைப் போட்டிகளிலும் வெற்றி பெற்று பல சான்றிதழ்களையும் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## இலக்கிய வித்தகர் சம்மாந்துறை மஷூறா சுஹூறுத்தீன்

சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர் சித்தி மஷூறா சுஹூறுத்தீன். 1979ல் மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலியில் எழுதவாரம்பித்து இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் பல சஞ்சிகைகளிலும் எழுதியவர்.தற்போது பல மின் சஞ்சிகைகளிலும் எழுதி வருகிறார்.ளவைால அயளாழழசய ளராரசரனநநடெ என்ற தனது முகநூல் பக்கத்திலும் தனது படைப்புகளை பதிவேற்றி வருகிறார்.
கவிதை, சிறுகதை ,கட்டுரை, நாடகம் பாடல், வில்லுப்பாடல் ,தாளலயம் பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என பல் துறைகளிலும் தேர்ந்தவராவார். மாவடிப்பள்ளி கமு.:. அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணிபுரியும் இவர், மொழித் தேர்ச்சியிலும் படைப்பாக்கத்திறனிலும் மாணவர்களை சிறந்த அடைவைப் பெறச்செய்தவர்.
2017ல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய ”கலைஞர் சுவதம்”விருது உட்பட இலக்கியத்திற்காக பதின்மூன்று விருதுகள் பெற்றிருக்கிறார்.இலங்கை இந்தியா உட்பட பத்து கவிதைத் தொகுதிகளில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. கடந்த வருடம்(2021)ல்நதிகளின் தேசியகீதம் எனும் இவரது சுயகவிதைத் தொகுதியும் வெளிவந்துள்ளது.தவிர அறுபத்து மூன்று முஸ்லீம் பெண்களின் கவிதைகளைத் தொகுத்து ”சுட்டுவிரல்”எனும் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டிருக்கிறார். இதுவெ இலங்கையில் முஸ்லீம் பெண்களின் முதலாவது கவிதைத் தொகுதியுமாகும்.அச்சு,றோணியோ,கையழுத்து என முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளை வெளியிட்டிருக்கிறார். கையெழுத்தாக ஆரம்பித்து றோணியோவில் முடிவுற்ற”நிறைமதி” சஞ்சிகை எண்பது காலப் பகுதிகளில் தேசியமட்டத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆக்கமாகும்.

காலாண்டு சஞ்சிகையான ”நிறைமதி” இருபத்தி இரண்டு இதழ்களை வெளியிட்டிருந்தது.

இவரால் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிவரும் **Sri Lanka Pen Club** ஆற்றலுள்ள பெண்களுக்கு களம் அமைக்கும் பணியைச் செய்து வருகிறது.

கடந்த வருடமும் இவ்வமைப்பின்மூலம் முஸ்லீம் பெண் எழுத்தாளர்களுக்கான தேசிய மகாநாடு ஒன்றினையும் நடாத்தியிருந்தார்.

இவ்வமைப்பின் மூலம் ”அவரி”என்ற மின் சஞ்சிகையொன்றினையும் வெளியிட்டு வருகிறார்.
தனது மாணாக்கர்களின் கவிதைகளைத் தொகுத்து இரண்டு தொகுதிகள் ரோணியோவில் வெளியிட்டிருக்கிறார்.

மாணவர்களை வழிநடத்தி வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகள் நான்கு தடவைகள் மாகாணமட்டத்தில் வெற்றியீட்டியிருக்கின்றன.

கலாசார அலுவல்கள் அமைச்சின் வெளியீடான வாழ்வோரை வாழ்த்துவோம்,அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் வரலாறு மற்றும் இலங்கை தமிழிலக்கிய வளர்ச்சி போன்ற நூல்களுட்பட பதினைந்திற்கு மேற்பட்ட களங்களில் இவர் பற்றிய பதிவுகள் பதிவிடப்பட்டுள்ளன.

பாடலாக்கம், கவிதை, சிறுகதை, நாடகத்தயாரிப்பு என தேசிய மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

இவரது பன்னிரெண்டு நாடகங்கள் மாவட்டம் ,மாகாணம்;தேசியமட்டம் என வெற்றிகளையீட்டியுள்ளன.தேசிய மட்டத்தில்மூன்று நாடகங்கள்(பள்ளி நாடகங்கள்) வெற்றியீட்டியுள்ளன. தேசிய மட்டத்தில் நாடகத் தயாரிப்பிற்கான விருதும் பெற்றுள்ளார். வீரகேசரி , தினக்குரல், பிறைவானொலி,ஊவா வானொலி வெற்றி வானொலி ,ரூபவாஹினி போன்றவற்றில் இவர் செவ்விகள் காணப்பட்டுள்ளார்.பல்வேறு இலக்கிய அமைப்புகளில் அங்கம் வகித்து பணியாற்றி வரும் இவர் அகில இலங்கை சமாதான நீதிவானுமாவார்.

கிழக்குமாகாண கலாசார திணைக்களத்தின் 2021ம்ஆண்டிற்கான இலக்கிய வித்தகர் விருது அண்மையில் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




NEW MEDILINE LAB
Health care laboratory

WE PROVIDE
- MEDICAL CERTIFICATES FOR MIDDLE EAST & ASIAN COUNTRIES
- PRE-MEDICAL CERTIFICATES FOR ALL THE COUNTRIES OTHER SERVICES LIKE
- ACUPUNCTURE & ACUPRESSURE
- HAJJ & UMRAH VACCINES | DIABETES CLINIC
- PHARMACY | X-RAY | ECG | OPD



- NO. 33, PANCHIKAWATHA ROAD, COLOMBO 10, SRILANKA
- 0770778005 0112395060
- NEWMEDILINELAB@GMAIL.COM

M. S. M. NIZAMDEEN
DIRECTOR
0777108755

# மாற்றத்தை ஏற்படுத்தும் பெண் கல்வி...

**றிப்கா அன்ஸார்,**
**சாய்ந்தமருது.**

அபிவிருத்தி பற்றிய கருத்தாடல்களில் இன்று பால் நிலை சமத்துவம் பெண்கல்வி மற்றும் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பு போன்றன தொடர்பிலும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பிலும் மிகையான கவனக்குறைப்பு செய்யப்படுகின்றது. குடும்ப மட்டத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு பெண்கள் கல்வியை பெறுவது மிகவும் அவசியமானது என்று பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் எடுத்துக்காட்டுகிறது. பெண் பிள்ளைகள் கல்வியை பெறும்போது தனியே அறிவு மட்டும் வருவதில்லை. அது அவர்களுக்கு வாழ்க்கைக்கான சக்தியையும் விழிப்புணர்வையும் பெற்றுக் கொடுக்கின்றது. அதன் மூலமாக அனுகூலங்கள் வாழ்க்கை முழுவதும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அறிந்தோரும் அறியாதவரும் சமம் ஆவார்களா? நல்லுபதேசம் பெறுவோர் எல்லாம் அருளுடையோரே. (அல்குர்ஆன் 39 : 3 )

கல்வி கற்பது என்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் இருவரும் மீதுள்ள கட்டாய கடமையாகும். கல்வி ஒரு மனிதனை அறிவுடையவனாகவும் பண்பாடு உள்ளவனாகவும் ஒழுக்கமுடையவனாகவும் மாற்றுகிறது. கல்வியும் மனிதனின் அறிவுக் கண்ணைத் திறப்பதோடு சொத்துக்களில் எல்லாம் மிகச்சிறந்த சொத்தாகவும் கருதப்படுகிறது.கல்வி என்பது மார்க்கம் மற்றும் உலகம் பற்றிய அறிவை பெறுவதாகும் என்பது அல்குர்ஆன் வசனம்.

எனவே பெண்கள் கல்வி கற்பதை இஸ்லாம் தடை செய்யவில்லை. ஆனால் இஸ்லாமிய நெறிமுறைகளை மீறாத வகையிலும் நமது உயிருக்கும், மானத்துக்கும் உலைவைக்காமல் கல்வி கிடைக்கிறதா என்பதை உறுதி



செய்து கொள்வது அவசியமாகும். கண்ணை விற்று சித்திரம் வாங்குவதில் எந்த பயனும் இல்லை. உடலுக்கு திரையிட சொன்னதே தவிர அறிவுக்குத் திரையிட சொல்லவில்லை. இஸ்லாத்தின் பெண்கள் வேலைக்குச் செல்ல தடை இல்லை. அப்படி வேலைக்குச் சென்று சம்பாதித்தாலும் அதை குடும்பத்திற்கு செலவழிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு கிடையாது. இஸ்லாத்தில் பெண்கள் வெளியே செல்ல தடை இல்லை. இஸ்லாத்தில் பெண்கள் கல்வி கற்க தடை இல்லை. இஸ்லாத்தில் பெண்கள் விளையாட்டில் பங்கு கொள்ள தடை இல்லை இஸ்லாத்தில் பெண்கள் கணவனை தேர்ந்தெடுக்க தடை இல்லை கல்வி கற்பது முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் கட்டாய கடமையாகும். (அல் ஹதீஸ் புகாரி)

மகாத்மா காந்தியின் கல்விச் சிந்தனைகளில் பெண் கல்வியானது தனித்துவம் மிக்கதாக காணப்படுகின்றது.

அவரது பிரதான சிந்தனை ஒரு ஆண் கல்வியைப் பெற்றால். அது அவனுக்கு மட்டுமே அனுகூலம் மிக்கதாக அமையும் என்றும் ஆனால் ஒரு பெண்

கல்வி பெறும் போது அது அப்பெண் சார்ந்துள்ள கிராமத்துக்கு கிடைக்கப்பெற்ற கல்வியாக அமைகிறது. என்றும் பெண் கல்வியின் தேவையையும் முக்கியத்துவத்தையும் தெளிவாக முன்வைத்துள்ளார்.

பெண் பிள்ளைகளின் கல்வி நிலை இளம் பெண் பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக் கொள்வதன் காரணமாக கடந்த சில தசாப்தத்தில் சமூகங்களில் சாதகமான மாற்றங்களை உணர முடிகிறது.உலக அளவில் எழுத்தறிவற்றவர்களின் எண்ணிக்கை 774 மில்லியனாக காணப்படுவதுடன் அவர்களில் மூன்றில் இருவர் பெண்களாக உலகளாவிய நிலையில் கணிப்பிடப்பட்டுள்ள 163 மில்லியன் எழுத்தறிவு பெற்றவர்களின் ஏறத்தாழ 63 வீதமானவர்கள் பெண்களாவர்.

**பெண் பிள்ளைகளுக்கான கல்வியின் முக்கியத்துவம்**

பெண் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வியானது ஆண் பிள்ளைகளுக்கான கல்வியைப் போன்று ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல பெண் பிள்ளைகளின் கல்வியின் சமூகப் பயனானது ஆண்களின் கல்வியின் சமூக பயனை விட பன்மடங்கு அதிகமானது.

தற்காலத்தில் பெண்பிள்ளைகள் கல்வியை பெறுவதானது எதிர்காலத்தில் சனத்தொகை வளர்ச்சிப் போக்கும் மற்றும் சிசு மரண வீதத்தில்ஆரோக்கியமான நிலையை உருவாக்கும் தாய்மார் இறப்பு வீதத்தையும் குறைக்கும்.

கல்வி அறிவின்மையானது பெண்கள் கடத்தப்படுதல், துஷ்பிரயோகத்துக்கு உட்படுதல்.

விபச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படல் உள்ளிட்ட வன் நடத்தைகளுக்கு உள்ளாகுவதற்கான ஏது நிலைகளை தோற்றுவிக்கின்றன.

பாடசாலை கல்வியில் பங்கிற்கும் கால அளவு அதிகரிக்கும் போது பெண்களின் திருமண வயதில்லை பின் தள்ளப்படுகிறது. இதனால் இள வயது கர்ப்பங்கள் குறைவடைகின்றன. இது தாய்மார் மற்றும் குழந்தைகள் இறப்பு வீதத்தினை குறைவடையச் செய்கின்றது.

**சமூகமயமாக்கலும் பெண்களின் கல்வி நிலையம்**

குழந்தைகளின் சமூகமயமாக்கலில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. வகிபாகங்களை கையளிப்பதிலும் கலாசாரம் பண்பாடுகளை கற்றுக் கொடுப்பதிலும் தாய் எனும் வகிபாகம் தவிர்க்க முடியாத இடத்தை பெறுகிறது.

எனவே குழந்தைகளை சமூகமயமாக்கும் போது அவர்களை அறிவியல் கண்ணோட்டத்தோடு சமூகமயப்படுத்துவதில் கற்ற தாய்மார் மிகச்சிறந்த வகிபாகத்தை ஏற்கின்றனர். அதனால் ஆய்வாளர்கள் பலரும் பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதை அழுத்தி வலியுறுத்துகின்றனர்.

பெண் கல்விக்கான வாய்ப்புகள் விரிவுபடுத்த வேண்டும். என்றும் பெண் கல்வி தொடர்பில் சமூகங்களில் இருக்கக்கூடிய எதிர்மறை சிந்தனைகள் தகர்ப்புக்குள்ளாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

கல்வி அறிவு குறைந்த தாய்மாரை விட கற்ற தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கான கற்றல் செயல்பாடுகளை நன்கு திட்டமிட்டு வடிவமைக்கின்றனர்.

### தாய்மாரின் கல்வி மட்டமும் பிள்ளைகளின் கல்வி அடைவும்

தாய்மாரின் கல்வி அடைவோ பிள்ளைகளின் கல்வி அறிவுகளுடன் நேரான தொடர்பினைக் கொண்டுள்ளன என்ற ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தாய் மாரின் கல்விக்கும் பிள்ளைகளின் பாடசாலை வரவுக்கும் இடையே நேரான தொடர்புகள் நிலவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதாவது கற்ற தாய்மார்களின் பிள்ளைகளின் பாடசாலை வரவின்மை மிகக் குறைந்த அளவில் காணப்படுவதுடன் அதிக வரவின்மை உடைய பிள்ளைகளின் தாய்மாரின் கல்வி மட்டும் குறைந்த அளவில் காணப்படுகின்றது.

### வறுமையை குறைப்பதற்கான



### கருவியாக பெண் கல்வி காணப்படுகின்றது.

பெண்கள் கல்வியை பெற்றுக் கொள்ளும் போது அவர்கள் தொழில் ஒன்றை பெறக்கூடிய திறன்களை பெற்றுக் கொள்கின்றனர்.
இதனூடாக அவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கு பெற்றுகின்றனர்.
குடும்ப வருமான இடத்துக்கு பங்களிப்பு செய்கின்றனர். குடும்பத்தின் நுகர்வுக் கோளத்தை பொருத்தமான முறையில் அமைத்துக் கொள்ளும் திறனை பெறுகின்றனர். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளின் வாயிலாக குடும்பத்தின் வறுமையை குறைத்துக் கொள்ள கல்வி அவர்களுக்கு வலுவூட்டுகிறது.
மேலும் வருமானம் ஈட்டும் பெண்கள் குடும்பங்களில் மதிப்பை பெறுகின்றனர். கௌரவமாக நடத்தப்படுகின்றனர். குடும்பத்திலும் சமூகத்திலும் உயர் அந்தஸ்துடன் வாழும் சந்தர்ப்பத்தை பெறுகின்றனர்.
ஆண் ஒருவர் கல்வியைப் பெறும்போது அது அவரது தனிப்பட்ட பொருளாதார மேம்பாட்டுக்கு மட்டுமே உதவுவதாக அமையும். மாறாக அதே கல்வியை ஒரு பெண் பெறுகின்ற போது அது அவரது பொருளாதார அனுகூலங்களுக்கும், அப்பால் குடும்ப சமூக மற்றும் தேசிய அளவில் சமூக அபிவிருத்தி குறைகாட்டிகளை உயர்நிலை இட்டுச் செல்ல உதவுகிறது.
எதிர்கால தலைமுறையினரின் ஆளுமை விருத்தியை நிர்ணயம் செய்ய உதவுகிறது. எதிர்கால தலைமுறை ஆரோக்கிய குறிகாட்டிகளை இழந்த மட்டத்தில் பேண உதவுகிறது.
பெண்களின் உரிமையையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் ஒரு மூலோபாயமாகவும் அது பார்க்கப்படுகிறது.
ஒரு நாடு அபிவிருத்தி அடைந்த நாடு என்ற இலக்கினை எட்ட வேண்டும் எனில் அந்நாட்டில் உள்ள பெண்களுக்கான கல்வி வாய்ப்புகள் உறுதி செய்யப்படுவதுடன் தரமான கல்வி வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். அபிவிருத்திக்கான அடித்தளம் என்பது பெண் கல்வி வாய்ப்புக்கான விரிவாக்கமாகவே அமைய முடியும்.



# மாணவப் பருவமும் போதைப் பாவனையும்


திருமதி. மர்ளியா சக்காப்
அதிபர் - ஆரம்பப்பிரிவு
தி/ ஸாஹிறா கல்லூரி
திருகோணமலை.


உலகில் காணப்படும் பிரச்சினைகளில் மாணவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதில் மாணவர்கள் போதைக்கு அடிமையாதல் பாரிய பிரச்சினையாக

காணப்படுகின்றது. மாணவ சமுதாயத்தில் தற்போது போதைப் பொருள் பாவனையின் வீதம் அதிகரித்த வண்ணம் உள்ளது. அரசாங்கத்தினால் பல்வேறு சட்டங்கள், திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் முற்றாக ஒழிக்க முடியாதுள்ளது. மாணவர்களில் 13 வயது தொடக்கம் 20 வயதிற்கிடைப்பட்டோர் போதைப் பொருட்களிற்கு அதிகம் அடிமையாகியுள்ளனர் என்று போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றனர். மனித வளர்ச்சிப் பருவத்தில் கட்டிளம் பருவம் என்பது ஆபத்தான மனித வாழ்வின் படிநிலையாகக் கருதப்படுகின்றது. இக்கால கட்டத்தில் ஒருவன் தன் முழு மனித விருத்தியில் 75 வீதத்தினை அடைகிறான். இங்கு அவனது விருத்தியில் குடும்பம், சமூகம், பாடசாலை, நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடகங்கள் என்பன பாரிய தாக்கத்தினை செலுத்துகின்றன.

மாணவப் பருவத்தினரில் கீழ்வருகின்றவைகள் தாக்கம் செலுத்துகின்றன.

- தீய பழக்கமுள்ளவர்களின் சேர்க்கை.
- முன்மாதிரிகளின் செல்வாக்கு (உ+ம்) சினிமா நாயகர்கள்
- தவறான நண்பர்களின் சேர்க்கை.
- பருவ உடல் உள மாற்றங்கள் என்பன போதைப் பாவனையைக் கற்றுக் கொள்ள தூண்டுகின்றன.

இளம் வயதினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கு அவர்களின் நண்பர்களே முக்கிய



காரணம் எனத் தெரிய வந்துள்ளது. போதைக்கு அடிமையானவர்களில் 88 வீதத்தினர் நண்பர்கள் மூலமும் 2 வீதத்தினர் உல்லாசப் பயணிகள் மூலமும் போதைக்கு அடிமையாகின்றனர். நாட்டின் எதிர்காலம் வளரும் சமுதாயத்தின் கைகளில் உண்டு என்பார்கள். ஆனால் இவ்வாறான நிலை தொடருமானால் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பதில் சந்தேகமேயில்லை. நாட்டின் எந்தப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் சகல இடங்களிலும் இன்று போதைப் பொருட்கள் இலகுவாகக் கிடைக்கக்கூடிய நிலையிலேயே காணமுடிகிறது. மாணவர்கள் இலகுவாக குறைந்த விலையில் கிடைக்கும் ஆபத்தான போதைப் பொருட்களை சிறு வயதில் நட்பு வட்டாரத்தின் மூலம் பழகி பின்பு அதற்கு நிரந்தர அடிமையாகின்றனர். போதைப் பாவனை நீடித்தால், மாணவர்களின் கல்வி வாழ்க்கையோடு, எதிர்கால வாழ்க்கையையும் சீரழிக்க வேண்டிய நிலை உருவாகின்றது.

போதைப் பாவனையால் உடல் மட்டுமல்ல மனமும் பாதிக்கின்றது. சுயமரியாதை, சுயமதிப்பு இழந்த மனிதனாக உருவாகின்றான். மேலும் அவனைச் சுற்றியுள்ள சமூகம் பாதிப்படைகின்றது. தன்னுடைய கல்வி பாதிப்படைவதோடு, சகபாடிகளின் கல்வியும் பாதிப்படைகின்றது. குடும்பத்தில் வறுமை நிலை ஏற்பட்டு மகிழ்வான குடும்பம் நாசமடைகின்றது. இதனால் அந்தஸ்து இழக்கப்பட்டு முற்று முழுதாக தெருவுக்கு வர வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மேலும் இந்த போதைக் கலாசாரத்தால் அதிகமான வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன. தனது உயிரிற்கு ஆபத்து ஏற்படுத்துவதோடு, பாரிய உயிர் இழப்புகள் ஏற்படவதற்கு காரணமாகின்றனர். பாடசாலையில், வீட்டில் சின்ன சின்ன திருட்டு வேலைகளைச் செய்து குழுவாக பெரிய திருட்டுக்களைச் செய்து சிறை செல்ல வேண்டிய நிலை உருவாகின்றது. அதிகமான பொய்களைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. வெட்கக்கேடான விடயங்களில் துணிந்து ஈடுபடக்கூடியவர்களாக ஆகின்றனர். பாலியல் குற்றங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு வேண்டாத நோய்கள் எல்லாம் தொற்றுவதற்கு காரணமாகின்றனர்.

பெரியவர்களிடம் காணப்படும் போதைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்தக் கஷ்டமாக இருக்கும் இக்கால கட்டத்தில் மாணவர்களிடையே பரவி வரும் போதைப் பழக்கத்தை நாம் எவ்விதம் கட்டுப்படுத்துவது என்பது கேள்விக்குறியே. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவான அன்பு மற்றும் கண்டிப்பிற்கும் தான் இந்நிலையை மாற்றும் சக்தி உள்ளது. தங்களுடைய பிள்ளைகளின் நடவடிக்கைகளை பெற்றோர்கள் சற்றுக் கூர்ந்து கவனித்தாலே பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் மாற்றம் துல்லியமாக தெரிந்து விடும். ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களின்



நடவடிக்கையை கண்காணிக்க தினமும் சிறிது நேரத்தை செலவழித்தாலே மாணவர்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றத்தைக் கண்டுபிடிக்கலாம். இவையெல்லாம் பிரச்சினை வரும் முன் காக்கும் நடவடிக்கைகளாகவும் பிரச்சினை வந்தவுடனேயே காக்கும் நடவடிக்கைகளாகவும் அமையும்.

மேலும் பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர் மாணவர்கள் நலனில் எடுத்துக் கொள்ளும் அக்கறை வெகுவாக குறைந்து கொண்டே வருவதும் பாடசாலைக்கு அருகிலேயே வெற்றிலை, பாக்கு, பீடா போன்ற ஆரம்ப நிலை போதை வஸ்துக்கள் விற்கும் கடைகள் பெருகி வருவதும், இத்தகைய கடைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பாடசாலை நிர்வாகமும் போதிய அக்கறை காட்டாததும் குறிப்பிட வேண்டிய காரணங்களேயாகும்.

இன்றைய நாகரீக சூழ்நிலையில் பெற்றோர்கள் இருவருமே வேலை பார்க்கும் நிலையில் பிள்ளைகளின் மீதான அவர்களின் கவனம் வெகுவாகக்



குறைகின்றது. தன் பிள்ளையைத் தன்னால் சரியாகக் கவனிக்க முடிவதில்லையே என்ற குற்ற உணர்ச்சியால் தூண்டப்படும் இவர்கள் அளவான அன்பையும் பாசத்தையும் பிள்ளைகள் மீது காட்டுவதற்கு பதிலாக பிள்ளைகளின் தேவையான அளவிற்கு அதிகமாக பணத்தினைக் கொடுத்து



தங்கள் குற்ற உணர்ச்சியினை மறைக்க வடிகால் தேடுகிறார்கள்.

மேலும் மாணவர்களிடம் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் விரிவாக பேச பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் ஆறுதலான அரவணைப்பான அணுகு முறையால் மட்டுமே இந்த விதமான பழக்கங்கள் மாணவர்களிடம் தோன்றாமல் இருக்கச் செய்ய முடியும். இதையெல்லாம் விட்டுவிட்டு என் பிள்ளையின் போதைப் பழக்கத்திற்கு அரசாங்கம் மற்றும் காவல்துறை தான் காரணம். அவர்கள் போதைப்பொருள் விற்பவர்களை சரியாக தண்டிக்காததால் தான் பிள்ளை போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டது என்றெல்லாம் அடுத்தவரைக் குற்றம் கூறுவது சாத்தியமற்றதாகும். இதற்கான பொறுப்பு எம் அனைவரையுமே சாரும் என்பதால் அனைவருடைய ஒத்துழைப்புடனும் மாணவ சமுதாயத்தைக் காக்க வேண்டியது அவசியமானதாகும்.

## மாதவிடாய்ச் சுழற்சி மற்றும் மாதவிடாயில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

## (MENSTRUAL IRREGULARITIES &SOLUTIONS)

(மருத்துவக் கட்டுரை)
**Dr** ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்)
ஆதார வைத்தியசாலை ஏறாவூர்

(சென்ற இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி...)

பெண்கள் என்றாலே நமக்கு ஞாபகத்துக்கு வருவது அவர்களின் அர்ப்பணிப்புகள்தான். அவ்வாறான பெண்கள் எப்படியான அவஸ்தைகளை அனுபவிக்கிறார்கள் என்று பெருமபாலானவர்களுக்குத் தெரிவதில்லை. அவர்களுக்கு வரும் தொல்லைகளைப் பற்றி யோசிப்பதுமில்லை.
“எனக்கு 28 நாள் இடைவெளியில பீரியட்ஸ் வந்துடுது... இது சரிதானா?““
“எனக்கு ரெண்டு மாசத்துக்கு



ஒருதடவைதான் பீரியட்ஸ் வருது. ஒருவேளை ஏதாவது உடம்புல பிரச்சினை இருக்குமோ?““
”ஒவ்வொருத்தரோட உடல்நிலையைப் பொறுத்து, நாள் கணக்கு மாறலாம்னு படிச்சிருக்கேன்... எனக்குக் கண்டபடி மாறுதே...”

- இப்படி ஒழுங்கற்ற மாதவிடாய் குறித்த ஏராளமான சந்தேகங்கள் பலருக்கும் இருக்கின்றன.



இன்றைய இளைய தலைமுறையிடம், மாதவிடாய் பற்றிய பெரிய விவாதமே நடந்துவருகிறது. மாதவிடாய் என்பது அசுத்தம்’ என்று கூறப்பட்ட பழைய கருத்துகளை ஒதுக்கி, அது ஓர் உடல்நிலை மாற்றம் என்பதை அனைவரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் பலராலும் கண்டுகொள்ளப்படாத மாதவிடாய்ச் சுழற்சியின் மறுபக்கமே, ஒழுங்கற்ற மாதவிடாய். இது இன்றைக்கு பல பெண்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்சினை.

### பெண்கள் எதிர்நோக்கும் மாதவிடாய்ச் சிக்கல்கள் ஆவன.

1) 28 நாட்களுக்கு முந்தைய மாதவிடாய் அல்லது 35 நாட்களுக்குப் பிந்தையதான மாதவிடாய்.
2) Amenorrhea-மாதவிடாயின்மை 3 அல்லது 3 இற்கு மேற்பட்ட மாதங்களாக மாதவிடாய் வராமல் விடுதல்.
ஒரு பெண் கர்ப்பிணியாக இருத்தல் அல்லது பாலூட்டும் தாயாக இருத்தல் அல்லது மாதவிடாய் நிறுத்தத்தில் இருத்தல் போன்ற காரணங்கள் தவிர்ந்த

90 நாட்களுக்கு மேற்பட்ட மாதவிடாய் இன்மை அசாதாரணமாக கருதப்படுகிறது.சரியான மார்பக வளர்ச்சி கொண்ட15 தொடக்கம் 16 வயதுடைய வயதுக்கு வராத பெண்களும் இந்த பகுதியில் அடங்குவர்.

3) (Oligomenorrhea) வழமைக்கு மாறான குறைந்த உதிரப் போக்கு.
4) (Menorrhagia) வழமைக்கு மாறாக கூடுதலான அளவு கூடுதலான நாட்கள் உதிரப் போக்கு
5) மாதவிடாய்க் காலத்தில் கடுமையான வயிற்று வலியும் வாந்தியும். (Dysmenorrhea)
6) மாதவிடாய்க்கு இடைப்பட்ட காலத்தில் அல்லது மாதவிடாயின் நிறுத்தத்தின் பிறகு , உடலுறவின் பின் அசாதாரணமாக உதிரம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறுதல்(Spotting).

## காரணிகள் (Causes)

முதலாவது காரணி...

1) அழுத்தமான வாழ்வும், வாழ்க்கை நடைமுறை மாற்றங்கள்- (Stress and Lifestyle Factors)

- உடல்நிலை மாற்றங்கள் அதாவது உடல் எடை கூடுதல் அல்லது குறைதல்.
- உணவு கட்டுப்பாட்டை மேற்கொள்ளுதல் (Dieting).
- உடற்பயிற்சி மாற்றங்கள்
- உடல் வருத்தும் நோய்கள் நோய் என எடுத்துக்கொண்டால், நாற்பட்ட நோய்கள்,இரத்தச்சோகை, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், உடற்பருமன், நரம்புத் தளர்ச்சி நோய் போன்றவை.
- வழமையான உடற்பயிற்சி செய்தலில் மாற்றங்கள் ஏற்படுதல்.
- நாளாந்த வாழ்க்கை சமநிலையில் மாற்றங்கள் ஏற்படுதல்.

இரண்டாவது காரணி..

2)கருத்தடை மாத்திரைகள் இந்த வகையான மாத்திரைகள் ஈஸ்ட்ரஜன் புரஜெஸ்ட்றோன் போன்ற ஓமோன்களால் ஆனது. இவைசூலகத்திலிருந்து முட்டைகளின் வெளியேற்றத்தை தடுப்பதன் மூலம் மாதவிடாய்ச் சக்கரத்தைப் பாதிக்கிறது.மேலும் இந்த மாத்திரைகள் பாவித்து நிறுத்திய பின்னரும் கூட சாதாரணமாக மாதவிடாய் ஆறுமாதங்களுக்கு வருவதில்லை. இதுவும் பெரிய ஒரு பின்விளைவாக அமைகிறது.
ஏனெனில் இந்த காலகட்டத்தில் கருத்தரிக்கும் திட்டம் இருந்தால் அது சாத்தியப்படுவதில்லை. ப்ரோஜெஸ்ட்ரோன் (Progesterone) மட்டும் கொண்ட ஓமோன் மாத்திரைகள் மாதவிடாய் சக்கரத்தின் இடையிலும் கூட குருதி வெளியாதலை(bleeding in between periods ) ஏற்படுத்துகிறது.

3) கருப்பையில் உருவாகும் சாதாரண கட்டிகள். (Uterine Polyps and fibroids).
பொலிப்ஸ் மற்றும் பைப்ரொய்ட்ஸ் எனப்படுபவை கருப்பையில் தொங்கிக் கொண்டிருக்கும் புற்றுநோய்த் தன்மையற்ற கட்டிகள் ஆகும்.இவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளில் காணப்படலாம். அத்தோடு மிகச்சிறியதிலிருந்து(ஒரு திராட்சை விதை அளவு) பெரியளவு (ஒரு அப்பிள் பழத்தினளவு) வரை அதனளவு வேறுபடலாம்.இவை கூடுதலான உதிரப் போக்கையும் வலியையும் மாதவிடாய்க் காலத்தில் ஏற்படுத்துகின்றன.



4) என்டோமற்றியோசிஸ் (நுனெழஅநவசழைளளை) எனப்படும் கருப்பைப் படலம்.
Endometriam எனப்படும் கருப்பை மேலிழையம் ஆனது ஒவ்வொரு மாதவிடாயின் போதும் உடைந்து உதிரத்துடன் வெளியாகிறது. Endometriosis எனப்படுவது கருப்பை மேலிழையம் கருப்பை தவிர்ந்த வேறு அருகாமை அங்கங்களில் வளர ஆரம்பிப்பதால் உருவாகின்றது. உதாரணமாக சூலகம்,பலோப்பியன் குழாய்கள் மற்றும் குடற்பகுதியில் வளர்ந்து கடுமையான வயிற்று வலியையும் கூடுதல் உதிரப் போக்கையும் உடலுறவின் போது கடுமையான வலியையும் தருகிறது.

5)பெல்விக் இன்.ஃப்லம்மட்ரி டிசீஸ் (PelvicInflammatory Disease- PID) எனப்படும் இடுப்பு அழற்சி நோய்.
இது பெண்களின் இனப்பெருக்கத் தொகுதியைப் பாதிக்கும் ஒரு பக்றீரியாத் தொற்று ஆகும். இந்த பக்டீரியா தொற்று உடலுறவின் போதும், குழந்தைப் பிறப்பின் போதும், பெண்களுக்கு தொகுதியில் செய்யப்படும் சில பரீட்சார்த்த முறைகளாலும் (Gynechological procedures) பெண்களுக்கு ஏற்படுகிறது. இதன் அறிகுறிகளாவன துர்வாடையுடன் கூடுதலான வெள்ளைப்படுதல், கடுமையான வயிற்று வலி, மாதவிடாய் ஒழுங்கற்ற தன்மை, காய்ச்சல் குமட்டல் போன்றன.

6) PCOD என அழைக்கப்படும் பொலிசிஸ்டிக் ஓவரியன் சிண்ட்ரோம் Polycystic Ovarian Syndrome- (சினைப்பை சுரப்புக் கட்டிகளுடனான நோய்க்குறி)

சிறு தண்ணீர் கட்டிகள் போன்ற சுரப்புகளை கொண்ட முடிச்சுகள் சூலகத்தில் உருவாகுதல் இதன் இயல்பாகும். இந்த சுரப்பு பொதுவாக ஆண்களுக்குரிய ஓமோனை கொண்டிருக்கும்.
சாதாரணமான கருமுட்டை வெளியாதல் இந்த நோயில் இடம்பெறாது.
இதனால் பிள்ளைப்பேறு சாத்தியப்பாடு குறைவாக காணப்படும்.
அத்தோடு மாதவிடாய் சிக்கல்களும் ஏற்படும். முகத்தில் பருக்கள், மற்றும் அசாதாரணமான முடி வளர்தல் இந்த நோயின் அறிகுறிகள் ஆகும்.

7) Premature Uterine Insufficiency (கருப்பை முதிராத நிலை)

இது 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படுகிறது. இந்த நோயில் கருமுட்டை வெளியாதல் தடைப்படும். இதனால் குறிப்பிட்ட காலத்துக்கு முந்தைய மாதவிடாய் நிறுத்தம் ஏற்படும்.
இந்த நோயானது பரம்பரை ரீதியாக கடத்தப்படுகிறது.

மாதவிடாய் சிக்கலுக்குரிய ஏனைய அசாதாரணமான காரணங்கள்

1) கருப்பை புற்றுநோய் மற்றும் கருப்பைக் கழுத்து புற்றுநோய்
2) ரத்தப் போக்கைக் ஊட்டக்கூடிய மருந்து பாவனைகள்
3) கபச் சுரப்பி, தைராய்டு சுரப்பி நோய்கள்.
4) Bleeding Disorders-உதிரப்போக்கு நோய்கள்

5) கருச்சிதைவு (Miscarriage) / பலோப்பியன் குழாயில் கருத்தங்கல் (Ectopic Pregnancy)

**Diagnosis**-நோய் கண்டறிதல்

1) இரத்தப்பரிசோதனை-உதிரப் போக்கினால் ஏற்படும் இரத்தச் சோகையை கண்டறிவதற்கு

2) அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்-சூலகம் பலோப்பியன் குழாய் கருப்பை போன்றவற்றின் தன்மையை அறிவதற்கும் மற்றும் பொலிப்ஸ், பய்ப்ரொய்ட்ஸ், பிசிஓடி போன்றவற்றைக் கண்டறிவதற்கும்

3) Vaginal Cultures-யோனியில் ஏற்படும் தொற்றை கண்டுபிடிப்பதற்கு

4) Endometrial biopsy-கருப்பையில் பயாப்ஸி எனப்படும் பரிசோதனை செய்து நுணுக்குக்காட்டியில் ரம்மி கண்டறிதல்.



குறிப்பாக எண்டோமெட்ரியோசிஸ் எனப்படும் கருப்பைப் படல நோயை கண்டு பிடிப்பதற்கு உதவுகிறது.

மாதவிடாய் சிக்கலுக்கான தீர்வும் குணப்படுத்தலும்

காரணங்களை கண்டறிந்து அதற்குரிய வகையில் நிவாரணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

1) மாதவிடாய்ச் சக்கரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் கூடுதலான உதிரப்போக்கை கட்டுப்படுத்துவதற்கும் புரோஜஸ்டரோனே, ஈஸ்ட்ரஜன்




மாத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

2) வலியை கட்டுப்படுத்துவதற்கு வலிநிவாரண மாத்திரைகள் (Mefenamic acid) உதவுகின்றன. ஆஸ்பிரின் மாத்திரைகளை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. ஏனெனில் கூடுதலான உதிரப்போக்கை இது ஏற்படுத்தக்கூடியது.மற்றும் அடிவயிற்றில் சூடான துணி அல்லது திரவத்தை வைத்து அழுத்துதலும் வலிக்கான சிறு நிவாரணத்தை தருகிறது.

3) Fibroids கட்டிகளுக்கு நிவாரணமாக பெற்று மருத்துவ நிபுணரால் முதலில் ஓமோன் மாத்திரைகளும் வலிநிவாரண மாத்திரைகளும் கூடுதலான உதிரப்போக்கை தடுக்கக்கூடிய மாத்திரைகளும்"“பரிந்துரைக்கப்படுகின்றன. இதற்கும் கட்டுப்படாமல் மாதவிடாய் சிக்கல்கள் தொடரும்போது சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

4) Endometriosis எனப்படும் கருப்பை படல நோய்க்கும் வலி நிவாரண மாத்திரைகளும் ஓமொன் மாத்திரைகளும் மகப்பேற்று மருத்துவ நிபுணர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன. ஆனாலும் சிக்கல்கள் தொடரும் பட்சத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இந்தப் படலம் அகற்றப்படுகிறது.

5) கூடுதலான உதிரப்போக்கை கட்டுப்படுத்துவதற்கு பொதுவாக மெரினா கொயில் Mirena Coil எனப்படும் கருப்பை உள்ளக சுருள் (IUCD) கருப்பைக்குள் வைக்கப்படுகிறது. இது சுமார் ஐந்து வருடங்கள் கூடிய உதிரப்

போக்குக்கான பாதுகாப்பைத் தரும்.

6) Endometrial Ablation
எனப்படும் முறையாலும் கருப்பை மேலணி இழையம் ஒரு வகையான வெப்ப மருத்துவம் மூலம் நிவாரணம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த முறையில் பக்கவிளைவு உருவாவதால் இதை மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் குறைவாகவே பரிந்துரைக்கிறார்கள்

மாதவிடாய் சிக்கல்களை தடுப்பதற்கும் குறைப்பதற்கும் எவ்வாறான செயல்களை மேற்கொள்ளலாம்?(To reduce the risk)

1) ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை கடைப்பிடித்தல்- ஆரோக்கியமான உணவு உண்ணுதல், துரித உணவுகளைத் தவிர்த்தல், உடல் பருமனைக் குறைத்தல் போன்றன.
2) ஆறுதலான வாழ்க்கை முறை (Stress reduction and Relaxation Techniques)
3) போதியளவு ஓய்வைப் பெற்றுக்கொள்ளுதல்
4) வைத்திய ஆலோசனையின் படி மருந்து மாத்திரைகளை பெற்றுக்கொள்ளல்.
5) மகப்பேற்று மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளின் படி நடத்தல்
6) தேவையில்லாத தொற்றுக்களை தவிர்ப்பதற்கு மாதவிடாய் நேரத்தில் நான்கு மணித்தியாலத்திற்கு ஒரு முறையாவது சானிட்டரி நாப்கின்களை மாற்றிக் கொள்ளுதல்.



7) தொடர்ச்சியான ஒரு ஒழுங்கு முறைப்படி மருத்துவ ஆலோசனைகளை பெறுதல். (Regular Checkups)

மாதவிடாய் குறித்து இஸ்லாம்

**’மாதவிலக்கு என்பது ஆதமுடைய பெண் மக்களின் மீது அல்லாஹ் விதித்த ஒன்றாகும்’ என்று இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.**

**’மாதவிலக்கு பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். அது ஓர் (இயற்கை) உபாதை. எனவே, மாதவிலக்கின் போது (தாம்பத்திய உறவு கொள்ளாமல்) பெண்களிடமிருந்து விலகியிருங்கள். அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை நெருங்காதீர்கள். அவர்கள் தூய்மை அடைந்து விட்டால், அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டபடி அவர்களிடம் செல்லுங்கள். பாவத்திலிருந்து மீள்வோரை அல்லாஹ்**



**நேசிக்கிறான், தூய்மையானவர்களையும் நேசிக்கிறான் எனக் கூறுவீராக!’ (அல்குர்ஆன், 002:222)**

பெண்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் கண்கள் போன்றவர்கள்.அவ்வாறான பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்குவதற்கு தீர்வினை வழங்குவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.
நன்றி...

## பென் கிளப்பின் விஷேட விருந்தினர்
# யாழினி சிறி

பேட்டி கண்டவர்
என்.எம். ஆரிபா



வணக்கம். என் பெயர் யாழினிஸ்ரீ. வயது - 32. படித்தது 10ம் வகுப்பு. பிறந்தது படித்தது எல்லாமே நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகில் ஒரு கிராமம். தற்போது சிறுமுகையில் வசிக்கிறேன். சிறுவயது முதலே வாசிப்பின் மீது ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாக தீவிர வாசிப்பாளராக இருக்கிறேன். அதே நேரம் இந்த உலகை வேடிக்கை பார்க்கும்போது மனதை பாதித்த நிகழ்வுகளின் சாதக பாதகங்களை கவிதை வடிவில் வெளிப்படுத்துகிறேன்.

**வாழ்க்கை...**
1989ல் கோத்தகிரியில் பிறந்தேன். 1998ல் முதுகு தண்டு பாதிப்பு (Kyphoscoliosis) மற்றும் முடக்கு வாதம் (Rheumatoid arthritis) என்ற பிரச்சனையால் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அன்றைய சூழ்நிலையில் சிகிச்சைகள் பற்றிய விவரம் அம்மாவுக்கு தெரியாததால் குணப்படுத்த முடியவில்லை. தற்போது 90% மாற்றுத்திறனாளியாகஉள்ளேன். வீட்டிலிருந்தபடியே டைப்பிங் டிசைனிங் வேலை செய்து கொண்டிருக்கிறேன்.

அம்மா சுந்தரி - வயது - 60. தேயிலை தோட்ட தொழிலாளியாக இருந்தவர், 2006ல் தென்திருப்பதி வந்த பிறகு ஸ்பின்னிங் கம்பெனியில் வேலை செய்தார். 2009ல் கம்பெனியில் ஏற்பட்ட ஒரு விபத்தில் இரண்டு கால்களும் அடிபட்டதால் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டு 50% நடக்கும் தன்மையை இழந்தார். தொடர்ந்து சில மணி நேரம் நிற்கவும் நடக்கவும் முடியாத காரணத்தால் வேலைக்கு செல்ல முடியவில்லை. தற்போது என்னை கவனித்துக் கொண்டு வீட்டில் உள்ளார்.

**தற்போதைய மனநிலை, வெற்றிகள்...**
நமக்கும் கீழே உள்ளவர் கோடி. எனவே நம் நிலையை நினைத்து வருந்தவோ துன்பப்படவோ கூடாது. இமைதனை தீ சுடினும் விழியே வருந்தாதே என்பதே என் எண்ணம்.சொந்த வாழ்க்கையில் பல சோதனைகள் தந்தாலும் சில வெற்றிகள் கிடைத்துள்ளன. எழுத்து மூலம் என்று பார்த்தால் எல்லாமே வெற்றிகளாக்கி தருகின்றனர் நட்புகள்.

**இன்றைய சமூகத்திற்கு...**
வாழும் வாழ்க்கையை முறையாக வாழ்வோம். இன்னா செய்தாரை பொறுத்து வாழ்வது சில இடங்களில் நன்மையை தரும். பல இடங்களில் மேலும் இன்னல்களை செய்ய தூண்டுகோலாக அமையும். எனவே இடம் பொருள் ஆராய்ந்து செயல்பட்டு ஒவ்வொருவர் வாழ்வையும் சிறப்பாதாக மாற்றிக் கொள்வோம்.

**பென் கிளப் நேர்காணல் பற்றி...**
ஸ்ரீலங்கா பென் கிளப்பில் சிறப்பு விருந்தினராக தமிழகத்தில் இருந்து கலந்துகொண்டது எனக்கு அளப்பரிய மகிழ்ச்சியை தந்துள்ளது. தமிழ்நாட்டின் ஒரு ஓரத்தில் இருக்கும் என்னை கண்டறிந்து இணைய வழியில் கடல் கடந்து அழைத்து சிறப்பித்ததற்கு ஸ்ரீலங்கா பென் கிளப்பிற்கு மனமார்ந்த நன்றிகள்.

# இளவயதுத் திருமணங்கள்

எஸ்.யூ.கமர்ஜான் பீபீ
வத்தளை.

### சென்ற இதழின் தொடர்ச்சி...

இஸ்லாமிய வாழ்வியலில் குடும்பம் நல்லதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களிலுள்ள அங்கத்தவர்களுக்கும் மத்தியில் ஒழுக்கத்தோடும், ஈமானியம் பேணப்படக் கூடியவர்களாக இருந்தாக வேண்டும். ஒரு குடும்பம் சிறந்தோங்கினால் அங்கே அவர்களை சார்ந்த சமூகம் சீர்மை மிக்கதாக காணப்படும். ஆகவே சமூகத்தின் பலமும், பலவீனமும் ஒரு குடும்பத்தை சார்ந்ததாக இருக்கும். இதனால் தான் நம் நாட்டிலே முஸ்லிம் சமூகத்தின் குடும்பங்கள் பேசும் பொருளாக மாறி வருகின்றன. இல்லங்கள் நல்லறம் காணாது நடு வீதியில் நிறுத்தப்படுவதால் சந்ததிகளின் எதிர்காலம் எங்கே என்று தேட



வேண்டியுள்ளது. திருமணம் ஆயிரங்காலத்து பயிர் என்று அன்றைய பழமொழி இருக்க இன்று ஆறா வடுக்களோடு அறிவையிழந்து குடும்ப வாழ்வு சிதைவுற்று சீரழிகிறது. திருமணமான பின்பே கணவனது



உண்மைத் தன்மை தெரிய வருகிறது.

இன்றைய திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்க படுகிறதோ என்னவோ அடுத்த கணமே காதி நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தப்படுகின்றது. இதற்கு காரணம் இளம் சந்ததிகளின் மத்தியில் பொறுமையில்லாமை. திருமண பேச்சு ஆரம்பிக்கும் முன்பே இருவரும் தம்முடைய காதல் பேச்சுகளில் மூழ்கி விடுகின்றார்கள். தீர்வை விசாரிக்க அப்போது அங்கே இடமில்லாமல் போய் விடுகின்றது. கணவன் போதைவஸ்து பாவனையிலுள்ளவனும், குடிபோதையில் இருப்பவனும் தன் பழக்கத்தை என்றும் விட முடியாதவனாய் இருந்து நடித்தே திருமணத்தை முடிப்பான். அடுத்த வேறு பெண்களோடும் தொடர்போடு இருந்தாலும் பெண் மனைவிக்கு அங்கே பிரச்சினை ஆரம்பிக்கும். காரணம் மணமகனை பெற்ற தாய்மார்கள் தன் மகனை திருத்தாது அவர்களுக்கு வக்காலத்து வாங்கியவர்களாக இருப்பதே மிகவும் கவலைக்குரிய விடயமாக மாறுகின்றது.

ஆகவே கட்டாயமாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணையை தெரிவும் செய்யும் போது இருந்து கவனிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட மார்க்கப்பற்று இருந்தாக வேண்டும். அவர்களே

சிறந்தவர்களாக அவர்களிடமே பண்பான வாழ்க்கை திட்டம் மேலோங்கும். அதன் மூலம் ஒழுக்கமுள்ள சந்ததிகளை பெற முடியும். நிம்மதியும் நம்மை விட்டு விலகாது இருக்கும். எனவே திருமணம் மூலம் வாழ்க்கை துணையை அடையும் முன்பு குடும்பப் பிண்ணனி,அழகு,மார்க்கப்பற்று,ஒழுக்கம் என்பன கட்டாயம் கவனிக்கப்பட வேண்டும்.

இஸ்லாமிய வாழ்வியலோடு ஆரம்பிக்கும் குடும்ப வாழ்வு நிச்சயம் சுவன வாழ்வாகவும், நிம்மதி நிறைந்த வாழ்வாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கலாச்சார பின்னடைவை நோக்கி சென்று கொண்டிருக்கும் நாம் அனாச்சாரம்,



துஷ்பிரயோகம் போன்ற ஈனச் செயல்களுக்கும், பாவச் செயல்களுக்கும் முகங்கொடுத்து வர வேண்டிய நிர்க்கதியில் இருக்கின்றோம். இன்றைய இளைஞர்கள் யுவதிகளின் போக்கு சீர்ப்படுத்த முடியாது தடுமாறப் படுகின்றது.
வளரும் போதேஅவர்கள் சரியான முறையில் நெறிப்படுத்தப்படாமையே இதற்கு காரணமாகும். சமூக சீரழிவிற்கு இடம் கொடுக்காது குடும்பமாய் ஒழுக்க நெறிகளோடு வாழ தனக்கு பிடித்த சோடிகளோடு திருமண பந்தத்தில் இணைந்து வாழ்ந்தார்களேயானால் இறையருளோடு இனிதான இல்லற வாழ்வினை பெற்றுக் கொள்ள முடியும்.

ஆகவே இஸ்லாமிய பின்புலத்தோடு குடும்ப வாழ்வையும் இணைத்து எதிர்கால எமது வாரிசுகளையும் அழகிய முறையில் சிறந்த வாழ்வை வாழ வைக்கலாம். நல்லதொரு தலைமுறையை கட்டியெழுப்ப ஏதுவாக அமையும் என்பது உண்மையே! ஆகவே இன்றைய இளம் தம்பதிகள் தமது இல்லறத்தை நல்லறமாக பேணுதலான முறையில் நிதானம்,பொறுமை,
சகிப்புத்தன்மை,விட்டுக்கொடுப்பு இவைகளைக் கொண்டு அழகிய குடும்ப வாழ்க்கை வாழ வேண்டும். இளவயது திருமணத்தில் இணையப் போகும் தம்பதிகள் நிறையவே கற்க வேண்டி இருக்கின்றது. அத்தனைக்கும் முதலாக பொறுமை தான் முக்கிய இடத்தை வகிக்கிறது.
குடும்ப உறவுகளுடன் ஒன்றிணைந்து வாழ முனைய வேண்டும். தனிக்குடித்தனத்தை முதலிலே ஆரம்பித்தால் சில சங்கடங்களை எதிர் நோக்க வேண்டும். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்காவது பெற்றோர்களோடு வாழ்ந்து நிறைய விடயங்களை கற்று உள்வாங்கிய பின்
தனிக்குடித்தனத்திற்கு போவது நன்றென்பது எனது கருத்தாகும்.

ஏனென்றால் முதலிலே தனிக்குடித்தனம் போய் விட்டால் அங்கே கணவன் எப்படி நடந்து





கொள்கின்றான் அவருடைய பின்னணியிலுள்ள பிழைகள் என்ன என்பதனை பெற்றோர்கள் கண்டு கொள்ள முடியும். உடனடியாகவே தனிக் குடித்தனம் போனால் அதை அவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள். நிறைய பிரச்சினைகளுக்கு ஆளாவார்கள்.

அப்படி குறைபாடுகளிருந்தாலும் குடும்பத்தோடு வாழும் போது அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து நல்லதொரு கணவனாக வாழ்வதற்கு ஏதுவாக அமையும்.

ஆகவே தான் இளம் வயது திருமணங்களை நடாத்தும் போது நாங்கள் சிறிது சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம். நல்ல முறையில் அவர்களை வழிநடாத்தக் கூடியவர்களாக பெற்றோர்களாகிய நாம் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஊன்றி கவனிக்க கூடியவர்களாக இருக்கின்றோம். ஆகவே இளவயது திருமணங்கள் ஆரம்பத்திலேயே முடிந்து விடாமல் கடைசி வரைக்கும் குழந்தைகளோடு சீரும் சிறப்புமாய் வாழ்வதற்கு பெற்றோர்களாகிய நாமும் மிகவும் நிதானத்துடனும் சிந்தித்தும் செயற்படுவது நலமென நினைக்கிறேன்.

## கிறுக்கல் கனவுகள்


சப்னா லத்தீப்
நிந்தவூர்க்கவி


உன்னை வைத்து கிறுக்குத்தனமான
ஆசைகளே எனக்கு......
நடுநிசி பொழுதுகளில் மட்டும்
உன் நினைவுகள் என்னிதயத்தில்
ஒய்யாரமிட்டு ஊஞ்சலாடும்

நிலவோடு மணிக்கணக்கில்
உன்னோடு மகிழ்ந்த தருணங்களை
கதை பேசி மகிழும்

வெளிறிப்போன
சுவர்களோடு கண்களால்
பார்வைகளில் உள்ள உன் விம்பத்தை
பிரதிபண்ணி ரசித்துச் சிரிக்கும்

மடித்து கிடக்கும் புத்தகம்
நடுவே உன் பெயரை நூறுமுறை எழுதி
மனதில் மகிழ்ந்து கொள்ளும்

எல்லாம் முடித்து
என் பையை திறந்து பார்த்தால் உன் புகைப்படம்
ஓரக்கண்ணால் என்னை
சத்தமின்றி காதல் யுத்தம் செய்யும்

பிறகு பார்த்தால் எங்கிருந்தோ
கீச் என்ற சத்தம் வந்தது
கண்களை திறந்தால் விடிந்து விட்டது
கனவிலே நீயும் மடிந்து விட்டாய்

மீண்டும் நாளை வா
என் கனவில் உன் முகம் காண
கனவு மட்டும் தான் என் தொடர்பு........
தொலைந்து போன என் டைரி நீ அன்பே.....

மை தீர்ந்து போன பேனா இவள்

# ஒப்பீடு

மருதமுனை ஸூபா

இறைவனின் படைப்பில்
இயற்கையொரு வரம்
அவ் எழில் சோலையுள்
பயணித்துப் போகையிலே...
ஒவ்வொரு படைப்பும்
ஒவ்வொரு வகை
கூடுகட்டவொரு குருவி
தோகை விரிக்க மயில்
கூவும் குயிலென
தனிச்சிறப்பு வாய்ந்த
இச் சாம்ராஜ்ஜியமே
தனக்கேயான தனியழகு
வாழ்வின்
பாதி நாட்களை
பிறருக்காகவே
கரைப்பவன் மனிதன் மட்டுமே

என்ன நினைப்பார்களெனும்
வினாவையேந்தி
அங்கிகாரம் பெற
இருத்தலெனும்
இருள் வட்டத்தினுள்
அமிழ்ந்து போகின்றான்
அவனுக்கேயான
பயமும்

பதற்றமும்
பாதுகாப்பின்மையும்
இதற்கொரு காரணமாகலாம்
முதலில்
நேசமும்
நம்பிக்கையும்
உண்மையும்
உனக்காகவிருக்கட்டும்
நீ நீயாகவிரு
வாழ்க்கை அழகானது
அற்புதங்கள் நிறைந்தது
அதுவொரு கலை
அதுவொரு ரசனை
பிறர் போல வாழ வேண்டும்
எனும் ஒப்பீடே
வாழ்வைச் சிதைத்து விடுகிறது.

# COMPARISON

**Maruthamunai soofa**
**Translated by :**
**Mareena Ilyas Shafee**

Blessed is the nature
In God's creation...

When traveling along the grove
It will prove
Every creation is unique ...

A nesting bird
A peacock to spread its wings
The sound of cuckoo
Everything is exclusively beautiful
In the kingdom of nature...

The life of a man
On the other hand
Partly spent in vain
As he tries to be the 'other'
Wasting his time...!

Of other's opinion
Often he worries
To gain recognition
He grows fussy
And sinks within
The circle of darkness ...!

Feeling insecure
Along with tension and fear
May be the reasons
That makes him bother

First of all
Let love, hope, and sincerity
Be for you above all !
Be yourself...!

Life is tremendous
With full of wonders
It is an art
With the power to enchant ...!

Dreaming to live like others
Or comparing yourself with another
May distort the life of yours...
Be yourself ...!

## ஹகீமா அமீனுதீன்



# மழலையின் மனவிருத்தி (Early Child Care Development)

பர்ஸானா எம் பி
பொதுச் சுகாதார மருத்துவ மாது
அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை.
கல்முனை



அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் வழங்கியிருக்கும் மாபெரும் நிஹ்மத் ஆன குழந்தைச் செல்வமானது அதன் புன்னகை, நடத்தல், சிரித்தல், முன்னேறுதல் போன்ற பல் வேறு கட்டங்களில் எம்மை மகிழ்வுக்குட்படுத்துகின்றன.

அவ்வாறான குழந்தைகள் பெற்றோரை மகிழ்வுக்குட்படுத்தும் ஒவ்வொரு படி நிலைக்குமான அஸ்திவாரம் அப்பெற்றோர்களாலேயே தான் இடப்படுகின்றது என்பது தான் நிதர்சனமான உண்மை.எதுவுமறியா அப்பச்சிளம் சிசுக்கள் 0--3 வயதிற்குள்ளேயே தான் மூளையின் 85% ஆன வளர்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றனர் அல்ஹம்துலில்லாஹ்.

அதாவது ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சியானது கருவறையிலேயே தொடங்கி விடுகின்றது. நாம் அனைவரும் குழந்தையின் உடல் தான் வளர்ச்சியடைகின்றது என்று எண்ணிக் கொண்டு குழந்தையின் உடல் வளர்ச்சி பற்றிய கற்பனைகளையே பண்ணிக் கொள்கின்றோம். என்பதை நாம் அறிவதில்லை. பெற்றோர்கள் கொடுக்கும் ஒவ்வொரு தொடுகை, தூண்டுதல்கள் ரசனை என்பன குழந்தையை five windows களின் மூலமாய் உணர்கின்றது. இவ்வுணர்வானது குழந்தை வயிற்றினுள் இருக்கும் போது நடைபெறும் primary sensery cortex மூலமாக செயற்படுகின்றது

குழந்தை கர்ப்பப்பையில் இருக்கும் போதே
touch (4ம் மாதத்திலும்) vision (7ம் மாதத்திலும்)smell(வயிற்றில் உள்ள போதேயும்)
hearing(7ம் மாதத்திலும்) taste (7கிழமையாலும்)

இந்த windows களினாலும் குழந்தை உணர்வு பெற்று குழந்தையின் உள விருத்தியில் இன்னும் விரிவடைகின்றது. குழந்தையின் மனநலனில் அக்கறையுள்ள பெற்றோர் குழந்தையின் வாழ்வில் மாற்றங்களை, வெற்றியை கொண்டு வர வேண்டுமாயின் அந்த தாயின் மனமும் சூழலும் இன்பமானதாய் இருத்தல் வேண்டும்.
இதனைக் கவிநடையில் இப்படிக் கூறலாம்.



காலாற நடந்திட கண்ணே –உன்
காதோரம் அவன் கதை பேசிட
அந்த நாணலின் நளினத்தில்
நடனம் பயின்றிடு
நலம் கொள்வான் உன்சிசு

ஆற்றங்கரை மணலை அள்ளி

விளையாடி
துள்ளி எழும் கெளுத்தியுடன்
வெள்ளி மணியே கொஞ்சிப்பேசிடு
உன் குழந்தையும் கொஞ்சம் பேசட்டும்

கவியும் காவியத்துடனும்
உறவு கொண்டாடு
கருவுக்குள் உறங்கும் கண்மணியும்
கலைமகளாகும்.



கல்பு நிறைய குர்ஆனை ஏற்று
கண்ணில் ஒளி விளங்க
கரம் கிட்டும் உன்குழந்தை
ஒவ்வொரு படைப்பினங்களையும் ஒவ்வொரு அத்தாட்சிக்காகப் படைத்திட்ட எம்றப்புல் ஆலமீனின் மேலான படைப்பான இக்குழந்தைகளானது 100 மில்லியன் நரம்புகள் தலையில் இணைக்கப்படாமலேயே பிறக்கின்றன. இந் நரம்புகள் இணைக்கப்டுவதற்கு synapses (மூளையில் காணப்படும் கலங்கள்) உருவாக்கப்பட வேண்டும்.இச் synapsesகள் உருவாக்கப்பட மீண்டும் மீண்டும் கொடுக்கப்படும் தூண்டுதல்களே காரணமாகிறது.இவ்வாறு கொடுக்கப்படும் தூண்டுதல்களால் ஒரு நரம்பு 15000 வேறு கலங்களுடன் அல்லது மையக்கலங்களுடன் இணைக்கப்பட்டு synapsesகளை உருவாக்கும்.இவ்வாறு 3 வயது வரை கொடுக்கப்படும் தூண்டுதல்களே மூளையினை 85% வீத வளர்ச்சிக்கு கொண்டு செல்கின்றது. இவ்வுலகைப்படைத்து அணுவின் அசைதலையும் திட்டமிட்டபடியே படைத்த அந்த றஹ்மானின் திட்டங்களில் இம்மூளையின் நரம்புகளின் இணைப்பும் பாரியதொரு சக்தியாகும்.அச்சக்திகளை உருவாக்கிட கரு உருவானது தொடக்கம் 3 வயது வரை இன்பமூட்ட வேண்டும்.கைகளில் இருக்கும் குழந்தையை அடிக்கடி முத்தமிடுவதும் அணைப்பதும் பல தூண்டுதலை அக்குழந்தையில் ஏற்படுத்தும். எனவே எல்லாக் குழந்தைகளும் ஓரே சீருடனேயே உருவாகின்றன. இவ்வாறான இணைப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்களிலேயே தங்கியுள்ளது. அது எம் கடமையுமாகும்

#love,care,security
#health services
#nutrition
#stimulation
#learning opportunity

போன்ற காரணங்களாலே அதிகளவான synupses மூளையில் உருவாகின்றன. நீங்கள் மேலும் மேலும் கொடுக்கும் அன்பு ,பாசம் அரவணைப்புக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

love ,care ,security ஐ ஆரம்பத்தில் குழந்தை தாயிடமே உணரத் தொடங்குகின்றது. பால் குடிக்கும் போது தாயின் இதயத்தின் ஓசையை உணர்கிறது அதை மேலும் மேலும் உணரும் போது தாய் தான் தனக்கு பாதுகாப்பு நிறைந்தவர் என்பதை குழந்தை உணர்கிறது. மேலும் parts of health இன் துணையுடன் அடுத்த கட்டத் தூண்டுதல் என்பது கட்டாயமாக குழந்தைக்கு ஊட்டப்பட வேண்டிய ஒன்று.

கரு சிசுவாகி குழந்தையாகி சிறுவர் ஆகும் ஒவ்வோர் படி நிலையிலும் தூண்டப்படும் விடயங்கள் நல்லனவா



இல்லையா என்பதிலேயே மூளை வளர்ச்சியை ஏற்படுத்துபவையா அல்லது இழப்பவையா என தீர்மானிக்கப்படுகின்றது.சிசு வளர வளர வீட்டிலுள்ளவர்களும் குழந்தையுடன் நடந்து கொள்ளும் செயற்பாடுகளில் தான் இது தங்கியுள்ளது.எனவே கருணையும் கரிசனை மிக்க சிறப்பான குடும்பத்தினாலேயே சிறப்பான குழந்தையை உருவாக்க முடியும்.இவை எதுவும் அல்லாஹ்வின் நாட்டமின்றியும் நடை பெறாது .எனவே தூண்டதல்கள் மட்டுமன்றி எம் குழந்தைகளுக்கான துஆக்கள் மிகப் பெறுமதியானவை.

மேலும் எம் குழந்தை ECCD (early child care development)இற்கான குழந்தையாக இருப்பின் அன்றாட செயற்பாடுகளில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தூண்டுதல்களை பார்ப்போமானால் பல வகையான செயற்பாடுகள் உள்ளன. உதாரணமாக குழந்தையை தொட்டிலில் இடும் போதும் படுக்க வைக்கும் போதும் கவர்ச்சியான பொருட்கள் அதாவது

♦பெரியகண்ணுள்ள மீன்கள்

♦நட்சத்திரங்கள்

♦நிறப்பந்துக்கள்

இவ்வாறானவற்றை கண்கள் பார்க்கும் படியாய் தொங்க விட வேண்டும் இது மூளையின் வளர்ச்சியை தூண்டும். இது போல் குழந்தையின் ஐம்புலன்கள் தூண்டப்படும் ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் இரசாயன மின்சார மாற்றங்கள் மூளையில் ஏற்படும். அல்ஹம்துலில்லாஹ்

தொடர்ச்சியாக ஒரு செயற்பாட்டால் பார்வை,எண்ணங்கள்,அசைதல் போன்றவற்றில் ஏற்பட்டு கொண்டே இருக்கும் மாற்றங்களால் அனுபவங்களால் மூளைக்கலங்கள் அதிகரிக்கும்.குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊக்கப்படுத்தல்களின் சத விகிதத்தைப் பொறுத்து இது குழந்தைக்கு குழந்தை வேறுபடும்.எனவே குழந்தைகள் அதிகளவில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இது ஒவ்வோர் பெற்றோரின் கடமையுமாகும். ஏனெனில் அல்லாஹ் பராமரிப்பாளர்களாகவே எம்மை படைத்துள்ளான் .உதாரணமாக 10 மாத குழந்தைகளுக்கு நிறத்தை தெரியாதே என்று எண்ணவேண்டாம் 10 மாத குழந்தையிடம்



♦ "நீல நிறக் கத்தரிக்காயை கொண்டு வாங்க மகள் "

♦"மஞ்சள் நிற பந்தை வீசுங்க மகன்"

போன்ற வசனங்களை கையாள்வதன் மூலம் நிறம் பற்றிய உணர்வு தூண்டப்படும்.இவ்வாறு மேலும் மேலும் குழந்தையை சிந்திக்க தூண்டுவதால் மூளை இன்னும் அதீத வளர்ச்சியடைகிறது.

உங்கள் குழந்தைகள் நேர் சிந்தனை கொண்ட ஜீவன்கள் அவர்களிடம் எதிர்மறையான எந்தக் கருத்தையும் திணிப்பது அவர்களது ECCD I

பாதிக்கும் காரணிகளாகும்.
தண்ணீரை தூக்கிச் செல்லும். குழந்தையிடம்
♦ தண்ணீரை தூக்காதே கொட்டி விடும்
♦ஓடாதே விழுந்து விடுவாய்
எனவெல்லாம் அதட்ட வேண்டாம் .அவர்களாய் அறிய ,உணர வாய்ப்பைக் கொடுங்கள் .அவர்களாய் விழுந்து மீண்டு எழும்ப கற்றுக் கொடுங்கள்.ஒரு மேய்ப்பாளராய் உங்கள் கடமையை செவ்வனே செய்யுங்கள்.குழந்தையை செய்ய விடாது தடுப்பதும் அதட்டுவதுமான செயற்பாடுகள் மூளைக்கலங்களை பாதிக்கும்.
இது போல குழந்தைக்காலங்களில் வேறு ஏதேனும் வித்தியாசமான தாக்கங்கள் ஏற்படின் அது குழந்தையின் வாழ்க்கை பூராகவும் செல்வாக்குச் செலுத்தும்.அவ்வாறு சில விடயங்கள் ஏற்பட்டு குழந்தை பாதிப்படைந்தால் பிற்காலத்தில் ஏற்படும் பாதகமான விளைவுகளையும் தடுக்க முடியாது.எம் அனைவரின் குழந்தைகளையும் அல்லாஹ் பாதுகாப்பானாக.
இன்னும் நாம் அறியாத சுவாரஸ்யமான விடயம் என்னவெனில் தூண்டுதல் கொடுக்க கொடுக்க அக்குழந்தை 3 வயதை அடையும் போது பெரியவரைப் போல synapses கள் உருவாகி மூளை 85%வளர்ச்சியை அடைந்து விடும்.பெரியவரைப் போல 85% வளர்ச்சியா என எம் கண்கள் அகல விரிகிறதா ஆமாம் 85% வளர்ச்சியை இந்த 3 வயதிற்குள் அடைந்து விடுகின்றது.ஆனால் துரதிஷ்டம் என்னவெனில் இது 10 வயதில் இருந்து குறைய தொடங்கி 14 வயதில் 1/2 வாசியாக குறைந்து விடும் . இதற்கு காரணம் அனேகமான குழந்தைகளில் 10வயதுடன் தூண்டுதல்கள் குறைவடைவதாகும் ஆனால் உங்களின் தொடர்ச்சியான தூண்டுதல்களும் ஊக்கப்படுத்தல்களும் போசணையும் கொடுக்கப்படும் போது மூளை வளர்ச்சி அரைவாசியாக குறைய மாட்டாது. அல்லாஹ் போதுமானவன்.
ஆயினும் ஆதரவின்மை, சிறுவர் துஷ்பிரயோகம், எடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள், இடம் பெயர்வு, போஷாக்கு குறைவான உணவுகள், படிக்க சந்தர்ப்பமின்மை ,என்பன குழந்தையைப் பாதிக்கும் காரணிகளாகும்.

- •பேசுவதற்கு( to speak)
- •கற்பதற்கு(to learn)
- •ஆராய்ந்து யோசிப்பதற்கு (to analysic thinking )
- •நன் நடத்தைக்கு (to good behaviour)

இவற்றிற்கு மூன்று வயதிற்குள் குழந்தைக்கு தளம் இடப்படுகின்றது. மேலும் இம்மூன்று வயதிற்குள் சரியான துாண்டுதல்கள் வழங்கப்பட்டால் கீழ் வருவனவற்றில் உங்கள் குழந்தையின் அடைவுகள் சிறப்பானதாய் காணப்படும்.
♦வளர்ந்தோருக்கான புத்திக்கூர்மை (eognative)
♦நுணுக்கம்(fine motor)
♦மனப்பான்மை (attitudes)
♦விழுமியங்கள்(values)
eg. தும்மும் போது sorry,வெளியே செல்லும் போது excuse,good behiviour,culture
♦உணர்வைவெளிப்படுத்துதல;(feeling expression)
♦மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் ஆற்றல் (intradaction between others)
♦communication ability
மாஷா அல்லாஹ் நம்குழந்தைகள் மேல் குறிப்பிட்டவற்றில் சிறந்த அடைவுகளை எட்டி இருப்பின் நம் குழந்தைகளின் உலகம் வெற்றியானது ,வெளிச்சமானது.அல்லாஹ் பரக்கத்



செய்வானாக.
எனவே குழந்தைகள் வளர்வதற்கான

- சந்தோசமான சந்தர்ப்பங்களை (happy occasions) உருவாக்கி கொடுக்க வேண்டும்
- கற்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்;(to talk, tell story)
- வயதிற்கேற்ற உணவுப்பழக்கம்

eg:

♦6மாதம் தனித்தாய்ப்பால் மட்டும்

♦7மாதத்தால் பாண், கிழங்கு துண்டுகளை கைளால் பிடித்து சாப்பிட முயற்ச்சித்தல்.

♦ஒரு வயதில் சோற்றை அள்ளிச் சாப்பிட பழக்குதல்

போன்ற குழந்தைகளின் உரிமைக்கும் சுதந்திரத்திற்கும் நாம்



தீங்கு செய்து விடலாகாது பாதுகாக்க வேண்டும். உங்கள் குழந்தையின் மீதான பாசத்தை வேறு முறையில் பயன் படுத்தி விடக்கூடாது .

உதாரணமாய் குழந்தை பருமனடைய வேண்டும் என்பதற்காய் புட்டிப்பாலையும், வளர்ந்தும் கூட மசித்த உணவையே ஊட்டி விடுவதும் கூட தவறாகும்.

குழந்தைகள்: பார்த்தல் (seen) நுகர்தல்(smell ) கேட்டல் ( hear )ருசித்தல் (taste )
உணர்தல் ( feel)

இவைகள் மூலமே தான் கற்கின்றார்கள் . எனவே எம் செல்வங்களை பொறுப்போடும் கருணையோடும் பாதுகாத்து பெறுமதியான பிரஜையாக மாற்றிடுவோம். இதில் 6மாத காலத்தில் தனித்தாய்ப்பால் எனும் விடயம் விரிவான விளக்கம் வழங்கப்பட வேண்டிய விடயமாகும் இன்ஷா அல்லாஹ் அதனை பிறிதொரு தலைப்பில் வழங்கிட விரும்புகின்றேன். இறைவன் துணை செய்வானாக.

## ரிபாஸ் ரிஸ்லா



# அவரி இதழ் 03 முழுமையான பார்வை




**கவிஞர் நூலாசிரியர் அஸீஸ் எம் பாயிஸ்**
**கீறல் சஞ்சிகை பிரதம ஆசிரியர்**

உயர நின்று நெற்களின் பதர் தூற்றி நல்ல நெல்லை பிரித்தெடுத்துக் கொடுக்கப் பயன்படும், மூன்று கால் கொண்டு வைக்கோல் கயிற்றினால் திரித்துக் கட்டப்பட்ட உயரம்தான் அவரி என்பது. அந்த அவரியின் பெயரைத் தாங்கி வெளிவரும் இந்த அவரி சஞ்சிகையும் பதர்களற்ற நல்ல படைப்புக்களை தருவதில் அதீத பிரயத்தனமெடுத்துக் கொண்டு இன்று முன்னே வந்து கொண்டிருக்கும் ஒரு இலக்கிய பல்சுவை மாதர் சஞ்சிகை எனலாம்.

சிறுபிள்ளை செய்த வேளாண்மை வீடுபோய் சேராது என்பது போல் பெண்கள் நாலு பேர் கூடி வெளியிடும் இந்த சஞ்சிகையெல்லாம் எங்கே மிளிரப் போகிறது என்று சிலர் தவறாக எடைபோட்டுக் கொண்டிருக்க அதையெல்லாம் தாண்டி ஒரு தரமான பெண்கள் இலக்கிய சஞ்சிகையொன்றினை இலக்கிய உலகிற்கு கொண்டு வந்து வெற்றி கண்டிருக்கிறது "சிறிலங்கா பென் கிளப்" என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பெண்களுக்கான தனி இடத்தையும் பாதுகாப்பையும் கட்டுக் கோப்பையும் ஒழுக்க நடைமுறைகளையும் நல்ல பல கலைகளையும் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற சிந்தனையும் தேட்டமும் உள்ள ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இந்த அமைப்பு இயங்குவதாலோ என்னவோ எல்லா விடயங்களிலும் மிகச் சிறப்பாக மிளிர்ந்து வருகிறது எனலாம். இலக்கிய ஆளுமை கவிதாயினி சம்மாந்துறை மஷூறா அவர்களே சிறிலங்கா பென் கிளப்பின் தலைவியும் அவரி சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியரும் என்பது குறிப்பிடத் தக்கது.

ஈழத்தின் சிறு சஞ்சிகைள் என்பது பொதுவாகவே காலத்துக்குக் காலம் தோன்றி மறைவதுதான் என்ற பொதுவான கருத்து எல்லோர் மத்தியிலும் இருந்து வருகின்றது. அந்தக் கருத்தினை உடைக்கும் வகையில் பெண்கள் அமைப்பான "சிறிலங்கா பென் கிளப்" ஆரம்பித்து மிகக் குறுகிய காலமாக இருந்தாலும் தனது 03 ஆவது இதழ்வரை



தொடர்தேர்ச்சியாக கொண்டு வந்திருக்கும் இந்த முயற்சியானது உண்மையில் மனந்திறந்து பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஈழத்தில் பெண்கள் அமைப்புக்களினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளாக "பெண்ணின் குரல்","நங்கை","தாகம்" போன்றன 1979, 1988 காலப்பகுதிகளில் வெளிவந்த சஞ்சிகைளாகும். பிற்பட்ட காலங்களில்"பெண்"," பெண்கள் சந்திப்புக் குரல்" "தோழி","நிவேதினி","நாற்று","சக்தி" போன்ற சஞ்சிகைகள் ஈழத்திலும் புலம் பெயர் நாடுகளில் வெளிவந்தன. "தோழி" சஞ்சிகையானது 1984 ல் செல்வி தியாகராராசாவால் யாழ் பல்கலைக் கழக விடுதியிலிருந்து தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டதாகும்.

"பெண்களின் குரல்" சஞ்சிகையானது தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்ட ஒரு சஞ்சிகையாகும். Voice of Women என்று ஆங்கிலத்திலும் "காந்த ஹண்ட" என்று சிங்களத்திலும் வெளிவந்தது. தமிழுக்கு ஆரம்பத்தில் செல்வி திருச்சந்திரனும் பின்னர் திருமதி பத்மா சோமகாந்தனும் ஆசிரியர்களாக இருந்து வந்துள்ளனர். நங்கை இதழானது திருமதி சரோஜா சிவச்சந்திரனை ஆசிரியராகக் கொண்டு யாழப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் வெளியிடப்பட்டு வருகின்றது.

மேலும் மட்டக்களப்பு பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் வெளியிடப்பட்டு வருகின்ற மற்றுமொரு சஞ்சிகைதான் "சூரியா" ஆகும். இந்த இதழின் சிறப்பம்சமாக ஒவ்வொரு இதழுக்கும் ஒருவர் ஆசிரியராகக் காணப்படுவதாகும்.

அதேபோல் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு ஆசிரியரைக் கொண்டு தனியே முஸ்லிம் பெண்கள் அமைப்பு ஒன்றினால் தற்போது வெளியிடப்பட்டு வரும் பெண்கள் இலக்கிய இதழ்தான் இந்த அவரியும்.

இதழுக்கொரு ஆசிரியரைக் கொண்டு வெளிவருவதென்பது உண்மையில் மாறுபட்ட ஒரு எண்ணக் கரு மாத்திரமல்லாமல் அமைப்பில் இருக்கும் சகல எழுத்தாளர்களுக்கும் தங்களது திறமையை வெளிக்காட்டவும் வளர்த்துக் கொள்வும் அவர்களது மாறுபட்ட சிந்தனைகளில் இதழ்களைக் கொண்டு வரவும் கொடுக்கப்படும் மிகப்பெரிய வாய்ப்பும் சந்தர்ப்பமும் என்றால் அது மிகையாகாது. முஸ்லிம் பெண்கள் அமைப்பு ஒன்றினால் ஈழத்தில் வெளியிடப்படும் இலக்கிய சஞ்சிகை என்றால் அது "அவரி"யாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

வெள்ளோட்ட முயற்சியாக வெளிவந்த அவரியின் இதழ் 01, 02 என்பன சிறப்பான பாராட்டையும் வரவேற்பையும் பெற்றதன் பின்னர் வெளிவந்திருக்கும் இதழ் -03 ஐ நோக்குவோமானால் இது ஒரு பெண்கள் அமைப்பால் வெளியிடப்படும் சஞ்சிகைதானா என ஆச்சர்யம் கொள்ள வைக்கும் அளவிற்கு இந்த இதழ் மிகச் சிறப்பாக வெளிவந்திருக்கிறது.

"சிறிலங்கா பென் கிளப்" ன் தலைவி கவிதாயினி சம்மாந்துறை மஷூறா வை நிர்வாக ஆசிரியராகவும் மொரட்டுவையைச் சேர்ந்த கவிதாயினி கலைக்குரல் லைலா அக்ஷியாவை இதழ் 03 ன் ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்திருக்கும் இவ்விதழின் சஞ்சிகைக் குழுவானது இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் "சிறிலங்கா பென் கிளப்" ன் இலக்கியச் செயற்பாட்டாளர்களைக் கொண்டு இயங்கி இருக்கிறது.

கொழும்பிலிருந்து வ.ஃபீரா வ.ஃபி, மக்கொனவிலிருந்து ஸஹ்லா மில்பர், ஏறாவூரிலிருந்து என்.எம்.ஆரிபா, கட்டுகஸ்தோட்டையிலிருந்து ஷாமென் நிஸாம்டீன், நிந்தவூரிலிருந்து பர்ஸானா எம்.பி சாய்ந்தமருதிலிருந்து றிப்கா அன்சார், இவர்களுடன் மருதமுனையிலிருந்து ஜெஸீமா முஜீப்

ஆகியோர் அவரியின் சஞ்சிகைக் குழுவில் இருந்து செயற்பட்டு இவ்விதழ் வெளிவந்திருப்பது உண்மையில் மகிழ்ச்சியைத் தருகிறது. இன்றைய நவீன இலத்திரனியல் உலகில் ஒருத்தரை ஒருத்தர் சந்தித்துக் கொள்ளாமலேயே தூரத்தில் இருந்தவாறே ஒரு இலக்கிய சஞ்சிகையை வெளிக்கொணரலாம் என்ற உண்மையை உலகத்திற்கு தெரியப்படுத்தியிருக்கிறது "சிறிலங்கா பென் கிளப்". "பரீட்சயம் இல்லாத முயற்சி என்றாலும் அவரியின் சஞ்சிகைக் குழுவினர் இவ்விதழுக்காக சிறப்பாக செயலாற்றியுள்ளார்கள்" என்று நிர்வாக ஆசிரியர் சம்மாந்துறை மஷூறாவின் சிறப்பான வாழ்த்தோடு ஆரம்பிக்கும் அவரியில் "எமது ஆற்றலுள்ள பெண்களின் ஒவ்வொரு திறமையும் அது வித்தாக செடியாக ஆரம்பித்து மரமாக பெருவிருட்சமாக வளர்ந்து சமூகத்திற்கு பயனளிக்க வேண்டும் அதற்காக இந்தச் சஞ்சிகையை நான் சரியாகவே உபயோகப்படுத்தியுள்ளேன் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்கிறார் இதழ் 03 ன் ஆரிசரியர் லைலா அக்ஷியா. மேலும் புழக்கத்தில் அதிகம் பேசப்படாத ஒரு சொல்லான "அவரி" என்பதுக்கு உயிர் கொடுத்திருப்பது என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது என்கிறார் இலக்கிய செயற்பாட்டாளர் கவிஞர் பஹ்மி ஹலிம்தீன்.

பெண்கள் சஞ்சிகையொன்றிற்கு பொருத்தமான அழகிய நீல வர்ண அட்டைப் படத்துடன் வெளிவந்திருக்கும் அவரியானது மொத்தமாக 48 பக்கங்களைக் கொண்டிருக்கிறது. மொத்தமாக பார்க்கும் போது இவ்விதழானது 13 கட்டுரைகளும், 10 கவிதைகளும், 04 சிறுகதைகளும், 02 சிறுவர் கதைகளும், ஒரு பாடல் மற்றும் இரண்டு நேர்காணல், பெண்களால் வரையப்பட்ட ஓவியங்கள், மற்றும் சமையல் குறிப்புகளும் சிந்தனைத் துளிகளும் நகைச் சுவை துணுக்குகளும் என பல்வேறு ஆக்கங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் எழுத்துத் துறையில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வரும் "பத்தி" என்ற சொல் பற்றி இணையத்திலிருந்து லைலா அக்ஷியா தொகுத்திருக்கும் அவரி இதழ் -03 ன் முதலாவது சிறிய கட்டுரையானது பத்தி என்றால் என்னவென்ற சுருக்கமானதும் தெளிவானதுமான ஒரு விளக்கத்தை வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறது. இதே பக்கத்தில் சிந்திக்கத் தூண்டும் துணுக்கான நல்ல சில சிந்தனைத் துளிகளை ரிபாஸ் ரிஸ்கா எழுதியிருக்கிறார்.

போலியான இரசாயனம் கலந்த முகப்பூச்சு அழகுசாதனப் பொருட்களுக்கு அடிமையாகி உரித்துக் கழுவிய இறால் போல ஆகிவிடும் பெண்களுக்கு உச்சி மண்டையில் உறைக்கும்படி எது உண்மையான அழகு என்று சொல்லும் "அழகு அகத்தின் குறியீடு" என்ற சம்மாந்துறை மஷூறாவின் கட்டுரை காலப் பொருத்தமானதும் சிந்திக்கக் கூடியதுமானதாகும்.

எதுவித பேராசைகளும் இல்லை படுக்கையிலே விழுந்தால் மெய்மறந்து அயரும் தூக்கம் அடுத்தவருக்கும் உதவும் நல்ல மனம், ஓய்வைக் கழிக்க ஒரு பேனா கொறிக்க கடந்த கால ஞாபகங்கள்..... இப்படி அழகான பல விடயஙக்ளை சொல்லி இது போதுமெனக்கு என்னும் கவிதாயினி சம்மாந்துறை மஷூறாவின் தமிழ் கவிதை ஒன்றினை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து நல்லதொரு துவக்கத்தை செய்திருக்கிறார் கவிதாயினி மரீனா இல்யாஸ் ஷாபி. நமது படைப்புக்களை பிறமொழிகளுக்கு மாற்றி அவற்றை பிற மொழி ஊடகங்களிலும் பிரசுரம் செய்ய வேண்டிய காலத்தேவையுடைய காலம் இது அவ்வாறான இந்த காலகட்டத்தில் மரீனா அவர்களின் இந்த முயற்சி மிகவும் பாராட்டப்பட வேண்டியது. தொடர்ந்து வரும் இதழ்களிலும் ஒவ்வொரு படைப்பாளிகளின் கவிதைகளையும் அவர் மொழிமாற்றம் செய்ய அவரி

இடமளிக்க வேண்டும். மேலும் மொழிமாற்றம் செய்யப்பட்ட இந்த கவிதைகளை அவர் முடிந்தால் மேற்குலக பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்ய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பது எமது ஆசை.

அடுத்து இவ்விதழில் இடம் பெற்றிருக்கும் மிக முக்கியமானதும் மொத்த சமூகத்திற்கும் பயனுள்ளதுமான ஒரு கட்டுரைதான் சட்டத்தரணி நூருஸ் ஷப்னா நஜ்முல் ஹுஸைன் அவர்களின் குடும்ப வன்முறை தொடர்பான கட்டுரை. குடும்ப வன்முறை என்றால் வெறுமனே கணவன் மனைவிக்கிடையில் இடம்பெறும் சண்டை சச்சரவுகள் துன்புறுத்தல்கள் என்றே நாம் இத்தனை காலமும் நினைத்திருந்திருக்கலாம் ஆனால் அது அவ்வாறால்ல என்றும் குடும்ப வன்முறைகளின் வடிவங்களையும் அது பற்றிய பல தெளிவான சட்ட விடயங்களையும் சட்டத்தரணி நூருல் ஷப்னா முன்வைக்கிறார். உண்மையில் இவ்வாறான ஏராளமான அடிப்படைச் சட்டங்களை நமது சமூகம் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே தொடர்ந்தும் இவ்வாறான கட்டுரைகளை வெளியிட அவரி முனைய வேண்டும் என்று ஒரு வாசகனாய் ஆசை கொள்கிறேன்.

காதல் என்ற தலைப்பில் றமீனா ஐயூபின் சிறிய கவிதை காதலை உருவகப் படுத்தி உணர்வில் சேர்கிறது. அதில் ஒரு வரி இப்படி ருசிக்கிறது. காதலானது -

**"காத்திருப்பின் கடினத்தை**
**கணப்பொழுதில்**
**உணர்த்திக் கொண்டே**
**இருக்கும்"**

அடுத்து 11 ஆம் பக்கத்தை அலங்கரிக்கும் மற்றுமொரு கவிதை பர்ஸானா எம்.பி அவர்களின் "நிஜ மாயையின் பொய் விம்பம்" தந்தை எப்படிப் பட்டவனாய் இருந்தாலும் ஒரு தாய் தன் குழந்தைக்குத் தந்தையை பற்றி கொடுக்கும் விம்பமே அந்தக் குழந்தை பிற்காலத்தில் தாய் தந்தையரை மதிக்கக் காரணமாக அமைகிறது. அப்படியான ஒரு தெளிவினை தன் மகனுக்கு கொடுக்கும் ஒரு தாயின் வார்த்தைகளைக் கொண்ட அற்புதமான கவிதை இது. தந்தையை பற்றி ஏராளமான மாயைகளை உண்மையாக சொல்லி நிஜத்துக்கு பொய் விம்பம் கொடுக்கும் ஒரு அழகிய தாயின் முன்மாதிரியை மிக அழகான வரிகளில் அற்புதமாக சொலியிருக்கிறார் பர்ஸானா. அதில் கிராமிய மணம் பூசும் ஒரு வரி இப்படி சுவைக்கிறது.

**"உன் அதே நீலக்**
**கண்கள்தான்**
**அவனுக்கும்**
**உன் அன்பைச் சொல்லும்**
**போதெல்லாம்**
**அது ஆச்சர்யத்தில் விரிகிறது**
**நாசியில் ஒட்டிக் கொண்டு**
**இனிக்கும்**
**பிணாட்டின் ருசிபோல**
**தந்தை பற்றிய அவனது**
**கற்பனை முழுக்க**
**நீயே தித்திப்பாயிருக்கிறாய்."**

அடுத்து இ.ஒ.கூ. முஸ்லிம் சேவையின் முதல் பெண் கட்டுப்பாட்டாளர் பாத்திமா றினூஸியா ஜௌபர் அவர்களின் நேர்காணல் ஒரே பக்கத்தில் ஐந்து கேள்விகளுடன் மாத்திரம் இருந்தாலும் மிக நீளமாக இல்லாமல் சுருக்கமாக இருந்ததால் அது வாசிக்கும் ஆர்வத்தை தூண்டுகிறது. வரலாறு கூறும் மிக நீளமான நேர்காணல்கள் பல இடங்களில் வாசிக்கப்படாமலேயே போகின்றன. ஐந்து முக்கியமான கேள்விகளும் அதற்கான சுருக்கமான அழகான பதில்களும் இனிவரும் செவ்விகளுக்கு நல்ல முன்மாதியாக அமையும்.

அவரி 03 ல் இடம் பிடித்திருக்கும் முதலாவது சிறுகதை புத்தளம் ரஸூல் நகர் ஸதீகாவின் "கைசேதம்" சிறுகதை ஆகும். பணச்செருக்கில் அடுத்தவர்களை மதிக்காது நடக்கும் மனிதர்களை அழகாக புடம்போட்டுச்

செல்கிறது.

மூதூர் ரொஷானா எம் ஸியாவின் "இமைகள்" என்னும் கவிதை பெண்மையை காத்திடும் ஆண்மையின் பெருமையை கூறிநிற்கிறது.

ஏறாவூர் ஆரிபாவின் "சிட்டு" சிறுவர் கதை ஒரு முப்பரிமாண காட்டூன் குறும்படத்தை பார்த்தது போல ரசனையோடு உள்ளது. அழகானதும் சிறுவர்களுக்கு நல்ல சேதியையும் சொல்லும் ஒரு கதை.

அடுத்து மற்றுமொரு புதிய அறிமுகம் பாடலாக்கம். ஏறாவூர் ஜிஃப்ரியாவின் "போகாதே பொண்டாட்டி பொல்லாத வெளிநாடு" என்ற கிராமிய மணம் வீசும் ஒரு பாடல் பிரசுரிக்கப்பட்டு சஞ்சிகைகளில் பாடலாக்கம் என்றவொரு பக்கம் அறிமுகப் படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதும் பாடலாக்கத்தை ஊக்கப்படுத்தும் ஒரு முயற்சியுமாகும்.

காத்தான்குடி அஜீரா கலீல்தீனின் "தலை நிமிர்வு" சிறுகதை "யாவும் உண்மை" என்ற முடிவோடு முழுமை பெறும் ஒரு பெண்ணின் பொறுமையும் தியாகமும் உழைப்பும் என்பதையும் தாண்டி உளவியல் ரீதியான நல்ல கருத்துக்களையும் முன் வைக்கும் ஒரு சிறுகதை.

அவரியின் 19 ஆம் பக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது இறக்காமம் பர்ஸானா றியாஸின் "இத்தா" என்ற கட்டுரை, இத்தா என்பது பற்றி மாற்று மதத்தவரின் கண்ணோட்டங்களும் அதுபற்றிய விஞ்ஞான ஆய்வுக் கருத்துக்களையும் முன்வைத்து எழுதியிருக்கும் இக்கட்டுரை உண்மையில் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது எனலாம். 20 ஆம் பக்கத்தை சுடச் சுடச் சமையலால் சுவைப்படுத்தியிருக்கிறார் திருமலை மர்ளியா. பெண்கள் நடாத்தும் சஞ்சிகை ஒன்றில் சமையல் குறிப்பு இல்லாமல் இருக்கக் கூடாதென்ற குறையை அது நிவர்த்தி செய்கிறது.

வஃபீரா வஃபி அவர்களின் "முற்காலத்திற்கு திரும்பியுள்ள தற்கால பயணங்கள்" என்ற கட்டுரை Positive Thinking (நேரியல் சிந்தனை) சார்ந்ததொரு சிந்தனையை தூண்டும் நல்ல கட்டுரையாகும். இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி மக்களை முற்காலம் நோக்கி எந்தெந்த வழிகளில் பண்படுத்தியிருக்கிறது என்பதையும் அதில் உள்ள நண்மை தீமைகளையும் ஆராய்கிறது.

அடுத்து ஜெஸீமா முஜீப் அவர்களின் சிறுவர் கதையும் சிறுவர்களுக்கு நல் பண்புகளை வளர்க்கும் எடுத்துக் காட்டு நிறைந்த ஒரு நல்ல கதையாகும். சிறுவர் கதை என்ற பெயரில் சிறுவர்களுக்கு சொல்ல முடியாத பாவனைச் சொற்களைப் பயன் படுத்திய பல கதைகள் உலாவரும் இக்காலப் பகுதியில் இவ்வாறான கதைகளை ஆரோக்கியமான கதைகளாகப் பார்க்கலாம்.

தமிழ் இலக்கிய சஞ்சிகையான அவரியின் இந்த இதழுக்கான ஆசிரியர் சிங்கள மொழியில் கட்டுரை ஒன்றினை எழுதியிருக்கிறார். இந்த இதழுக்கு அது எந்த அளவுக்கு பொருத்தம் என்பது ஆராயப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அந்தக் கட்டுரை கொண்டுள்ள உள்ளடக்கமானது -
"யாரிடம் திறமையில்லை எல்லோரும் திறமையுள்ளவர்களே,அடுத்தவர்களிடம் இருக்கும் திறமை உன்னிடம் இல்லையென்று வருந்துவதைவிட உன்னிடமுள்ள ஏதோ ஒரு திறமை அடுத்தவரிடமில்லை என்று வெறித்தனமாகப் பலம் கொள்" என இளைஞர் யுவதிகளுக்கு நம்பிக்கையூட்டும் அழகிய கருத்தாடலுள்ள சிங்கள மொழிக் கட்டுரை அது.
ஆழமான இந்தக் கட்டுரை சிங்களமொழியில் அமைந்ததைவிட தமிழில் இருந்திருந்தால் வாசகர்கள் இரு மடங்கு பயன்பெற்றிருக்கக் கூடும் என்பது எனது அபிப்பிராயம்.

அடுத்து சாய்ந்தமருது றிப்கா

அன்சாரின் "குடும்ப வாழ்க்கை" என்ற கட்டுரையில் ஒரு குடும்ப வாழ்க்கை என்றால் என்ன அது எப்படியிருக்க வேண்டும் என்பதை அழகான சமூகப் பார்வையோடு முன்வைக்கிறார். உண்மையில் இன்று எமது சமூகத்தில் நடக்கின்ற குடும்பப் பிளவுகள் எதனால் ஏற்படுகின்றன என்பதை அழகாகவும் தெளிவாகவும் அதற்கு என்ன தீர்வுகள் என்பதையும் ஆணித்தரமாக முன் வைக்கிறது கட்டுரை.

அவரியின் 27 ஆம் பக்கத்தில் Relax Please என்னும் தலைப்பில் கொஞ்சம் சிரிக்கலாம் வாங்க என்று சின்னச் சின்ன நகைச்சுவைகளை நிறைவாய் தந்து நிறைய சிரிக்க வைத்திருக்கிறார் ஸஹ்லா மில்பர்.

இவ்விதழில் இடம் பெற்றிருக்கும் மற்றுமொரு முக்கியமானதும் பெறுமதியானதுமான கட்டுரைதான் பெண்களில் மாதவிடாய் தொடர்பான தெளிவுகள் பற்றி Dr. ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதியிருக்கும் தொடர் கட்டுரை. மாதவிடாய் தொடர்பாக பெண்களுக்கு இருக்கும் பல சந்தேகங்களுக்கு விரிவான விளக்கத்தை இதன் மூலம் அவர் வழங்கியிருப்பது வெளியில் கேட்க வெட்கப்படும் சந்தேகங்களுடன் இருக்கும் பெண்களுக்கு மிகப் பிரயோசனமானதாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அவரியின் 30 ஆம் பக்கத்தை அலங்கரித்திருக்கிறது ஹுமாதா ஏ கப்பாரின் "தோழிக்கு ஒரு மடல்" என்ற தோழிக்கான நம்பிக்கையூட்டல் நிறைந்த சிந்தனை வரிகள். மனஅழுத்தங்களுக்குள் வாழும் பெண்கள் இப்போதுகளில் ஏராளம் எனலாம். அது குடும்பங்களாலும் சரி கணவன் மனைவி உறவுகளுக்குள்ளும் சரி தொழில் நிலைகளாலும் சரி அவ்வாறான மன அழுத்தங்களுக்குள் வாழும் பெண்களுக்கு இவ்வாறான வரிகள் நிச்சயம் நம்பிக்கையை கொடுக்கும் எனலாம்.

ஹாஜரா கலீலுர் ரஹ்மானின் "தற்கால பிரச்சினைகளிலிருந்து மீளுதல்" என்ற கட்டுரை காலப் பொருத்தமானதும் சமூகங்களின் சிந்தனையை ஒழுங்கு படுத்தி பிரச்சினையிலிருந்து வெளிவருவதற்கான ஆலோசனைகளை வழங்கும் ஒரு சிறப்பான கட்டுரையுமாகும். இன்று நாடும் நாமும் எதிர்கொள்ளும் பாரிய பொருளாதாரப் பிரச்சினைகள் நம்மை கடுமையாகப் பாதிக்காமல் இருப்பதற்கு எவ்வாறான சின்னச் சின்ன மாற்று வழிகளை யோசிக்கலாம் என்பதற்கு நல்ல பல உதாரணங்கள் இக்கட்டுரையில் காணப் படுகிறதெனலாம்.

"தற்கால சினிமாவில் பெண்களின் நிலைப்பாடு" என்ற தலைப்பில் அவரியின் 32 ஆம் பக்கத்தில் இடம்பெற்றிருக்கும் இக்கட்டுரையினை காத்தான்குடி ஜெஸ்மின் ரமீஸ் எழுதியிருக்கிறார். இன்றைய சினிமாவில் பெண்களின் நிலையினையும் அவர்களை சினிமாக்களில் பயன்படுத்தப்படும் விதங்கள் குறித்தும் நிறையவே சாடுகிறார் கட்டுரையாளர். நியாயமான பல கருத்துக்ளை முன்வைத்துச் செல்கிறது கட்டுரை. இருந்தாலும் இன்னும் ஆழமான பார்வையுடன் நோக்கப்பட வேண்டிய தலைப்பு இது. சினிமா தொடர்பான விரிவான ஒரு தேடலுடன் இக்கட்டுரை எழுதப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

அவரியின் 33 ஆம் பக்கத்தை சில ஹைக்கூக்களால் அலங்கரித்திருக்கிறார் கவிதாயினி ஷர்ஜிலா பர்வீன் யாக்கூப். குறைகள் காணமுடியாத அழகான 08 ஹைக்கூக்களை அவர் தந்திருக்கிறார். ஹைக்கூ என்ற பெயரில் மூன்று வரிகளில் எதையெதையெல்லாமோ எழுதும் இக்கால கட்டத்தில் இப்படியான நல்ல ஹைக்கூக்களைக் காணக் கிடைப்பது மனதுக்கு இதமாக இருக்கிறது.

குறுக்கே சென்றேன்
என்னைக் கடந்து
விபத்துக்குள்ளானது
பூனை

மூட நம்பிக்கையை முகத்திலறைந்து எதிர்க் கேள்வி கேட்கும் அற்புதமானதொரு ஹைக்கு.

எம்.சி. மஹ்மூதா ஏ. ரஹ்மானின் "நிஜமான உறவுகள்" கட்டுரை உறவுகள் யாரென்பதையும் அதில் பொறாமை கொள்ளும் போலியான உறவுகளையும் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லாத எழுத்தாளர்கள் குறித்தும் நியாயமான கருத்துக்களை முன்வைக்கிறது.

கலேவெல லரீபா பதுர்தீனின் "நிஜங்கள்" சிறுகதை இன்றைய சூழலில் பிள்ளைகள் பெற்றோர்களை பாரத்துக் கொள்ளத் தவறும் இழிநிலையினையும் அதேவேளை வளர்த்த ஒரு பிள்ளை பெற்ற பிள்ளையின் இடத்தில் நின்று தாயை தாயாகக் கவனிக்கும் நிலையினையும் வளர்த்த பிள்ளைகளை நியாயமற்ற முறையில் நடாத்தும் சமூகத்துக்கு சாட்டையடி கொடுத்துச் செல்கிறது இந்த நிஜங்கள் சிறுகதை.

அவரியானது பெண்கள் சார்ந்து இயங்கும் ஒரு சஞ்சிகையாக இருந்த போதிலும் பார்வையற்ற ஒரு ஆண் கலைஞனை இளைஞனை நேர்காணல் செய்து அவனை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தத் துணிந்திருப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம். இந்த இதழின் ஆசிரியருக்கு ஒரு சபாஷ். கட்புலனற்ற சாதிக்க வேண்டும் என்ற உத்வேகம் கொண்ட ஒரு இளம் கலைஞரை அவரி அறிமுகம் செய்திருக்கிறது. வாழ்த்துக்கள்.

அவரியின் 39 ஆம் பக்கத்தில் இடம் பிடித்திருக்கும் மற்றுமொரு பெறுமதியான கட்டுரைதான் "இளவயது திருமணங்கள்" வத்தளை எஸ்.யூ. கமர்ஜான் பீவி இதனை அழகாக தெளிவாக எழுதியிருக்கிறார். இளவயது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி திருமணமாவதற்கு முதல் வாழ்கை என்றால் என்ன என்பதையும் மார்க்கம் சொல்லும் இல்லறம் என்றால் எது என்ற கல்வியும் அவசியம் கற்பிக்கப் படவேண்டும் அப்போதுதான் விவாகரத்துக்கள் வேண்டி காதி நீதிமன்றங்களில் நிற்கும் குடும்பங்களின் எண்ணிக்கைகளைக் குறைக்கலாம் என்ற கருத்தை ஆணித்தரமாக அவர் குறிப்பிடுகிறார்.

பெரியநீலாவணை சகாப்தீன் அக்கீலா பானுவின் "குடும்ப வாழ்கை" எனும் உளவியல் கட்டுரை குடும்பத்தில் எழும் பல்வேறு பட்ட பிரச்சினைகளையும் அதனை எதிர்கொள்ளும் சில வழிகளையும் சொல்லிச் செல்கிறது.
இருந்த போதும் உளவியல் சார்ந்த உளவியலாளர்களின் கருத்துக்களையும் இக்கட்டுரை சார்ந்து சென்றிருக்குமானால் உளவியல் கட்டுரை என்ற மகுடத்தில் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

அவரியின் 42 ஆம் பக்கத்தை 02 காதல் கவிதைகள் அலங்கரித்து நிற்கிறது. மக்கொனையூராளின் "நேசமடி நீயெனக்கு"

"ஒரு கூடைப் பூக்கள் கொடுத்து
உறவாடிய நேசமில்லை – இது
பலகோடிப் புரிதல்களால்
உயிராகிய நேசம்"

என்னும் வரிகளில் நேசம் என்பது சடவாத எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதிலல்ல மாறாக புரிதல்களில் உயிராவதே உண்மையான நேசம் என்கிறார் கவிஞர்.

நிந்தவூர் றிப்காவின் "எளியவனின் காதல்" காதலியிடம் தன் மனதைச் சொல்லி காதலன் அனுப்பும் மடல். இளைய படைப்பாளிகளையும் அறிமுகம் செய்து அவர்களுக்கும் களம் கொடுத்திருக்கிறது அவரி. நிறைந்த வாசிப்பு றிப்காவின் எதிர்காலக் கவிதைகளை இன்னும் தரமாக்கும்.

அவரியின் 43 ஆம் பக்கத்தை அலங்கரிக்கும் சிறுகதைதான் வரிபத்தான்சேனை எம்.எஸ். றஸ்மியாவின் "அவள் தாயாகிறாள்"

சிறுகதை. ஒரு முதிர்கன்னியின் ஏக்கம் நிறைந்த வாழ்வினையும் அது புனையும் ஆதங்கங்களையும் வெள்ளைச் சேலையில் கறைபோல தெளிவாகச் சொல்கிறது கதை.

ஷாமென் நிஸாம்டீனின் “நினைவிருக்கிறதாடா” கவிதை திருமணம் வரைச் சென்றும் காலங்கள் கடந்தும் இன்னும் அதே அன்புடனும் எதிர்பார்ப்புடனும் தொடரும் ஒரு அழகிய ஊடல்நிறைந்த காதலை நினைவில் இருத்திச் செல்கிறது.

இதழின் இறுதிக் கட்டுரையாகக் காணப்டுவது கல்வி தொடர்பானதொரு கட்டுரை. “கல்வி கிராமப்புற நகர்ப்புற மாணவர்களிடம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது?” என்ற கட்டுரை. பாடசாலை மையக் கல்வியை நகர்ப்புற மாணவர்களில் 50 % ஆனவர்களே ஏற்றுக் கொள்கின்றனர் என்றும் மிகுதிப்பேர் வெளியில் நடைபெறும் பிரத்தியோக வகுப்புக்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் அதே வேளை கிராமப்புறங்களில் இது தலைகீழாக உள்ளது என்கிறார் B. நிஷாந்தினி (BA). பாடசாலை மையக் கல்வியை புறக்கணிப்பதற்கு யார் காரணமென்ற வலுவான கேள்வி ஒன்றினையும் கட்டுரை துவங்கி வைக்கிறது. நகர்ப் புறங்களைப் போலவே இன்று கிராமப் புறங்களும் மாறிவருகிறது. கல்வியை பணத்திற்காக விற்கும் ஒரு ஆசிரிய சமூகமும் அதை பெருமைக்காக வாங்கும் மாணவ பெற்றோர் சார் சமூகமும் இன்று கிராமப் புறங்களையும் சாபங்களுக்கு உள்ளாக்கி வருகின்றது என்பதுவும் மறைக்க முடியாத உண்மை ஆகும்.

“விழிகளே என்னை மன்னித்து விடுங்கள்” என்னும் ஹுமைறா அல் அமீனின் கவிதை ஒழுங்காக உறங்கி, விழிகளுக்கு ஓய்வு கொடுக்க முடியாத சூழலில் உள்ள வேலைக்கு செல்லும் ஒரு பெண்ணின் சிரமங்களை பட்டியலிடுகிறது. பொருளாதார நெருக்கடிக்குள் மாட்டி விழிபிதுங்கும் எம் நாட்டில் இல்லத்தரசிகளின் நிலையினை அழகாகச் சொல்கிறார் கவிஞர்.

சஞ்சிகையின் 41 ஆம் பக்கம் ஸ்ரீ லங்கா பென் கிளப் உறுப்பினர்களில் கை வண்ணங்களுக்கும் களம் கொடுக்கும் வகையில் ஓவியக் கலையில் நாட்டமுள்ள பெண்களின் படைப்புக்களுக்கும் சஞ்சிகை இடம் கொடுத்திருக்கிறதெனலாம். ஹுமைறா அல் அமீன் மற்றும் ஹக்கீமா அமீனுத்தீன் ஆகியோரின் நிலவு நாள் காட்சிகளைச் சொல்லும் இரண்டு ஓவியங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சிறிலங்கா பென் கிளப் சகல துறைகளிலும் பெண்களை அடையாளப்படுத்தி அவர்களின் ஆற்றல்களை முன்னிறுத்திச் செல்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

பின்னட்டையில் சிறி லங்கா பென் கிளப்பின் 01 ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டில் எடுக்கப்பட்ட அமைப்பு உறுப்பினர்களும் சிறப்பு விருந்தினர்களும் இருக்கும் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அவரி 03 ஐ மொத்தமாக நோக்குவோமானால் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான சிறிலங்கா பென் கிளப் என்ற விம்பத்தை சிற்பம்போல உருவாக்கி அழகிய முறையில் அடையாளப்படுத்தும் மிக நேர்த்தியோடு வடிவமைக்கப்பட்ட ஒரு சஞ்சிகையாக அவரி காணப்படுகிறது எனலாம். பெரிய அளவில் குறைகள் சொல்ல எதுவுமில்லாத அளவு அவரியை கொண்டு வந்திருப்பது சிறிலங்கா பென் கிளப்பிற்கும் அவரியின் ஆசிரியர் குழுமத்திற்கும் மாபெரும் வெற்றியே என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சிறு சிறு எழுத்துப் பிழைகளும் e - magazine I printபண்ணும் போது எழுத்துருவிலும், எழுத்தின் வர்ணங்களிலும், உள்ளகப் பக்கங்களில் இடம் பெற்றிருக்கும் படங்களுக்குள் இருக்கும் எழுத்தாளர்களின் பெயர்களிலும் தெளிவின்மை மாற்றங்கள் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் சஞ்சிகை வடிவமைப்பில் கவனம் செலுத்தும் போது சின்னச் சின்ன குறைகளும் இல்லாமல் போகும் என்பது எனது கருத்தாகும்.

# விடை காணாத வினாக்கள்

ஜெஸ்மின் றமீஸ்
காத்தான்குடி

கொழும்புநகரின் நெரிசலான “பெட்டா“ ...... ஆங்காங்கேமக்கள் கும்பல் கும்பலாய்..... சொப்பிங் முடித்துநாளெல்லாம் நடந்துகளைத்தசோர்வில் இளநீர்வண்டியருகே இளநீர்குடிப்பதற்காகநிற்கிறேன் நான். துறுதுறுவெனஒருசிறுபெண் குழந்தைஓடிவந்து ”உம்மா இளனிவேணும் வாங்கித் தாங்க” எனதன் தாயைஅழைத்துக் கெஞ்சுகிறது. அந்தத் தாய் தன் குழந்தையைஅள்ளிஅணைத்தபடி ”பொறுங்கமகள் வாங்குவம்”எனக் கூறியபடிதன் கைப்பையைத் துளாவுகிறாள். காசைக் கையில் எடுத்தபோது சிலசில்லறை நாணயங்கள் சிதறிவிழஅதைக் குனிந்துகையில் எடுத்துநிமிர்கிறேன் நான். ஆம்!அது....யார்...?யார்அவள்...? அவளேதான்... சபானா.... அவள் என்னை அடையாளம் கண்டு கொண்டாள்.” ராத்தாசுகமா இருக்கிறீங்களா?” ”ஓம் மகள் நீங்கசபானாதானே?” எனஎன் சந்தேகத்தைத் தீர்க்ககேள்விஎழுப்பினேன். ”ஓ ராத்தாநான் சபானாதான்” என்றாள். ஆம் அவள் தான்.அவளைஎப்படிமறக்கமுடியும்? அந்தஅழகியமுகம்.... இனிமையானகுரல்.... என் நினைவுப் பறவைசிறகுவிரித்துநீண்ட தூரம் பயணிக்கதயாராகியது.

காலையில் எழுந்து ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றிகணவருக்கும் பிள்ளைகளுக்கும் “டீ“ ஊற்றிக் கொடுத்துகணவரைதொழிலுக்கும் பிள்ளைகளை பாடசாலைக்கும் அனுப்பிவைத்துவிட்டுமேல்மாடியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்குவிரைந்தேன் நான். வெள்ளிதவிர்ந்த ஏனைய நாட்களில் எனதுவாடிக்கையானநடைமுறை இது. எப்போதும் சுறு சுறு ப்பாகவேலை செய்து கொண்டுஎன்னைசுற்றி உள்ளவர்களை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பதில் அலாதிபிரியம் எனக்கு. அன்று செய்து முடிக்க வேண்டிய வேலைகளை ஒழுங்குப்படுத்தி எனது உதவியாளர் பாத்திமாவிடம் அதற்குரியபொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு அலுவலகத்தினுள்ளே நுழைகிறேன் நான்.

எனதுஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்காக மூன்றுபெண் பிள்ளைகள் தேவைப்படுவதாகஅக்கம் பக்கம் சொல்லிவைத்திருந்தேன். அதற்கேற்ப மூன்று பெண் பிள்ளைகள் வேலைக்காகவந்திருந்தனர்.
எப்போதுஎந்தப் பிள்ளைபுதிதாகவேலையில் சேர்ந்துகொள்வதற்காக வந்தாலும் அவர்களின் கல்வித் தகைமை, குடும்பநிலை,பொருளாதாரம் என்பவைபற்றியஒருசிறியஅலசல் ஒன்றைசெய்துமுடித்துவிட்டுத்தான் வேலைக்குஆட்களைஅமர்த்திக் கொள்வேன். இதுஎனதுவழமை. அன்றும் அப்படித்தான் முதல் இரண்டு பிள்ளைகளிடமும் என் வழமையான விசாரிப்பை முடித்துவிட்டு அவர்கள் இருவரையும் வேலைக்குத் தேர்வு செய்துவிட்டேன்.
மூன்றாவதுகாத்திருந்த பெண்ணை அழைத்தேன். வந்தாள். முழுமையான பர்தா உடையில் அவள் இரண்டு கண்கள் மட்டுமே என்னைநோக்கின. அந்தக் கண்கள் ஏதோஒன்றை இழந்து விட்டு அதை தேடுவது போன்ற ஏக்கத்துடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தன.

”வாங்கம்மா இருங்க” உட்கார்ந்தாள்.
”உங்கபெயர்என்னம்மா?”
இரு பக்கமும் தலையைத் திருப்பிப் பார்த்தவளாக எனது அறையில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு தன் முகத்திரையைவிலக்குகிறாள். மெதுவாக தொண்டையைச் செருமிக் கொண்டு ”சபானா” என்றாள். தேன் மதுரமானகுரல். அப்போதுதான் அவள்

முகத்தை உற்றுப் பார்த்தேன். அவ்வளவு அழகு.

"உங்க உம்மா, வாப்பா, குடும்பம் பத்திசொல்லுங்க" என என் வழமையான கேள்வியுடன் ஆரம்பித்தேன். "வாப்பா கடல் தொழில் செய்கிறாங்க. உம்மா இடியப்பம் சுடுறாங்க. நானா வெளிநாட்டில இருக்கிறாரு. தங்கச்சி ஓ எல் படிக்கிறா. மற்றதங்கச்சி ஒன்பதாம் ஆண்டுபடிக்கிறா. சின்னதங்கச்சி நேசரிக்கு போறா."

ஆக அவர்கள் ஏழுபேர் கொண்டவறுமையில்வாடும் ஒரு சிறிய குடும்பம்.

"சரிம்மாநீங்களென்னபடிச்சிருக்கிறிங்க? "நான் ஏ எல் படிச்சிருக்கன்" என்றாள். "ஏ எல் ஆ?" ஆச்சரியத்துடன் வினவினேன். "ஓ ராத்தாநான் ஏ எல் முடிச்சிட்டேன்" என்றாள். என்னிடம் வேலைக்குவரும் பிள்ளைகள் அனேகமாக ஓ எல் வரை அல்லது அதற்கு கீழேபடித்தவர்கள்தான். சபானாதான் ஏ எல் படித்து முடித்து பரீட்சையும் எழுதி இருக்கிறாள் என்பதைஅறிந்ததும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதைவிடஅவள் பரீட்சைமுடிவுகள் என்னைத் தூக்கிவாரிப் போட்டன. அவள் மூன்று ஏ சித்தி பெற்றுமாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றவள் என்றபோதுநான் ஆடித்தான் போனேன்.

"அப்ப ஏன் மகள் தையல் வேலைக்கு வந்தநீங்க" என்றேன்.

"அதுராத்தாநான் ஜ.்.ப்னா யுனிவசிட்டிக்கு அப்ளைபண்ணின. கொரோனா பிரச்சினையால போகல்ல" என்றாள்.

"ஏன் மகள் இப்பதான் எல்லாம் கிளியர்ஆகிட்டே"என்றேன்.

"ஓ ராத்தாஎனக்குபோகவிருப்பம் தான் எங்க நாம நினைக்கிறமாதிரி எதுவும் நடக்கிற இல்லையே"என்றுசலித்துக் கொண்டேதன் கதையைத் தொடர்ந்தாள்.

வறுமையின் கோரப் பிடியிலும் அவளதுபெற்றோர்அவளைபடிக்கவைத்திருந் தனர். அவளதுசகோதரன் தன் படிப்பை இடையில் நிறுத் திதியாகம் செய்துவிட்டுவெளிநாடுசென்றுஅவளுக்காக



ஒருவீட்டைக் கட்டி இருந்தான். தன் பின்னே இருக்கும் மூன்றுசகோதரிகளுக்காகவும் குடும்ப சுமையை குறைப்பதற்காகவும் என நினைத்து பெற்றோரின் வற்புறுத்தல் காரணமாக அவள் திருமணத்திற்கு சம்மதிக்கிறாள். கணவன் படித்தவன். கைநிறைய சம்பாதிப்பவன். இல்லறவாழ்க்கையில் மூன்று மாதங்கள் இனிதேகழிந்தன.

பல்கலைக்கழக அனுமதிகிடைத்ததும் தான் தாமதம்.... கணவன் பச்சோந்தியாகின்றான். திருமணத்திற்குமுன் மேற்படிப்புக்குசம்மதம் தெரிவித்த அவன் இப்போது அதைமறுக்கிறான். காரணம் தெரியவில்லை. அவளும் காரணத்தை கேட்டுத் துளைக்கிறாள். தெரியவில்லை. வாய்த்தர்க்கம் வாக்குவாதமாகமாறி கை கலப்பில் கலந்துகடைசியில் விவாகரத்து....

அவனிடமிருந்து முறையான சட்டப்படியான விவாகரத்து இன்னும் கிடைக்கவில்லை. பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் செல்லவில்லை. இத்தனைக்கும் மத்தியில் தான் கர்ப்பமுற்றிருப்பதை அறிந்தபோது அவள் அதிர்ந்துதான் போனாள். குடும்ப சூழ்நிலைஉணர்ந்துதனதுசகோதரனின் சுமையில் பங்குகொள்ள என்னிடம் வேலை தேடிவந்திருக்கிறாள். அவள் கதைகேட்டு எனக்கு தொண்டை அடைத்துக் கொண்டது. வார்த்தைகள் வெளிவரவில்லை.

உள்ளுக்குள் கோபக்கனல் மூண்டுஅது இயலாமையாய் மாறி விழிவழியே நீர் முத்துக்களாய் உருண்டது. அவள் அறியாவண்ணம் என் விழிகளை மூடி அழுகையைமறைத்தேன். அவளுடன் பேசிக் கொண்டிருக்கும் போதுஅவள் தாய் அவளைத் தேடிவந்திருப்பதாகஎன் உதவியாளர் பாத்திமா சொல்ல உள்ளே வரும்படி அழைத்தேன்.

வறுமையில் வாடி உழைத்து ஓடாய்த் தேய்ந்து மெலிந்த உருவம் அந்தத் தாய்க்குச் சொந்தமானது. ”நீங்கதான் சபானாடஉம்மாவா?”
”ஓம் மகள்”
நான் சற்றும் யோசிக்காமல் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டேன். ”உங்கட பிள்ளைக்கு கல்யாணத்த முடிச்சிக் கொடுத்து அவட வாழ்க்கைய பாழாக்கிட்டீங்களே....
ஏன் இப்படிசெஞ்சீங்க?”
என் கேள்விக் கணையை எதிர்கொண்ட அந்தத் தாய் அதிரவில்லை. மாறாக அவர் சொன்ன பதில் என்னைஅதிரவைத்தது.
”என்னசெருப்பாலஅடிக்கணும் மகள்”
அந்தபதிலில் இருந்துஅந்தத் தாயினுடைய வேதனையும் தெளிவும் எனக்குப் புரிந்தது. அவர்தான் செய்த தவறை உணர்ந்துவிட்டார். நான் சபானாவின் பக்கம் திரும்பினேன்.
”மகள் உங்களுக்குரியவேலை எனக்கிட்ட இல்ல. இந்த இடம் உங்களுக்குரிய இடமும் இல்ல. எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு



படிச்சுமுடிங்கமகள். கொஞ்சநாள் தான் அதுக்குப் பிறகுபாருங்க... நீங்க இழந்த எல்லாமே உங்களுக்குகிடைக்கும் மகள்” என்றேன். அன்றுவிடைபெற்றுச் சென்றவளை இன்றுதான் பார்க்கிறேன்.
நினைவுப் பறவைபயணம் முடித்து சிறகுலர்த்த உட்கார்ந்தது.

”சபானா இங்க கொழும்புல என்ன செய்யுறீங்க மகள்?”

”நாங்களெல்லாரும் ஃபெமிலியோடுட்ரிப் ஒன்டுவந்தம். இவ என்டமகள். நான் “லோ“ முடிச்சிட்டு ஊரில கோட்ஸ்ல வேலசெய்யிறன். உம்மா வாப்பா வபாத்துக்கிறேன். நானா, ரெண்டு தங்கச்சிமாருக்கும் கல்யாணம் செஞ்சு வச்சிட்டுஅவரும் மெரிபண்ணிட்டார். சின்னதங்கச்சிய நான் படிப்பிக்கிறன்” என்றாள் மூச்சுவிடாமல்...
”அப்பஉங்கட ஹஸ்பெண்ட்?” தயங்கியபடிகேட்டேன்.
”ஆ... அவர நான் டிவோர்ஸ் பண்ணிட்டன். சரி ராத்தா எனக்குநேரமாகுது. அங்களெல்லாரும் வெயிட் பண்ணிட்டு இருக்காங்க. நான் வாறன்” என்றபடி வெகு இயல்பாக பேசியவளாக அவள் விடைபெற்றுச் சென்றாள்.
என் இதயத்தில் ஏற்றிவைத்த ஒரு பெரியபாரம் என்னைவிட்டு இறங்கியதுபோல் உணர்கின்றேன் நான். நான் எதிர்பார்த்ததை விட அவள் நன்றாக இருக்கிறாள்.
எனினும் எம்மில் எத்தனை சபானாக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு கல்விக் கடலின் கரையைத் தொட்டிருக்கிறார்கள்?
எத்தனை சபானாக்கள் கல்வியைத் தொலைத்துவிட்டு வாழ்க்கைச் சுழலில் வருந்தியபடி சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்?



# இன்று பொருளாதார நெருக்கடியும் விவாகரத்திற்கு முக்கிய காரணியாக உள்ளது

## சட்டத்தரணி: நதீஹா அப்பாஸ்

**நேர்காணல் செய்தவர்.**
**திருமதி. ஷாமென் நிஸாம்டீன்.**
சஞ்சிகையாசிரியர்
(இணைச்செயலாளர் - **(Sri Lanka Pen club)**

எதை சொல்லி வளர்க்கிறோமோ நீ அதுவாகவே ஆகின்றாய் என்பதற்கமைய சட்டத்தரணி நதீஹா அப்பாஸ் சிறு வயதில் இருந்தே வீட்டிலும் சரி பாடசாலையிலும் சரி லோயர் நதீஹா என்றே அழைக்கப்பட்டுள்ளார். அதுவே பிற்காலத்தில் அவரின் பெயருக்கு பின்னால் ஒட்டிக்கொண்டது எனலாம். இன்றைய பெண் சட்டத்தரணிகளில் இவர் குறிப்பிடத்தக்கவர். வயதில் சிறியவராக இருந்தாலும் சட்ட நுணுக்கங்களை நன்கறிந்து அதற்கமைய நியாயத்திற்கு குரல் கொடுப்பதில் முன்னணி வகிப்பவர்

மூன்று பெண் பிள்ளைகளில் இரண்டாவதான இவர் புத்தளம் பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் உயர்தரம் வரை கற்றுவிட்டு பின்பு கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியாக இருக்கும் அதே வேளை சட்ட முதுமானியையும் கற்றுக் கொண்டுள்ளார். குடும்ப பரம்பரையில் ஐந்தாவது சட்டத்துறையாளராக இருக்கும் இவரது தந்தை முன்னாள் ஊடகவியலாளர். அத்தோடு இவரது கல்விக்கு பக்கபலமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டத்துறையில் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலரும் கவிதைகளை தனது மூன்றாம் வகுப்பில் இருந்தே எழுதி வருபவர் என்பதும் பிந்தி கிடைத்த செய்திகள். இவரிடம் எமது அவரி 4 சஞ்சிகைக்கு பெண்கள் எதிர்நோக்கும் சட்டப் பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுகளை அறியும் முகமாக எடுத்த செவ்வி இதோ உங்களுக்காக..

**01) பெரும்பாலான திருமணங்கள் விரைவாகவே இப்போது விவாகரத்தில் முடிந்து விடுகின்றன. அதற்கான காரணங்கள் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

இது ஒரு பரந்த பரப்பு. இருந்தாலும் என்னால் முடியுமானளவுக்கு

சுருக்கமாக சொல்கின்றேன். அடிப்படையான சில காரணங்கள் என்று சொன்னால் புரிதலில் உள்ள பிரச்சினை முதலாவது காரணம். இரண்டாவது மிக முக்கியமான காரணம் ஒரு பிரச்சினை வரும் சந்தர்ப்பத்தில் சரியான ஆற்றுப்படுத்தல்,வழிப்படுத்தல் செய்யக் கூடிய நபர்களின்மை. உதாரணமாக ஒரு பிரச்சினை வரும்



சந்தர்ப்பத்தில் அதனை அதிகரித்து விட பார்ப்பார்களே தவிர குறைக்குமளவு சரியாக வழிப்படுத்துவதற்குரியவர்கள் இல்லை. அடுத்தது திருமணம் பற்றிய கடமைகள் பொறுப்புக்கள் பற்றிய அறிவின்மை. மூன்றாவதாக பொருளாதார பிரச்சினை. இது மிகவும் பெரிய காரணமாக காணப்படுகின்றது. அடுத்து விழுமியங்களில் ஏற்படும் பாரிய வீழ்ச்சி. இது போன்ற காரணங்கள் தான் திருமண பந்தம் முறிவதற்கு பிரதானமான காரணங்களாக காணப்படுகின்றன.

**:02) சில இடங்களில் ஆணாதிக்கம் எனும் பழைய கலாச்சாரம் பின்பற்றப் படுகிறது. பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்றன.இவ்வாறான நிலைகளில் பெண்கள் சட்ட உதவியை நாடலாமா?**


நிச்சயமாக நாடலாம். அரசியல் அமைப்பு சட்டம் தொடக்கம் குற்றவியல் சட்டம், குடியியல் சட்டம் எந்த சட்டத்தை எடுத்தாலும் எந்த வகையில் ஆணாதிக்கத்தினால் பெண் பாதிக்கப்படுகின்றாளோ அதாவது ஆணாதிக்கத்தால் தனது உரிமையை இழக்க நேரிடுகின்றாளோ அந்த அடிப்படையை வைத்து நாட முடியும். உதாரணமாக தொழில் செய்யும் இடத்தில் பெண்ணென்ற காரணத்தால் உரிமை மீறப்பட்டால் அது அவளது அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட சமத்துவத்திற்கான உரிமை ஆகையால் அப்பெண்ணால் உயர் நீதிமன்றத்தில் பால் ரீதியான வேற்றுமை காட்டப்பட்டமைக்கெதிராக அவளால் சட்டப் பாதுகாப்பை தேட முடியும். சொத்துரிமை எனும் விடயத்தை நோக்குமிடத்தில் அவளுக்கும் சொத்தில் பங்குண்டு என்றிருக்கும் போது மாவட்ட நீதிமன்றத்தில் அதற்குரிய உரிமையை பெற்றுக் கொள்ளலாம். அதே போல் குற்றவியல் ரீதியில் ஏற்படும் பாதிப்பை நோக்கும் போது ஒரு பெண்ணுக்கு உடல் சம்பந்தப்பட்ட பாதிப்பு மட்டுமல்லாமல் உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்கெதிரான சட்டங்களும் காணப்படுகின்றது. உதாரணமாக உடல் எனும் போது பாலியல் தொந்தரவாக இருந்தாலும் வேறு வகையில் காயங்கள் ஏற்பட்டாலும் சாதாரணமாக எல்லோருக்கும் எப்படி சட்டப் பாதுகாப்பு இருக்கின்றதோ அதே பாதுகாப்பு இருக்கின்றது. விசேடமாக பாலியல் தொந்தரவிற்கெதிரான சட்டப் பாதுகாப்பு காணப்படுகின்றது. அது பாலியல் வன்முறை தொடர்பானது. அதையும் தாண்டிப் பெண்ணின் மானத்திற்கு அதாவது உளத்திற்கு காயம் ஏற்படும் வகையில் ஏதாவது நடந்தால் அது குற்றவியல் தண்டனைக்கு ஆளாகக் கூடிய ஒரு குற்றம். அதற்கெதிராக பொலிஸில் முறைப்பாடு செய்து உரிமையை பாதுகாத்துக் கொள்ளலாம். இதைத் தவிர குடும்ப உறுப்பினர்களால் அவள்



வன்முறைக்குள்ளாகும் போது உடலியலோ, உளவியலோ வன்முறைக்குள்ளாகும் போது இல்ல வன்முறை சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக அவரது கணவரோ, முன்னாள் கணவரோ, சகோதரரோ, பெற்றோரோ இவ்வாறு தொடர்ச்சியாக தொந்தரவு கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அவள் இருக்கும் இடத்திற்கு வர விடாத வகையில் நீதிமன்றத்தில் அல்லது வன்முறை சட்டத்தில் சென்று பாதுகாப்பு உரிமையைப் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக அவளது முன்னாள் கணவர் அவள் வசிக்கும் இடத்திற்கு வந்து தொந்தரவு கொடுத்தால் வேறு உதவி தேடும் வரைக்கும் அதாவது விவாகரத்து செய்யும் வரை அவர் தொந்தரவு செய்தால் இல்ல வன்முறை சட்டத்திற்கு சென்று பாதுகாப்பு ஒன்றை பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பெண் இருக்கும் இடத்திற்கு அவர் வரக் கூடாதென்ற தடை உத்தரவை பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பெண் எங்கு செல்கின்றாளோ அங்கு இவர் செல்லக் கூடாதென்ற தடை உத்தரவை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறான பாதுகாப்புக்களை முடியும்.

**03) இன்றைய காலங்களில் அதிகமான விவாகரத்துக்கள் தவறான தொடர்புகள் காரணமாகவும் நிகழ்கின்றன. இவ்வாறான நேரங்களில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கலாம்?**

மூன்றாவது கேள்வி மிக முக்கியமான ஒரு கேள்வி. இது தனிப்பட ஒரு சட்டத்தால் பூர்த்தி செய்யக் கூடிய வேலை அல்ல. சட்டத்தையும் தாண்டி தேவையை நாடி நிற்கும் ஒரு கேள்வி தான் இது. இது நீதிமன்றத்திற்குள்ளால் வந்து தீர்க்கப்படுவதை விட அதிகமான பிரச்சனைகள் வீட்டில் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு பெரியவர்களின் நீதியான, நியாயமான, நடுநிலையான, வழிகாட்டக் கூடியவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். முதலாவது கேள்வியினுடைய விடையிலும் நான் கூறியிருந்தேன். சரியான ஆற்றுப்படுத்துபவர்கள் இல்லை. ஆற்றுப்படுத்துபவர்களுக்கு ஆழமான அறிவு,அனுபவம் இருத்தல் வேண்டும். இன்றைய கால கட்டத்தில் அதிகமான விவாகரத்திற்கு காரணம் பிழையான தொடர்புகள் என்று சொல்வதற்கு காரணம் இன்றைய தொலைத் தொடர்பு சாதனங்களின் விளைவுகள் தான். ஆற்றுப்படுத்தும் ஒருவர் எல்லாத் துறை சார்ந்த அறிவினையும் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதே நேரம் நீதியாகவும், நியாயமாகவும் சிந்திக்க கூடியவராகவும், சரியான முறையில் வழிகாட்டக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
ஆகவே பாதிக்கப்பட்டவருக்கு இந்த வகையில் பிரதானமாக சரியான வழிகாட்டல் அதிலும் உளவியல் வழிகாட்டல்



தேவை. ஏனென்றால் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் முதலில் தங்கள் உயிரிற்கு தாங்களே ஆபத்து விளைவிக்கும் நடவடிக்கைகளை செய்தல் மற்றும் அவரது பிள்ளைகள் கணவனுக்கு உயிராபத்து விளைவிக்கும் நடவடிக்கைகளை செய்வார்கள் அல்லது கணவனின் மானத்தில் ஆபத்து விளைவிக்கும் நடவடிக்கைகளை செய்வார்கள். கணவனோ மனைவியோ சம்பந்தப்பட்ட அடுத்த குடும்பத்தின் மானத்தையோ ஏதோ ஒருவரின் தனிப்பட்ட பிரச்சினைக்காக பலரின் மானத்தில் கை வைக்கும் நிலைக்கு பாதிக்கப்பட்டவர் முதலாவது தூண்டப்படுவார். அவரும் ஒரு வகையில் பாதிக்கப்படுவார். மற்றவர்களையும் தான் பட்ட கஷ்டத்தை நீங்களும் படுங்கள் என்று ஒரு சமூக பிரச்சினையை உருவாக்குவார். ஆகவே முதலாவது அங்கு தேவைப்படுவது சரியான வழிகாட்டல் மற்றும் உளவியல் தீர்வு. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டத்தால் தீர்வு கொடுப்பது சரியான தீர்வாக இருக்காது. நடைமுறையில் நான் சொல்வதாக இருந்தால் சட்டத்தால் கொடுக்கும் தீர்வாக பெரும்பாலும் விவாகரத்து அமையும். மனைவியாக இருந்தால் கணவனிடம் பிள்ளைகளுக்காக அபகரிப்பு கேட்கலாம். சொத்துக்கள் இருந்தால் பிரித்துக் கொள்ளலாம். அதைத் தவிர யாரோடு யார் வாழ வேண்டும் என்பதை அவர்களது சுதந்திரம். அதை சட்டத்தால் ஒரு போதும் கட்டுப்படுத்த முடியாது. நீதிபதிக்கு ஒருவரை விவாகரத்து செய் என்றும் சொல்ல முடியாது. இன்னொருவரை திருமணம் செய் என்றும் சொல்ல முடியாது. இதற்குரிய சரியான தீர்வு சரியான வழிகாட்டல், உளவளத்துணை, நியாயமாக நீதியாக சிந்திக்கக் கூடிய நல்ல பெரியவர்களில் தான் இருக்கின்றது.

**04) ஒரு தம்பதி சண்டையிலே அல்லது ஒன்றாக வாழ விருப்பமின்றியோ பிரிந்து வாழும் போது ஒரு கால வரையறையின் பின் இருவருக்கும் தானாக அந்த விவாகம் முறிந்து விட்டதாகக் கருதப்படுமா?**

நான்காவது கேள்விக்கு இலங்கை முஸ்லிம் விவாகரத்து சட்டப்படி பார்ப்போமாக இருந்தால் இல்லை. இலங்கை முஸ்லிம் விவாகரத்து சட்டப்படி எத்தனை வருடங்கள் பிரிந்திருந்தாலும் தன்னால் விவாகரத்து நடக்காது. ஆனால் பொதுச் சட்டத்தின் படி legal separation என்று ஒன்று இருக்கின்றது. 7 வருட



காலமும் கணவனும் மனைவியும் படுக்கையிலும், உணவிலும் எந்த வகையிலுமே ஒன்றாக வாழவில்லையென்றால் 7 வருட காலத்திற்கு பிறகு அவர்கள் விவாகரத்திற்கு அனுமதி கேட்கலாம். legal separation என்று சொல்வது சட்ட முறையாக பிரிந்து வாழ்வது. இரண்டு வகையில் நடக்கும். ஒன்று 7 வருடங்கள் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளாமல் இருந்தால் நேரடியாக விவாகரத்து கேட்கலாம். அல்லது தனியாக legal Separation என்று ஒரு வழக்கு இருக்கின்றது. அது

விவாகரத்து அல்ல. அவர்கள் சட்ட ரீதியாக பிரிந்து வாழ்வதற்கென்று அனுமதி பெற்று தீர்ப்பு பெற்ற பின் இரண்டு வருடங்கள் பார்க்கப்பட்டு இரண்டு வருடங்களிலும் இருவரிடையே ஒரு இணக்கப்பாடு வரவில்லையென்றால் legal separationஐ விவாகரத்தாக நீதிமன்றத்திடம் மாற்றிக் கேட்கலாம். ஆனால் இந்த அமைப்பு முஸ்லிம் விவாகரத்து சட்டத்தில் இல்லை.

**05) இஸ்லாமிய விவாகரத்தில் இதற்கான கால வரையறை குறிப்பிடப்படுகிறதா?**

இந்தக் கேள்விக்கு நாங்கள் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்றால் ஷரீஆ சட்டம் வேறு. இலங்கையிலுள்ள முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டம் வேறு. ஷரீஆ சட்டம் என்பது பரந்த ஒரு பரப்பு. அதிலுள்ள அனைத்தையுமே முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதில் சிறிய ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனால் தான் அதில் நிறைய குறைபாடுகள் காணப்படுகின்றன. அங்கொன்று இங்கொன்று என்று எடுத்து சேர்த்தது தான். இன்னும் அதனை சரியான ஒரு சீர்திருத்தத்திற்கு கொண்டு வரலாம். ஷரீஆ சட்டத்தில் நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில் இருக்கலாம்.இல்லாமலும் இருக்கலாம். எனக்கு அது பற்றி தெரியாது. ஆனால் முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் அப்படி ஒரு ஏற்பாடும் இல்லை. காலவரையறையும் இல்லை.

**06) இலங்கை சட்டக் கோவைகளில் இவ்வாறான நிலை பற்றி என்ன குறிப்பிடப்படுகிறது?**

இந்த கேள்விக்கு ஏற்கனவே legal separation எனும் ஒரு விடயத்தை நான் சொன்னேன். legal Separation என்ற விடயத்தை நோக்கும் போது நான் மீண்டும் விளங்கப்படுத்தவதென்றால் இரண்டு வகையில் காணப்படுகின்றது. ஒன்று 7 வருடங்கள் கணவன் மனைவி ஒன்றாக சேராது வாழாது இருந்தால் அவர்களது திருமண வாழ்க்கை முடிந்து விட்டதாக கருதப்படும். அது நிரூபிக்கப்படுதல் வேண்டும். அப்படியல்லாமல் legal separation எனும் வழக்கைத் தொடுத்து இரண்டு வருடங்களின் பின் சேர முடியாது என்ற நிலைக்கு சென்றால் அதை விவாகரத்தாக மாற்றலாம்.

**07) இஸ்லாமிய சட்டத்தில் ஒரு ஆணுக்கு நான்கு திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன. அதற்காக முதல் மனைவியின் அனுமதியை பெற்றுக் கொள்வது அவசியமா?**

இந்தக்கேள்வியும் அப்படி தான். ஷரீஆ சட்டத்தில் என்று நோக்கும் போது அதற்கு வேறு விளக்கம் இருக்கின்றது. ஆனால் இலங்கையிலுள்ள முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டத்தில் அனுமதி பெற வேண்டும் என்று எவ்விடத்திலும் இல்லை. ஆனால் அறிவிக்க வேண்டும் என்று தான் இருக்கின்றது. அதனால் தான் நான் திரும்ப திரும்ப சொல்வேன். இந்தக் கேள்விகளனைத்தையும் ஒவ்வொரு பயிற்சிப் பட்டறையாக விளங்கப்படுத்த வேண்டிய கேள்விகள்.இலகுவாக கூறப் போனால் முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஒரு இடத்திலும் இல்லை. ஆனால் இதற்கு புறம்பான வேறொரு கோணத்தில் தான் ஷரீஆ சட்டம் இருக்கின்றது.
இதை நீங்கள் ஒரு தலைப்பாக தருவீர்களாயின் நான் பெரிதாகவே

இதனை பற்றி விளங்கப்படுத்துவேன். ஆனால் இலங்கை முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டத்தில் இல்லை. ஆனால் ஷரீஆ சட்டத்தில் வேறு ஏற்பாடுகள் காணப்படுகின்றது.

**08) பெரும்பாலும் சில ஆண்கள் வெளிநாட்டிலோ அல்லது உள்நாட்டிலோ மனைவிக்கு தெரியாமல் விவாகம் செய்து கொள்கிறார்கள். அவ்வாறான நேரங்களில் அவரின் முதல் மனைவி எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் என்ன?**

எனக்கு முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டத்தை குறை கூற வேண்டுமென்று ஒரு ஓர நோக்கத்தை வைத்துக் கொண்டு இதை சொல்லவில்லை. ஆனால் சட்டத்தில் உள்ளதை தான் என்னால் சொல்ல முடியும். முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்ட பிரகாரம் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பொதுச் சட்டத்தில் இருதார திருமணத்திற்கெதிராக, பலதார திருமணத்திற்கெதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்கலாம்.

**09) இரண்டாவது மனைவி சட்டத்தில் என்ன நிலைக்கு ஆளாகிறார்?**

இரண்டாவது மனைவி என்ன நிலைக்குள்ளாகிறார் என்பது பற்றி தானே உங்களது கேள்வி? இரண்டாவது மனைவி என்ற நிலையிலே தான் அவர் இருக்கிறார். வேறொன்றும் செய்ய முடியாது. அவர் இறந்தால் சொத்தில் பங்கு கேட்க முடியும். உயிரோடிருந்தால் செலவு கேட்க முடியும்.

**10: குழந்தைகள் இல்லாத தம்பதியரின் சொத்துக்கள் அவர்களில் ஒருவர் இறந்த பின் மற்றவரைச் சேருமா அல்லது இறந்தவரின் இரத்த உறவுகளுக்கு சேருமா?**

இதே கேள்விக்கும் இரண்டு வகையான பதில்கள் இருக்கின்றன. முஸ்லிம் வாரிசுரிமை சட்டமும் இருக்கிறது. நாட்டின் பொது சட்டத்திற்கு கீழும் இருக்கிறது. நாட்டின் பொது சட்டத்தின் கீழ் குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு பெற்றோர்களுக்கு பங்கு இருக்கிறது. சகோதரர்களுக்கு பங்கு இருக்கிறது. தம்பதியில் ஒருவர் மரணித்தால் அடுத்த துணைக்கு இருக்கிறது. முஸ்லிம் விவாக-விவாகரத்திலும் அதே போல் இருக்கிறது. ஆனால் முஸ்லிம் வாரிசுரிமை சட்டத்தில் உள்ள பங்கின்(share) அளவும் பொதுச் சட்டத்தில் உள்ள பங்கின் அளவும் வித்தியாசம்.

**11: விவாகரத்தின் செலுத்த வேண்டிய தாபரிப்பு பணம் ஒழுங்காக செலுத்தாமை அல்லது அப்பணத்தை காதிமார் எடுத்து உரிய நேரத்தில் கொடுக்காமல் இழுபறியாக இருக்கும் நிலையில் அதனை சட்டத்தின் மூலமாக மொத்தமாக பெறும் வசதிகளுண்டா?**

இந்தக் காலத்தில் உள்ள தாபரிப்பு இத்தா பணமும் அதாவது அதற்கு ஒப்புவித்த காலத்தில் இருந்து இத்தா காலம் முடியும் வரை மனைவிக்கு செலுத்த வேண்டிய பணமும் கணவர் கட்டவில்லையாயின் அவரிடமிருந்து அறவிட்டு தருமாறு நீதவான் நீதிமன்றத்திற்கு கட்டளை சமர்பிக்கலாம். நீதவான் நீதிமன்றத்தில் இருந்து அவருக்குரிய அறிவித்தல் அனுப்பி அவர் வரவில்லையாயின் அவரை கைது செய்து அப்பணத்தை பெற முடியும்.

**12: கணவன் திருமணம் செய்யாமல் வேறு பெண்(களுடன்) தொடர்பு வைப்பதை அறிந்த பின் அதற்கு**

**சட்டத்தின் மூலமாக என்ன நடவடிக்கை எடுக்கலாம்?**

இல்லை. இரண்டு சட்டத்தாலும் எடுக்க முடியாது. முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்டத்தாலும் எடுக்க முடியாது. நாட்டின் பொது சட்டத்தாலும் எடுக்க முடியாது. கணவன் மட்டுமல்ல மனைவி தொடர்பு வைத்துக் கொண்டால் கூட இலங்கையிலுள்ள எச்சட்டத்தாலும் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால் அது தனிப்பட்ட நபரின் சுதந்திரம் என்று நோக்கப்படுகிறது.
ஆனால் விவாகரத்திற்கான காரணமாக அதனை எடுக்கலாம். பொதுச் சட்டத்தில் Adultery என்பது விவாகரத்து செய்வதற்கான ஒரு பிரதான காரணமாக காணப்படுகின்றது. தொடர்பில் இருக்கின்றார் என்ற ஒரு விடயத்தை இரண்டு சட்டத்திலும் அதாவது துர்நடத்தைகள், அவரின் மனதை காயப்படுத்துதல், சித்திரவதை செய்தல் போன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மனைவிக்கு கணவன் மீது விவாகரத்து பண்ண முடியும். குற்றச்சாட்டு இல்லாத அடிப்படையில் கணவனை விவாகரத்து செய்யக் கூடிய காரணங்கள் காணப்படுகின்றது. பொதுவாக தொடர்பு என்று வரும் நேரம் உள்ள ஒரே ஒரு தீர்வு ஒருவரை ஒருவர் பிரிதலே தவிர தொடர்பு வைத்ததன் காரணத்திற்காக குற்றவியல் நடவடிக்கை மூலமாக ஒருவரை இலங்கையில் எந்தச் சட்டத்தினாலும் தண்டிக்க முடியாது.

பல வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் சிரத்தையுடன் எனது கேள்விகளுக்கு பதிலளித்த சட்டத்தரணி தனது சட்டத்துறையில் இம்மாதம் 10 வது வருடத்தை கடந்து சேவையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரிற்கு எமது பென் கிளப் சார்பாக வாழ்த்தி விடைபெறுகிறேன்.

# எனக்குள் நீயாக...

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

ஒற்றைப் பக்கம் தலை சீவி
ஒய்யாரமாய் தந்தையவர் கைபிடித்து
தாகமும் வேட்கையும் தவழ்ந்தோட
முதல் நாளில் காலடியெடுத்த வைத்த
பாடசாலை நாளில்

முதலாம் வகுப்பதன்
முன் இருக்கையில்
தந்தையுடன் சென்றமர்ந்தது
இன்னும் ஞாபகம் இருக்கிறது

கடந்து வந்த பரீட்சைகளெல்லாம்
தந்தையவர் வாழ்த்துடன் தொடங்கி
கண்ணே உனக்கென்ன
உபகாரம் வேண்டும்
வகுப்பில் நீ
முதலிடம் பெற்றமைக்காய் எனும்
அவரது முகமலர்ந்த கேள்வி
இன்னும் ஞாபகம் இருக்கிறது

பல்கலைக்கழகத்தில்
நான் நுழைந்த முதல் நாளதில்
விழி கலங்கி என்னை வாழ்த்தி
வழியனுப்பிய அவர்
புன்னகை மாறா முகம்
இன்னும் ஞாபகம் இருக்கிறது..

புதுமைகள் பல படைக்க
புதுப்புது தடங்களை
நான் பதிக்க
இருபத்து மூன்று வருடங்களாய்
இன்னவளின் இதயத்தோடு இணைந்து
போன உறவதை
கொண்டாடிக்கொண்டே
இருக்கும் வரை
ஓயாது இவள் ஆவெலன
இன்னும் ஞாபகம் இருக்கிறது
இன்று வரை ஞாபகம் இருக்கிறது...

## සත්තයි නව ලොව පහන් සිනොසේ

-ඉසේමොලිකො දොවුද්-
இஸ்மாலிகா ராஜா

පෙනේය ඇතින් එක් දසුනක් අර
සුපැහැදිලියි, ඔබ ඇතින් බලනු මැන
ලොව හැම පැත්ලතන් පහන් ඇවි ඒ
නව සිතකින් කවියක් ගයමි මම

නිදහසේ වහලුන් නොවේද අප හැම
රැවටුන මල් ලමනි සුවදක් අහිමිව
මරා දමමු එක්වී මෙ මුසාව
සුපිපේ නව දිවියක් ඒ මරු මුවැ

කටුක බිමක් ලේ ජලයන් තෙත්කොට
නීල පස්ස සම්පත් සරසන්නෙමු
'මට - හෙට' කියමින් ගොඩ
වෙන් ලනොකලෙමු
විෂ දෙයක් නෑ අපගේ හිත්වල

දනැති - බලැති උන් කෙරුවේ විනමය
වෙහෙසි වැඩ කෙ දෙවියන් අපමය
දුකින් පෙරො දුන් දේ නරකද - නැහැ
ගොලුවී සිටිලයමු, උන්ලේ ප්‍රීතිය !

අපේ ලෙයින් උන් වැවුනා ඔය ඇති
තරුණ ලොවද ජීවත්විය යුතුමය
හටලනදී හමුවූ විට අපි නොයදිමු
බිඳලමු විලුඹින් පාගා පෙනයමු

පැලහී - පැලහී අව් ගිනි ජාලේ
තවත් ඇඟිලි මෙන් කරගැට එල්ලේ
නීචව පතුළට ගිලුනො නොවෙදෝ
දෙවිලයෝ ඇඹුවො ඉවසුම් නැතිව

දැවි පිලිස්සී කලුවුන හරිදේ
ජීවය දෑසේ කැටවී බබලා
උසේවී - රොසේවී ඇවිලෙන ගිනි මැද
සත්තයි නව ලොව පහන් සිනොසේ .....

මේ ලොව දුක් විඳිනො දිළිඳුන්ලන්
කඳුලු ඇසක හැම, දල්වමු පහනක්
නීචව පතුලේ සිටියා ඔය ඇති
ජයලගන එය බොමු - එයයි පිපාසය !

- පරිවර්තනය - පරක්‍රම කොඩිතුවක්කු -

## நிச்சயம் புது யுகம் தோன்றும்

வெளிவந்த நூல் :- விழிப்பு
கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு
மொழி பெயர்ப்பு - இஸ்மாலிகா ராஜா

தூரத் தெரியுதொரு காட்சி
துல்லியம் நீ வந்து பாராய்
பாரெங்கும் தீபத்தின் தேக்கம்
பாடுவேன் நான் புது நோக்கம்
சுதந்திர அடிமைகள் நாங்கள்
சுகமென்று ஏமாந்த பூக்கள்
வதம் செய்வோம் எல்லோரும் கூடி
சாவினில் வாழ்வினைக் காண்போம்.
பாலையை சோலைகளாக்கி
பசும்பயிர் வளர்த்திடச் செய்தோம்.
நாளைக்குச் சேர்த்திடவில்லை
நஞ்சொன்றும் எண்ணத்தில் இல்லை.
உழைத்திட்ட தெய்வங்கள் நாங்கள்
ஊறு செய்தார் வளமானோர்
உழைத்திங்கே தந்தது தீதா ? இல்லை
ஊமைகளானது தீதா ?
எம் இரத்தத்தில் வாழ்ந்தது போதும்
இனி இளம் தலைமுறை வாழ்ந்திடல் வேணும்
வம்புக்கு வந்திட்டால் கெஞ்சோம்
வாலை நறுக்கிட்டே நிற்போம்
வெய்யில் கனலிடை வெந்து
விரல்போல் உருவங்கள் சுண்டி
தொய்யும் நிலை இனி வேண்டாம்
தெய்வம் பொறுக்காது தேம்பும்
கருகிட்ட உள்ளத்தின் ஜீவன்
கண்ணில் தெரியுது ஜோதி
நெருப்பாய் எரிந்திட்டே தீரும்
நிச்சயம் புது யுகம் தோணும்
ஏழைகள் கண்களில் தீபம்
ஏற்றிட வைத்தல் எம் நோக்கம்
கோழையாய் வாழ்ந்தது போதும்
கொள்ளுவோம் வெற்றிதான் தாகம்

## மாணவர்களின் ஆளுமை விருத்தியில் இலக்கியங்களின் வகிபங்கு

எம்.எம். மஹிஷா பானு
சம்மாந்துறை

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி மட்டுமல்ல.எதிர்கால சந்ததியினரை ஏணிப்படியில் ஏற்றிவைக்கும் ஏடுகள்.இலக்கியத்தைப் படைத்தவன் இறந்து போகலாம். படைக்கப்பட்ட இலக்கியம இறவா வரம் பெற்றவை. இலக்கியம் உண்மையும் அழகும் நிறைந்த சொற்களால் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றது. அது மனிதனது ஆன்மாவையும் உணர்வையும் தொழிலையும் அப்படியே படம் பிடித்துக்காட்டுகின்றது. இலக்கியங்கள் மக்களை நல்வழிப்படுத்துவற்கான விழுமியக் கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின;றன. மேலுமகல்வி, அரசியல், சமூகப் பொருளாதார வாழ்வியல் பண்பாடுகளை கட்டமைப்பதற்கு வழிகாட்டியாகவும் இலக்கியங்கள் அமைந்துள்ளன.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பாடசாலைக் கல்வியின் பங்கு அளப்பரியது.இன்றைய சிறுவர்களை நாளைய நற்பிரஜைகளாக்குகின்ற பாரிய பணியை பாடசாலைகள் மேற்கொள்கின்றன. கலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கு இலக்கியக் கல்வி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இதன் நோக்கம் மாணவர்களின்விழுமியப் பண்புகளை வளர்ப்பதும் அதனை அவர்களின் வாழக்கையில் கடைப்பிடித்து அதன் வழி நடக்க வழிகாட்டச் செய்வதுமாகும். சிறுபராயத்தில் நற்போதனைகளை கற்பிக்கும் ஆசிரியர்கள் தாளம் இராகம், அபிநயம் முதலியவற்றால் பிள்ளைகளுக்கு கற்பித்தலை இலகுவாக்க முடியும் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியில் பெரும் பங்கு வகிக்குமிடம் பாடசாலையாகும். இங்கு பெற்றோரால் வழங்க முடியாத பல வித்தியாசமான அனுபவங்களை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக பிள்ளைகள் பெற்றுக் கொள்கின்றனர்.

முறைசார பாடவிதான செயற்பாடுகள் ஊடாக ஆரம்ப வகுப்புக்களிருந்தே ;இலக்கியம்’ பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளான இலக்கிய நிகழ்வுகள்,கலைகலாசாரப்



போட்டிகள் மொழித்தினநிகழ்வுகள் என்பனவற்றுாடாக விழுமியக் கருத்துக்களை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு தேசத்தின் விதி வகுப்பறையில் உருவாக்கப்படுகின்றது. தேசத்தைக் கட்டியெழுப்பும் மாணவச் செல்வங்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு இலக்கியக் கல்வியினை ஆயுதமாகக் கொணடால் வெற்றி கொள்ள முடியும். பல்வேறு சூழல் தாக்கங்களோடு வகுப்பறைக்குள் நுழையும் மாணவர;களை ஒருநிலைப்படுத்தி அவர்ளின் மனங்களை வென்றுசிறந்த கற்பித்தலில் ஈடுபடுபடுவதென்பது

ஆசிரியர;களைப் பொறுத்த வரையில் மிகச் சவாலான விடயமாகும். இலக்கியங்களைப்பயன்படுத்தி ஆசிரியர்கள் இச்சவாலை வெற்றி கொள்ள முடியும்.

நவீன பூகோள கல்வி உலகில் மாணவர;கள் பாடசாலையின் கட்டுக்கோப்புக்களை உடைத்து பாரம்பரியங்களை மீறி பல வடிவங்களில் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இலக்கியத்தினூடாக அவர்களின் இளம் வாழ்வியலை அழகாகச் செதுக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமைப்பாடாகவுள்ளது. அத்துடன் தற்போதைய போட்டிமைய சமுகத்தில் பிள்ளைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் இதன் காரணமாக வெளி உலகில் பிரவேசிக்கும் போது அவர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.இன்றைய பரீட்சை மையக் கல்வி மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களைச் சிதைத்து வருகின்றது என்ற பாரிய குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில் இலக்கியத்தினால் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும். மேலும் இலங்கையின் கல்வி மட்டம் அறிவாற்றல் அடைவு தொடர்பாகக் காட்டும் அக்கறை இன்றுமனப்பாங்கு உருவாக்கத்தில் பேணப்படவில்லை.

மாணவர் பருவ காலம் தமது வாழ்க்கை குறித்து தீர்மானமெடுக்கும் பருவம். இயக்க ஆற்றலின் வளரச்சியோடு, மனவெழுச்சி வளர்ச்சியும் ஏற்படுவது இக்காலப்பகுதிலாகும். இதன் காரணமாகப் பிள்ளைப் பருவத்தில் நடத்தை விருத்தியோடு ஒழுக்க விருத்திக்கும் இடமளிக்க வேண்டும பிள்ளைப் பருவத்தில் முன் மாதிரியான உயர்ந்த பழக்க வழக்கங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். வளர் இளம் பருவ மற்றும் சிறுவர் தலைமுறையின் போட்டி மயமான வாழக்கைக் கோலத்தில் ஒழுக்க விழுமியப் பண்பு விருத்தி தொடர்பாகக் காட்டப்படும் அக்கறை குறைந்து கொண்டு வருகின்றது. இதன் காரணமாகப் பிள்ளைகளின் உலகம் மனஅழுத்தம் கொண்ட சூழலுக்குள் தள்ளப்பட்டு வருகின்றது. ;இவ்வேளை இலக்கியத்தின் ஊடாகப் பிள்ளைகளைச் சிறந்தவர்களாக வழிப்படுத்தி சமூகமயப்படுத்தப்பட முடியும்.

ஆரம்ப வகுப்புகளில் இலக்கியத் தமிழைக் கற்பிப்பதன் அடிப்படை நோக்கம் இலக்கியத் தமிழை மாணவர்கள் விளங்கிக் கொள்ளச் செய்வதல்ல. மாறாக தங்கள் எண்ணங்களைத் தாமாகவே தெளிவாக புரிந்து கொள்ளவும், அதனை வெளிப்படுத்தப் பயிற்றுவிப்பதுமாகும். இந்நிலையில் இலக்கியத்தை அறிமுகப்படுத்துவது பிள்ளைகளின்அழகிய உலகத்தினை கட்டியெழுப்ப பெரிதும் உதவும். பிள்ளையிடம் அன்பு, கருணை, பொறுமை, நேர்மை, தயாள உணர்வுமற்றோரை மதித்தல், நட்பு என்பன பயிற்றுவிக்கப்பட வேண்டும்.மாணவரகளின் இயல்புகள் சூழல் விருப்பு முதலியவற்றோடு அவர்களுக்கு நற்போதனையையும் இலக்கியங்கள் வழங்குகின்றன. அவற்றில் எளிய சொற்களும் சிறிய தொடர்களும் இருந்தால் மட்டும் போதாது. அவை உளவியல் கருத்தினை வழங்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்பம் சாந்த உணர்வுத் தொற்றுகையைச் சிறுவர் மனங்களில் விதைப்பது இன்று இலகுவாகியுள்ளது.இதற்கேற்றாற்போல இன்றைய இலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம் என்பனவும்

மாற்றங்களைக் காட்டி வருகின்றது.

ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன் என்பன மாணவர்களுக்குரிய பழக்க வழக்கங்களையும்




நடை உடை பாவனைகளையும் நாளாந்த கடமைகளையும் குறித்து பாடப்படுவதாகவும்.

அவற்றின் நன்மை தீமைகளைச் சுட்டிக்காட்டுவதாகவும்மற்றும் அவர்கள் வாழும் சூழலில் நடப்பவை மற்றும் நடத்தப்படுபவை அவற்றின் சிறப்புகள் முதலியவற்றை எடுத்துக் கூறுவதாகவும் அமைந்துள்ளன. திருக்குறள்பாரதியார்பாடல்கள் என்பன ஒழுக்கம் அறநெறிகள் மற்றும் இணக்கப்பாடு பற்றி போதிக்கின்றன. அவற்றினால் மாணவர் உடல் உள மற்றும் ஆத்மீக மனவெழுச்சி என்பன விருத்தி அடைகின்றன.

மாணவர்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்துபவையாக இலக்கியங்கள் உள்ளன.
அதே வேளையில் கதைகள், பாடங்கள், கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், நாடகங்கள், சினிமா, சித்திரக் கதைகள், துணுக்குகள் எனப் பல்வகையில் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் இலக்கியங்களின் வகிபங்கு உள்ளது.

நற்பண்புசார் இலக்கியத்தின் ஊடாகப் பிள்ளைகளைச் சிறந்தவராக சமூகமயப்படுத்தப்பட முடியும். இலக்கியம் பிள்ளைகளின் உலகை அகலமாக்கும்.
சமூக உறவுகளை விருத்தி செய்து கொள்வதற்கும் ஆளுமையை கட்டியெழுப்பவும் தொடர்பாடல் திறன்களை ஏற்படுத்திக் கொள்ளவும் எழுத்தறிவை மேம்படுத்திக்கொள்ளவும் சவால்களுக்கு முகங்கொடுக்கவும் மனிதர்கள் மீதும் மற்றும் ஏனைய உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்தவும் இலக்கியங்கள் வழிகாட்டி நிற்கும். அதில் ஒற்றுமை பற்றிய உணர்வு ஓம்பி ஒழுக்கம் பற்றிய விழிப்பு ஏற்படும்.
இதனால் இலக்கியங்களினினால் மாணவர்களின்ஆளுமை விருத்தி ஏற்படும் என்பதில்ஐயமில்லை.



# நாட்டார் பாடல்

## ஏரூர் ஜிப்ரியா

அல்லாஹ் எனக்களித்த
அற்புதமே என் மகனே
வறும வந்தாலுமே
வல்ல நாயன் துணையிருப்பான்

உற்றார் உதவியில்ல
கற்றார் யாரும் பாக்கயில்ல
பெற்றேனே வாழ்வில் உன்ன
சற்றேயேனும் சோரயில்ல

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
ராராரோ ராரிராரோ

பஞ்சி மெத்தயில்ல
கொஞ்சி வளத்தேன் உன்ன
பலங்கஞ்சி குடித்து நாளும்
பலசாலி சாலிஹாக
வளர்ப்பேன் உன்ன

ஆற்றல் பெற்று நீயும்
கற்று தேறி முன்னேறவே
நட்டு வைப்பேன் நல் பழக்கம்
நாளை நீ நலமாய் வாழவே

(ஆராரோ ஆரிராரோ)
கெட்ட பிள்ளையென்று யாரும்
வீட்டு வாசல் வரவும் கூடா
சாட்டு பல சொல்லி நீ
நோட்டுக்களும் கேட்ட கூடா

நல்ல பிள்ள என்று
நாலு பேரும் சொல்லிடவே
நாயனும் விரும்பிடுவான்
நற்பேறு பெறுக நீயே

(ஆராரோ ஆரிராரோ)

ஏழு வயதில் நீயும்
எம்நபி சொன்னதுபோல்
எட்டி நடை போட்டு
பள்ளி சென்று தொழுதிடணும்

மரணிக்கும் வரை நீயும்
மகத்தான தொழுகைதனை
ஒகுத்தோடு தொழுது வந்து
ஒழுங்காக வளர்ந்திடணும்

(ஆராரோ ஆரிராரோ)

காரி என்று உன்னை
ஊரே மதித்திடணும்
உன்தாயி கனவும் கண்டேன்
என் மகனே நிவர்த்தியாக்கு

ஒவ்வொரு நாளும் நானும்
ஒதுவோடு வாழ்கின்றேனே
ஒழுக்கமுள்ள பிள்ளையாக
இருகரம் ஏந்தி நின்றேன்

( ஆராரோ ஆரிராரோ)



# நிலவே நீ தூது போவாயோ

ஜெஸீமா முஜீப்



நான் காய் கனி இல்லாத மரமென்று
என்னை தெருவோர
நிழலுக்கு விட்டார்கள்
நான் எல்லையில்லா
வானம் போல்
பரந்து கிடக்கின்றேன்

மழை வரம் பெற்று
வெயிலில் உலர்ந்து
பனியோ
என்னில் மூழ்க
குளிர்ந்து மகிழ்கிறேன்
பறவைகளின் ஆசையோடு

என்னில்
குளிர் கொண்டு
பச்சைப் புல்
பாய் விரிக்க
விருந்தோடு வந்தவர்கள்
அமர்ந்துண்டு மகிழ்ந்தனர்

கண்களினால்
கதைபேசி
காதலை சொல்லிவிட
என் பட்டை தீட்டி
கவிதை எழுதுகிறான்
கன்னியவள்
கயல் விழி பட்டு
என் இதயம் பௌர்ணமியாய்
ஒளிர்கிறது
நிலவே நீ தூதுபோவாயோ
என் காதலை சொல்லிவிட

# சிறுகதை: — புல(தி)னம்

தம்பன் செல்வி ஜுவைரியா
தம்பாலை

“என்னடி அடிக்கடி Onlinela இருக்காய் .?

”என்ட Phone. என்ட WhatsApp. என்ட data? உனக்கென்ன?

அடிக்கடி WhatsApp. வந்து வந்து போறாய்.நல்லதுக்கு இல்லடி"

”நான் WhatsApp. வருவேன் இருப்பேன் பாய் போட்டு தூங்குவேன்.என்ன செய்வாய்”

”Last seen காட்டாம வச்சிருக்காய்”

”ஓம் நீ இப்படியே கேட்டுட்டு இருந்தா எல்லாம் nobody போடுவேன் இனி ”

”அவ்வளவு திமிரா உனக்கு? எதுக்கு Daily Profile மாத்துறாய்? Daily Status போடுறாய்.விதம் விதமா Sticker Download பண்ணி வச்சிருக்காய். Good Morning, Good Night எல்லாம் Stickers லதான் வருது.
யாருக்காக செய்றாய் இதெல்லாம் ”

“நான் அப்படித்தான் இருப்பேன். இஷ்டம்டா இரி இல்லாட்டி Block. பண்ணிட்டு போ”

அந்தளவுக்கு வந்துட்டியா நீ”

”நான் Group ல இருக்கேன்டு சொல்லிட்டு இருக்கேன். நீ தேவல்லாம பேசிட்டு இருக்காய் ”

அப்படி என்னதான்டி Group. அது? ”

இந்தா பாரும்மா Sri Lanka Pen club மா”

ஓஹ்...Sorry டி செல்லம் ”

# காதல் (பத்தி)

மஷூறா சுஹூறுத்தீன்
மருதமுனை

காதலினால் வாழ்கிற திவ்வுலகம்.காதலினால் ஆள்கிறதிவ்வுலகம்.காதலினால் மாள்கிறதிவ்வுலகம்.
ஆயின் காதலினால் ததும்பு கிறதிவ்வுலகம்.உலகம் ஒரு கிண்ணமாகவிருந்தால் அதனுள் ததும்பும் மதுவே காதல்.உலகின் அனைத்து உயிரிகளுமே காதலைப் பருகுவதால் கிண்ணம் வழிந்தோட வாய்ப்பில்லை.
காதலே உயிர் நாடி.

இறைவனும் காதலிக் கிறான் தன் படைப்பினங் களை.இறைவன் மீதுள்ள காதலால்தான் நாம் இறை வனைத் தொழுகிறோம்.
அடாத துன்பத்தின்போது அவன் காலடியில் விழுகி றோம்.

கருவாயிருக்கும்போதே தாய் தன் சிசுவைக் காதலி க்கவாரம்பிக்கிறாள்.உயிருள்ளவரை அது படர்கிறது.
குழந்தைகளும் பெற்றவ ர்களை உடன் பிறப்புகளை உற்றாரைக் காதலித்து மகிழ்வெய்துகின்றனர்.

அது பாசம் என்று பெயர் பெறுகிறது.
ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னைத்தானே காதலிக்கிறான்.தனது முகத்தை,உடலை,ஆற்றலை, நடையுடை பாவனைகளைக் காதலிப்பதாலேயே வாழ்வில் பற்றுக் கொள்கிறான்.

மனிதன் உயர் திணைக ளை மட்டுமல்ல,அஃறிணை களையும் காதலிக்கிறான்.
ஆதலினால்தான் தன் செல்லப்பிராணிகளின் பிரி



வில் நொந்து போகிறான்.தான் வளர்த்த பூஞ்செடி கொடிகள் சிதைந் தாலும் அவனது காதல் மனம் கசிகிறது.

முகமறியா மனிதனுக்காய்க்கூட உருகுகிறதே நமதுள்ளம்.
அதுதான் மனிதநேயம் என்ற பெயரில் உயிர் வாழும் காதல்.எங்கேயோ இடமறியாத் தடத்தில் முகமறியாதவனின் துயர் கண்டு துவள்கிறாமே.இது காதலின் உயிர்ப்பல்லவா?

வெளியே சொல்ல முடியாத ,உணர்வைப் பிரதிபலிக்க முடியாத காதலே உலகில் ஏராளம்.
எந்தப் பாசிச் சாயத்தாள் கொண்டும்,காரம் அமிலம் உணரமுடியாதது காதல்.
காதலென்பது உணர்வுக ளின் இரசாயன மாற்றம்.

காதலால் உள்ளம் பண்படுகிறது.
புளகாங்கிதமடைகிறது.வரட்சியான வாழ்வுசெழிப்பதாய் பிரம்மை ஏற்படுகிறது.காத லுக்கு உயர்வு தாழ்வில்லை.நிறமில்லை.
வெளித்தோற்ற மாயம் இல்லை.

அழகான வாலிபன் அவலட்சணமான பெண் ணை காதல் செய்து மணக்கிறான்.ஆயின் அவனது காதல் புறத்தோற்றம் சாராதது.உணர்வுசார்ந்தது.ஆண் பெண் காதல் தவிர வேறெதுவும் காதலாக நம் கண்களுக்கு

தோறன்றுவதில்லை.ஆண்பெண் காதலில் அழகிருக் கிறது.சுவாரஸ்யமிருக்கிறது. ஆபத்துமிருக்கிறது. முறையோடு நின்றால் அழகு அரசோச்சுகிறது.உலகமே அழகாய் தெரிகிறது.முறை யற்ற ஆண்பெண் காதலால் உலகம் அவலட்சணமாகிறது.

காதலிப்பவன் அடிக்கடி கண்ணாடி பார்த்துக் கொள்கிறான்.தன்னை அழகாக மெருகூட்டிக் கொள்கிறான்.சென்ட் பூசிக் கொள்கிறான்.பெண்ணாயின் அழகுசாதனப் பொருட்களால் காலம்நகர்த்துகிறாள்.தானாக சிரித்துக் கொள்கிறாள்.

விடலைப்பருவத்துக் காதலெல்லாம் படலைவரைதான்.அது காதலல்ல.எதிர்ப்பால் கவர்ச்சி.அது ஆரம்பமான வேகத்திலேயே கருகியும் விடுகிறது.அவமானச் சின்னத்தோடு நீதிமன்ற வாசலில் காத்திருக்கிது முதிராக் காதல்..பெற்றவர்களே ஜாக்கிரதை.

.நதி அலையைக் காதலிக் கிறது.தன்னைக் கடக்க விடாமல் கட்டுக்குள் வைத்திருக்கிறது .வான், நிலவைக் காதலிக்ககிறது.ஆள்கிற காதல் அற்புதமானது.மீன் நீரைக் காதலக்கிறது.கரை வந்தால் தற்கொலை செய்கிறது.

விருட்சங்கள் காற்றைக் காதலிக்கின்றன.காற்றைக்கண்டால் மரங்கள் கும்மாளமிடுகின்றன.

காதலினால் ததும்புகிறது இவ்வுலகம்.அதில் ஒரு மிடறேனும் பருகிவிடுங்கள்.அல்லாவிட்டால் உங்கள் பிறவிக்கே அர்த்தமில்லை. ஆதலினால் காதல் செய்வீர். காதலே உலகின் அத்திவாரம்.


## காதி கோடுகளும் பெண்களின் சீரழிவும்

றுஷ்தா - காத்தான்குடி

உடுக்கை இழந்தவன் கை போல அவளது வாழ்க்கை கண்ணீரும் கம்பலையுமாகக் கழிந்து கொண்டிருக்கிறது.வாழ்வில் தனக்கென எதையுமே மிச்சம் வைக்காது தன் மொத்த வாழ்க்கையையும் தன் குடும்பம் மற்றும் துணைக்காய் அர்ப்பணித்து எல்லாவற்றையும் இழந்தவளாய் தனக்கேற்பட்ட அநீதிகளை நினைத்து இரு கைகளை இறைவனை நாடி நீட்டியவாறே பொழுதுகளைக் கழிக்கிறாள்.
சந்தோசமாகக் கழித்த பொழுதுகளில் திடீரென புயல் காற்று அடித்தது போல் நடந்தது அன்றைய சம்பவம்.
‘என்னஙக! ஏன் நீங்க இப்டி குடிச்சி குடிச்சி உடம்ப பாழாக்குறீங்க.நமக்கு பிள்ளைகள் இருக்கு.அதுகளும் இப்படி உங்கள பாத்து பழகினா என்ன செய்ற?உழைக்கிறத எல்லாம் இதுல கொட்டியே குடும்பம் நடுத்தெருக்குப் போயிடும்’ என்றாள் ஆமினா.
ஆமீனாவின் கதையைக் கேட்டதும் பொங்கிய நிஸாம் “உனக்கு சொல்ற விளங்குறல்லயா? என்ட காசு நான் குடிப்பன். என்ன வேணும்னாலும் செய்வன். அதக் கேட்க உனக்கு உரிமையில்ல. புடிச்சா வாழு. இல்லாட்டி வா காதி கோட்டுக்குப் போவம் “ என்றான் சர்வ சாதாரணமாக.......
‘இந்த மனிஷன நான் கட்டிட்டு பட்ற பாடு. எல்லாம் என்ட தல எழுத்து“ புலம்பிக் கொண்டு போனாள் ஆமினா.
இப்படியே குடியும் குடித்தனமுமாக நாட்கள் நகர......
ஒரு நாள் திடீரென நிஸாம் ஆமினாவிடம் “உன்ட நக எல்லாத்தயும் தா. எனக்கு வேணும்’என்றான். அவளும் “எதுக்கு நக? எனக்கு எங்க உம்மா, வாப்பா தந்தது. உங்களுக்கு ஏன் தரணும்? நமக்கு பொம்ள பிள்ளைகளும்

இருக்கு. அதுகள்ட எதிர்காலத்துக்கு வேணும். நீங்களும் உழைக்கிற எல்லாத்தயும் குடிச்சே அழிச்சிட்டிங்க. நான் தரமாட்டன்“ என்றாள் விடாப்பிடியாக.....

இதைக் கேட்ட நிஸாம் கோபத்தில் இரண்டு அறை விட்டு



அவளை வெளியே தள்ளி பூட்டி விட்டான்.ஆமினாவின் கண்ணம் வீங்கியவளாய் அழுது கொண்டே தன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தன் காக்காவிடம் போய் நடந்த எல்லாவற்றையும் கூற அவர் ஆவஷத்தோடு வந்து நிஸாமை இழுத்து அடிக்க பிரச்சினை முத்திவிட்டது.

‘இனி சரி வரா பிள்ள. நாம நாளைக்கு காதி கோட்டு போய் முடிவு கட்டுவம். அதுவரை இஞ்ச இரு நீயும் பிள்ளைகளும். இந்த குடிகாரன்ட கையால அடி வாங்கி வாழ்றத பேசாம தனிய வாழ்ந்துடலாம் என்றார் ஆமினாவின் காக்கா.

மறுநாள் காலை...

ஆமினாவும் காக்காவும் போய் காதி நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். காதியார் அஹமது மரைக்காரும் வழக்கை விசாரணை செய்ய நிஜாமை அழைத்துக் கேட்ட போது, ‘இவள் என்னோட ஒத்துப் போறாளில்ல. உழச்சி கொடுத்தாலும் போதா எங்காள். எதுக்கெடுத்தாலும் சண்ட புடிக்காள். இவளோட வாழ ஏலா“ என்றான்.

இதைக் கேட்ட ஆமினா,“இவரு குடிச்சிட்டு அடிக்கார் சேர். என்ட நக நட்ட எல்லாம் கேக்கார் சேர்.இதான் சேர் உரேய பிரச்சின’ என்றாள்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு காதியார் “வாழ்க்கைல எல்லாம் வாரான் புள்ள. புருஷன் கேட்டா கொடுக்குறானே! உனக்கு உழச்சிதாரான் தானே! என்றார். அவரும் ஆண் சார்பாக நின்று கொண்டு.....

இதென்ன தீர்ப்பு? ஆம்பள குடிச்சிட்டு வந்தா பொம்பள எல்லாதயும் அவனுக்கு கொடுக்கணுமா? ஒன்டும் வேணாம். தங்கச்சிய இவன்ட இருந்து கழட்டி விடுங்க“என்றார் ஆமினாவின் காக்கா.

“அப்ப அவகளுக்கு வாணாட்டி பஸஹ செய்யட்டும். நான் தலாக் சொல்ல மாட்டன். என்றான் நிஸாம்.

நாட்களும், வருடங்களும் இப்படியே கடந்தோடின.

இரண்டு வருடங்களுக்குப் பின்,

ஆமினா பஸஹ் வைக்க சம்மதித்து, இருவரும் பிரிந்தனர். பிள்ளைக்கு மாதாந்தம் ரூ.3000.:- தீர்த்த காதியார், பெண் தரப்பு நிஸாமை வேண்டாம் என்று கூறியதால், கட்டிய தாலி முதல் அனைத்தையும் ஒப்படைக்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இப்படியே நாட்களும், காலங்களும் கடந்து போனது. பிள்ளைகளுக்கான செலவுகளும் அவன் கட்டவில்லை.

இதற்காய் காதி நீதிமன்றம் ஏறியே வெறுத்து விட்டது ஆமினாவுக்கு. அவன் மறு திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை நகர்த்த, ஆமினாவின் வாழ்வை எண்ணி, சதா கவலையில் அவளது காக்காவும் மூழ்க, அவளும் பிள்ளைகளை வளர்க்க படாத பாடு பட, இன்னொரு மறுமணமும் செய்து கொள்ள வழியின்றி பிள்ளைகளின் எதிர்காலம் பாழாய்ப் போகும் என எண்ணி, தனிமைமில் காலத்தைக் கழித்தவளாய் வேறு வழியின்றி இறைவனிடம் பொறுப்புச் சாட்டியவளாய் சோதனைகளை சகித்துக் கொண்டு தன்னம்பிக்கையோடு வாழ்வை கழிக்கிறாள் ஆமினா.........

## இன்னும் ஞாபகம் இருக்கிறது

சம்சுதீன் ஸிபானா
சம்மாந்துறை.

இளமைக்காலங்கள் வாழ்வின்
வண்ணங்கள்
முதுமைக்காலத்தைஅழகாக்கும்
எண்ணங்கள்
இனிக்கும் நாட்களவைமணக்கும்
பூக்களவை
தணிக்கும் தாகமதைபோக்கும் சோகமதை

இன்பத்தை கூட்டிதுன்பத்தைஓட்டுபவை
சந்தம் சேர்க்கும் சுகந்தம் கொடுக்கும்
இதயம் நிறைந்திருக்கும் உதயம்
நிதமளிக்கும்
அன்புமணித்துளிகள் அருமைபனித்துளிகள்

மறக்க இயலாதவாழ்வின் கல்வெட்டு
சிறந்தசிற்பமாகமனக்கோயில் குடியிருக்கும்
கண்ணின் ஓரத்தில்
கண்ணீரைதுளிர்த்திடுமே
திண்ணம் நமக்களித்துபன்னீரைத்
தெளித்திடுமே

திரும்பகிடைக்காதசொர்க்கநாட்களவை
அரும்பும் மனச்செடியில் மணக்கும்
பூக்களவை
இன்னும் ஞாபகம் இருக்கிறது

## ஹைக்கூ

ஷர்ஜிலாபர்வீன் யாகூப்
கம்பம்

வீட்டுக்குவீடு
கொடி
தெருமுனைக்கொடி
கம்பத்திற்குகீழ்
நடைபாதைவாசி

பறவையைவிரட்டியகல்
கீழேவிழுந்தது
கூடு(கூண்டு)

செருப்பைபிடித்து
கொண்டசகதிவீடுவரை
நடனநடை

நடுக்கடலில் மாறும் படகு
தீவுதிட்டில் தவிக்கும்
அகதியின் பயணம்

எறிந்தஉணவுதட்டு
விடுதலைபெற்றஒற்றை முடி
வட்டதட்டு
வரைந்துக் காட்டுகிறாள்
பசியைமகள்



# MEMBERS OF SRI LANKA PEN CLUB

| S N | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | MASHOORA SUHURUDEEN | MARUTHAMUNAI | AMPARAI |
| 02. | AR.ZOOFA | MARUTHAMUNAI | |
| 03. | MHM.IMTHIZA | MARUTHAMUNAI | |
| 04. | SAHABDEEN YASMINE IZZATH | MARUTHAMUNAI | |
| 05. | S. AKEELA | PERIYANEELAWANAI | |
| 06. | JEZEEMA MUJEEB | PERIYANEELAWANAI | |
| 07. | MI. HAIRUNNIZA | PERIYANEELAWANAI | |
| 08. | RUSTHA SIRAJ | NATPITTIMUNAI | |
| 09. | RIFCA ANSAR | SAINTHAMARUTHU | |
| 10. | FATHIMA SAMSUDEEN | SAINTHAMARUTHU | |
| 11. | SITHY JEZEENA NISRIN | SAINTHAMARUTHU | |
| 12. | RASHEETHA NAFITH | SAINTHAMARUTHU | |
| 13. | AROOFA AHLA | KALMUNAI | |
| 14. | NAFEESA MAFAS | KALMUNAI | |
| 15. | MS. RISWANA BISMIN | KALMUNAI | |
| 16. | KAMILA KARIYAPAR | KALMUNAI | |
| 17. | MP.S.FARSANANA | NINTHAWUR | |
| 18. | ZEER FATHIMA NUSAIFA | NINTHAWUR | |
| 19. | AMNA SAZEETHU | NINTHAWUR | |
| 20. | RIYAZA M. ZAWAHIR | NINTHAWUR | |
| 21. | K.F.RIFKA | NINTHAWUR | |
| 22. | SAFNA LATHEEF | NINTHAWUR | |
| 23. | MS.RASMIYA | WARIPPATHTHANCHENAI | |
| 24. | AL.NASEEFA IQBAL | AKKARAIPPATTU | |
| 25. | AM.RAMSANA SHAMEEL | AKKARAIPPATTU | |
| 26. | SF.NAAZ | AKKARAIPPATTU | |
| 27. | RAMEES NISHA | SAMMANTHURAI | |
| 28. | MI.F.INSHIRA | SAMMANTHURAI | |
| 29. | HMM.MAHEESA BANU | SAMMANTHURAI | |
| 30. | SAMSUDEEN SHIFFANA | SAMMANTHURAI | |
| 31. | MJ.FATHIMA SUHAILA | SAMMANTHURAI | |
| 32. | MUFEETHA ASANAR | SAMMANTHURAI | |
| 33. | ML.FATHIMA FARSANA | IRAKKAMAM | |
| 34. | SH.MUMTHAJ BEHAM HAMEED | OLUWIL | |
| 35. | MS.RAMSIYA | VARIPPATHTHANCHENAI | |
| 36. | F.SABRA ILMUDEEN | ADDALAICHENAI | |
| 37. | SL.F.FASEENA | PALAMUNAI | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | NM.AARIFA | ERAVUR | BATTICALOA |
| 02. | Dr,JALEELA MUSAMMIL | ERAVUR | |
| 03. | MH.RISANA (REESA HANI) | ERAVUR | |
| 04. | MH.JIFFRIYA | ERAVUR | |
| 05. | SEINUL ABDEEN NAZEERA | ODDAMAWADI | |
| 06. | SHABEENA M IBRAHIM | ODDAMAWADI | |
| 07. | F. HAKEEMA AMEENUDEEN | ODDAMAWADI | |
| 08. | FAHMIYA SHAREEF | KATTANKUDY | |
| 09. | HAJARA KALEELURRAHMAN | KATTANKUDY | |
| 10. | AF.F.SHUKRA | KATTANKUDY | |
| 11. | MS.F.RISKA | KATTANKUDY | |
| 12. | MI.F.RUSTHA | KATTANKUDY | |
| 13. | JANEERA MUHAMED JALEEL | KATTANKUDY | |
| 14. | JESMIN RAMEES | KATTANKUDY | |
| 15. | MUFLIHA FIRTHOUS | KATTANKUDY | |
| 16. | AJEERAH KALEELTHEEN | KATTANKUDY | |
| 17. | SM.F.FAHMIN | MANJATHTHODUWAI | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | MARLIYA ZAQKAB | TRINCOMALEE | TRINCOMALEE |
| 02. | INUL KATHEEJA | TRINCOMALEE | |
| 03. | S.FAIZA ALI | KINNIYA | |
| 04. | ABDUL ASAN ANEESA | KINNIYA | |
| 05. | LIYANA MUSATHIK | KINNIYA | |
| 06. | RAJULA BEGAM UWAIS | KINNIYA | |
| 07. | SITHY SAFEENA BAITHULLA | MANJOLAI | |
| 08. | HF.ROSANA RASEEM | MOOTHUR | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | SIMAYA A CADER | ALUPPOTHA | BADULLA |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | S.WAFEERA | COLOMBO | COLOMBO |
| 02. | VASEELA SHAHIR | COLOMBO | |
| 03. | SITHY JEREENA CAREEM | DEHIWALA | |
| 04. | SUHAITHA A KAREEM | WELLAWATHTHA | |
| 05. | AC.JAREENA MUSTHAFA | WELIVITA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | SU.KAMARJAN BEEVI | HUNUPPITTIYA | GAMPAHA |
| 02. | RAMEENA IYOOB | ENDERAMULLA | |
| 03. | RAMEESA YASEEN | NEGOMBO | |
| 04. | LAILA AKSHIYA | MORATUWA | |
| 05. | FAZMINA RAZICK | KAHATOWITA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | MUF.HASSANIYA | DARGA TOWN | KALUTHARA |
| 02. | FARHANA ABDULLAH | MAGGONA | |
| 03. | ASHA LAFEER | MAGGONA | |
| 04. | SAHLA MILFAR | MAGGONA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | SIFANA SANOON | SIYAMBALAGASKOTUWA | KURUNEGALA |
| 02. | RIFAS RISLA | PANNAWA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | MJ.FATHIMA SAKEENA | GALLE | GALLE |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | SHAMEN NIZAMDEEN | KATUGASTHOTA | KANDY |
| 02. | S.ISMALIHA | KANDY | |
| 03. | AKEELA SHADIQUE | KANDY | |
| 04. | A.U.L.S. ARAFA UMMA | HEERESSAGALA | |
| 05. | JF.RIZNIYA | GELIOYA | |
| 06. | RISWANA JEINULABDEEN | MADAWALA | |
| 07. | AMNA IRSHAD | GAMPOLA | |
| 08. | MAHIRA HAMEED | GAMPOLA | |
| 09. | A.S.U. ASTHMA DEEN | GAMPOLA | |
| 10. | MAREENA ILYAS SHAFEE | HATARALIYATTA | |
| 11 | NALEEFA AZEEM AZEEM | VELAMBODA | |
| 12 | FASLUN SHIHANA MAKSHOOD | AKURANA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | LAREEFA BADURDEEN | GALEWALA | MATALE |
| 02. | HAMRA RIYAL | GALEWALA | |
| 03. | FAZMINA ANZAR | UKUWELA | |
| 04. | B.RABEENA BEGAM | UKUWELA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | ANEESA RAFEEK | KEKIRAWA | ANURADAPURA |
| 02. | SA.SAFANA BANU | KEPITHIGOLLEWA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | MC.JUWAIRIYA SADHIK | THAMBALA | POLANNARUWA |
| 02. | MR.FATHIMA FARZANA | GALLELLA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | HUMADHA A GAFFARA | MAWANELLA | KEGALLE |
| 02. | S.FATHIMA RINUSIYA | MAWANELLA | |
| 03. | NAZEERA HASSEN | KEGALLE | |
| 04. | FAHRIYA FAYIS | HEMMATHAGAMA | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | SHIHANA NOWFER | BALANGODA | RATNAPURA |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | NS.SATHEEKA RASLY | PUTTALAM | PUTTALAM |
| 02. | MH.SASNA FARWIN | KATPITY | |
| 03. | R,RUSDHA BANU | KATPITY | |
| 04. | MN.FATHIMA ZAKIYA | KOTTANTIVU | |

| S.No | NAME | TOWN | DISTRICTS |
|---|---|---|---|
| 01. | NUSHRA HASEEM | VAVUNIYA | VAVUNIYA |

| S.No | NAME | COUNTRY |
|---|---|---|
| 01. | RAJILA RIJWAN | INDIA |
| 02. | SARJILA YAKOOB | INDIA |
| 03. | RAFEEKA BALKEES | INDIA |

# Sri Lanka Pen Club இன் படைப்புகள்






மஷூரா சுஹூறுத்தீன்







ஷாமென் நிஸாம்டீன்






என்.எம் ஆரிபா






லைலா அக்ஷியா









முஸ்லிம் பெண் எழுத்தாளர்
மாநாடு- 2021
@ நிந்தவூர் தோம்புக்கண்டம்





கணினி வடிவமைப்பு - Designed By Vince Graphics - 075 69 57 004